ஆனந்த போதினி

பிப்ரவரி, 1927

J2
m211, N26AG
N27.1;11
169822




977

...ர்களின் வா...
...யாய் இரவிற் செல்...
...த்தால் ஈசுவர நாமத்தை...
...ருவர் அவனுக்குத் து...
...தையைக் கடந்து அவன் ...
...வமே. ஈசுவர உபாஸனைய...
... ஒரு வேளை முடியினும் அது...
...ன பயனிலேயே யன்றி வேறில்லை. ...
... நாஸ்திகர்களாய் தூஷிதம் செய்து ஆயு...
...றனர். தீராச் சந்தேகமுள்ளவன் ஸதா...
... கடவுளையும் அவருடைய ...
... ...ந்தேறமாட்டான். ஆ... ...
... நம்பிக்கை வைத்து ஸதா அ...
...வோம்.

***

## விஷய அட்டவணை


1. ஆநந்த தரிசனம் ... 515
2. கிரேட்பிரிடன் இந்தியாவிற்கு அளித்த வாக்குத்தத்தங்கள் ... 519
3. சென்ற மாதம் ... 522
4. குழந்தைகள் பக்கம்—எங்கள் வீட்டுக் குருவி ... 525
5. பிரபஞ்ச தரிசனம்—செஞ்சித் கோட்டை ... 527
6. மதிப்புரை ... 530
7. கிறிஸ்துவர்களான ஹிந்துக்கள் ... 532
8. பழமொழிக் குறிப்புகள்-அன்பு ... 534
9. மகா சிவராத்திரி விரதம் 539
10. சென்றுபோன நாட்கள்-ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ண தாஸ ... 540
11. சிறுமியர்க்கான 100 போதனைகள் ... 543
12. கவிதாவிலாஸம்-நல்...
13. பெரியாரின் மொழிகள் ... 547
14. பாலபோஷண மார்க்கங்கள் 549
15. நட்பு ... 551
16. விகடப் பிரதாபன்-காலத்தின் ஓட்டத்திலே நாட்டம் ... 554
17. மாதர் மனோரஞ்சிதம்—ஸுமதி சரித்திரம் ... 558
28. ஒரு விக்ஞாபனம் ... 561
19. விநோதக் களஞ்சியம் ... 562
10. பூர்வகாலத்து அரசர்களின் போக்கு ... 564
21. உதாரகுணத்தின் உன்னதம் 566
22. எங்கே ஆநந்தம் காணப்படும் ... 569
23. சில பதங்களின் குறிப்பு ... 570
24. மந்திரவாதியால் ஏமாற்றம் 571
25. பணச் செருக்கும் பிறவிக் குணமும் ... 578


"ஆநந்த குண போதினி" அடியில் கண்டவர்களிடம் கிடைக்கும். அவர்களிடம் சந்தாவைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு எமக்கு எழுதினால் நாங்கள் இங்கிருந்து மாதாமாதம் சஞ்சிகைகளை நேரே அனுப்பிக் கொண்டு வருவோம்.

லக்ஷ்மண் பிரசாத் அண்ட் கம்பெனி
புக்ஸெல்லர்ஸ் & பப்ளிஷர்ஸ்
புதுச்சேரி.

ஜெனரல் நியூஸ் ஏஜென்ஸி,
ஈவினிங் பஜார், மதுரை.

டி. வெங்கோபன்,
15, அண்ணாசாஸ்திரி தெரு,
சைதாப்பேட்டை, வேலூ

### நமது நிரு

☞ ...த்திரிகையில் பிர...வோரும், புதிதாய் விஷயதா...கள் தெரிய ஆசிப்போரும், ... அடியில் கண்ட விலாஸத்தி... வேண்டும். வியாசங்கள் ...தாய் இருத்தல் வேண்டும்.

விலாசம் :— பத்திரா...

"ஆநந்த குண போ... பத்திரிகையின் சார்ப... ஆதவிய நிர்வாக ... குணபோதினி" ...தரன்ன வே... ...ஸ், 30... ...சாமித் தெரு, மதுரை.

---

ஓம் பரப்பிரம்மணே நம.

# ஆநந்தகுணபோதினி

...TICE 18 FEB

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான அநுபவ விநோத நீதிகள் நிறைந்த உயரிய மாதப் பத்திரிகை.


பத்திராசிரியர் :— திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.


"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.


கமலம்-1. Vol. 1. | சென்னை: அக்ஷய ஹூ மாசி மீ 1உ 1927-ம் ஹூ பிப்ரவரி மீ 12உ | இதழ்-11. No.-11.


## ஆநந்த தரிசனம்

"நம்பினோன் கைவிடேலனையே" என்று மனஸ்பூர்வமான நம்பிக்கையை எவன் பகவானிடம் வைத்து அவரைத் தியானிக்கின்றானோ அவன் விபத்தில் அகப்படான். பகவத் கிருபையால் அவனைப் பாதிக்க வரும் அபாயங்கள் உபாயமாகவே ஆகி அதி சீக்கிரத்தில் விலகிப்போகும். இந்த நம்பிக்கையுள்ளவர்களின் வாழ்க்கையே வாழ்க்கை. மற்ற வாழ்வு தாழ்வேயாம். தனியாய் இரவிற் செல்லுமொருவன் கனத்த இருளிற் பின்னடைந்து அச்சத்தால் ஈசுவர நாமத்தைத் தியானிப்பதும், தக்ஷணமே அவ்வழியில் மற்றொருவர் அவனுக்குத் துணை சேர அவர்களோடு நிர்ப்பயமாய் இருட் பாதையைக் கடந்து அவன் சென்று விடுவதும் பலருக்கும் பல முறை அநுபவமே. ஈசுவர உபாஸனையில்லாமல் எந்தக் காரியமும் முடிவு பெறாது. ஒரு வேளை முடியினும் அது முன்ஜன்மத்திற் செய்த நல்வினையின் பயனாலேயே யன்றி வேறில்லை. இதை அறியாமல் அநேக வாலிபர்கள் நாஸ்திகர்களாய் தூஷிதம் செய்து ஆயுள் காலத்தை வியர்த்தமாக்குகின்றனர். தீராச் சந்தேகமுள்ளவன் ஸதா துக்கத்தையே அநுபவிப்பான். கடவுளையும் அவருடைய ... ...ந்தேகிப்பவன் ஒருபோதும் ...ந்தேறமாட்டான். ... ஈசுவரனுடை... நம்பிக்கை வைத்து ஸதா அவருடைய திருவடிகளை ...வோம்.

***

211, 42686
427.1.11
164822

# ஆநந்த குண போதினி

"சுவரை வைத்துச் சித்திரமெழுது" சுவர் இருந்தாற்றானே எத்தகைய சித்திரமேனும் அதனில் எழுதலாம். அதனைப்போல உடலென்னுஞ் சுவர் இருந்தால் அதனில் எம்மத சித்திரங்களையேனும் அமைக்கலாம். எல்லா வைபவமும் உடலினாலேயே யன்றி வேறில்லை. உடலோ நிலையற்றதாக விருக்கின்றது. நாமோ தூங்குகின்றோம். நமனோ பின் பற்றுகின்றான்.

***

"ஆத்மாநாத்ம விவேகம் அவசியம்." மனிதர்களுக்கு இருக்கும் பெரிய களங்கம்—"தேகத்தை நாம்"—என்று நினைத்தலே. இக்களங்கத்தால் ஞானதிருஷ்டி தெரியாமற் போகிறது. குடையானது எப்படி சூரியனைத் தெரிய வொட்டாமல் மறைக்கிறதோ; அதுபோல், அநாத்மாவாகிய தேகத்தை ஆத்மாவாக எண்ணும் குற்றமானது ஞானக்கண்ணை மறைத்துவிடுகிறது. இந்தக் களங்கம் நீங்கினால் பிரகாச ஞானமுண்டாகும். ஆகாசத்தில் கருத்த மேகம் ஒதுங்கிப்போனால் நிலவு தெரிகிறதன்றோ? இதைப்போலவே தேகத்தை நான் என்று எண்ணும் அஞ்ஞானம் தொலைந்தால் பிரகாசஞானம் விளங்கும். இந்த ஞானக்கண்ணால் ஜனனமாகிற ஸாகரத்தின் முக்தியாகிய கரையைக் கண்டு கொள்ளலாம். ஆகவே ஒவ்வொருவரும் ஞானத்தை ஸம்பாதிப்பதில் திருஷ்டி வைக்க வேண்டும்.

***

"திருமாலுக் கடிமை செய்" என்று ஔவையார் கூறியுள்ளார். மகா விஷ்ணுவானவர் இகலோகத்தில் ஸகல சுகங்களையும் பரலோக ஸாம்பிராஜ்யத்தையும் அளிக்க வல்ல பரம கருணாநிதியானதால் அவருக்குத் தொண்டு செய்யும்படி ஔவை கூறுகிறார். நன்மை, புண்ணியம் முதலியன வெள்ளை யென்றும், தீமை, பாபம் முதலியன கருப்பென்றும் சில மதஸ்தர்கள் கூறுகின்றனர். அவ்வாறு நோக்குமிடத்து, திருப்பாற்கடலாகிய கிருபா ஸமுத்திரம் நன்மை நிறைந்ததா யிருக்கிறதாம். அதில் ஸ்ரீமந் நாராயணன் கருத்தமேனியுடன் பள்ளிகொண்டிருப்பதானது பக்தர்களைநோக்கி "ஹே ஜனங்களே! உங்களுக்காகவே இந்தப் பாற்கடலைப் படைத்திருக்கிறேன்; இதை வேறாக நினைக்க வேண்டாம்; என்னுள்ளத்தினின்று பொங்கிய கருணை வெள்ளமே இவ்விதம் வழிந்து இப்பாற்கடலாயிற்று என்று சொல்வதுபோல் இருக்கிறதாம். ஆதலின் லக்ஷ்மீபதியான, ஸ்ரீமந் நாராயணனைத் தினந்தோறும் இடைவிடாது போற்றி ஸகல ஐசுவரியங்களையும் அடையக்கடவோம்.

***

"பிரேமை"யின் பெருமையை ஒருவாறு வர்ணிப்போம். பிரேமையால் பகவானுடைய கிருபை யுண்டாகிறது. மனம் சாந்தியடைகிறது. பந்துக்கள் அகமகிழுகின்றனர். நேசர்கள் விஸ்வாசம் கொள்ளுகிறார்கள். மனுஷ்யன் பிரேமையிலேயே பிறக்கிறான். பிரேமையிலேயே வளருகிறான், ஸ்திரீ புருஷர்களாகிய தம்பதிகள் ஒருவர் மீதொருவர் பிரேமை பாராட்டி இணங்குவதால் [illegible] குழந்தையாகப் பிறக்கிறான். அப்போது அவனுடை[illegible]க்கொடி யென்று வைத்துக்கொள்வோ[illegible] படருகிறதற்கு [illegible]கவான் தாய், தந்தை யென்ற இ[illegible] நடுகிறார். அவ்விரண்டு கொம்புகளின் ஆதரவால் அது [illegible]து. பின்னர் ஸகோதரன், ஸகோதரி யென்ற வேறிரண்டு

169822

கொம்புகளைப் பகவான் போடுகிறார். அவற்றை யாதாரமாகக் கொண்டு அக்கொடி படர்ந்து, மனையாள், மக்கள் முதலிய கொம்புகளிற்றாவி முடிவில் பகவானையே நாடுகிறது. ஈசுவரன் மனுஷ்யனிடம் பிரேமையை உண்டாக்கி அதைப் பல வழிகளாலும் தம்மிடம் இழுத்துக்கொள்வதால் அவருடைய கருணை வியக்கத்தக்கதே. மனுஷ்யனுக்கு வேண்டிய சூரிய சந்திரர்களையும், விருக்ஷம் முதலியவைகளையும் படைத்த பகவான் அவற்றால் அவனுக்கு ஆசை யடங்காதென்றுணர்ந்து தாமே அவனிடம் ஆத்மாவாக இருந்து வஸித்து வருகிறார். இவ்வளவு மகோபகாரம் செய்த பகவானை நாம் மறக்கலாகாது.

***

"நல்ல பழக்கம் நாளாகும்." புதிதாய் ஒரு வழக்கம் செய்தால் அது நன்மையா தீமையா வென்று கவனியாமல் பழிப்பது சிலரது இயற்கை. இதன்றி ரகசியமாய்ச் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் அவிவேகிகளின் ஸந்தேகத்துக்கு ஆஸ்பதமாகிறது. முன்னாளில் ஸ்ரீ சைதன்யர் ஸ்ரீ வாஸரின் கிருகத்தில் சிறந்த பக்திமான்களுடன் சேர்ந்து கிருஷ்ண கீர்த்தனம் பாடி இரவெல்லாம் அவருடைய மகிமையைக் கூறிக் களித்தார். இதை வெளியே நின்று கேட்ட ஸாமான்ய ஜனங்கள் அந்தப் பக்திமான்கள் ரகசியமாய் அகிருத்யங்களைச் செய்கிறார்களென்றும், குடித்துக் கூத்தாடித் துன்மார்க்கிகளாய் இருக்கிறார்களென்றும் ஊரெங்கும் கூறித் திரிந்தனர். இதை யறிந்தும் பகவான் தமது பக்தர்களைப் பிரிந்துபோகும்படி கட்டளையிடவில்லை. தவறாய் நடக்கும் ஒரு சிலருக்கே அந்த அபவாதம் போய்ச் சேருமேயன்றி தமக்கு அதனால் ஒரு பழுதுமில்லை யென்று நினைத்து முன் போலவே ஸ்ரீவாஸரின் வீட்டுக் கதவை மூடிக்கொண்டு கிருஷ்ண கீர்த்தனம் பாடினார். குற்றமுள்ள நெஞ்சே குறு குறு எனும். நிஷ்களங்கமான ஹிருதயத்தினரோ ஒரு சிலரைக் குறித்த நிந்தையைத் தம்மைப் பற்றியதென எண்ணார்.

***

"பன்றிக் கெதிரில் முத்துக்களைப் போடாதே" என்ற பொருளமைந்த "Do not cast pearls before swine" என்ற ஆங்கிலப் பழமொழி யொன்றுண்டு. முத்துக்களின் பெருமையைப் பன்றிகள் அறியா. அதுபோல் அறிவுடையோரின் வார்த்தையிலுள்ள மேன்மையைப் பிடிவாத புத்தி கொண்ட அவிவேகிகள் உணரார். குருடனை அரசனைப்போல் விழித்துப்பார் என்றால் ஒருபோதும் விழிக்க மாட்டான். இப்படியே அறிவீனனை விவேகத்தை யடையும்படி அவன் தவறுதல்களைத் தெரிவித்துத் திருத்திக்கொள்ளும்படி வேண்டினும் அவன் அடையமாட்டான். மழை வருஷித்தால் பலனுண்டென்பது நிச்சயம். ஆயினும் அம்மழை மண்ணிற் பெய்யாமல் கல்லில் பொழிந்தால் என்ன பயனுண்டாகும்? இது மழையின் குற்றமோ? கல்லின் குற்றமோ? அதுபோல் மகா மேதாவிகளின் பிரஸங்கமானது புத்திமானுடைய செவியிற்பட்டால் விவேகமென்னும் பயிர் தழைக்கும். புத்தி யில்லாதவனுடைய செவியிலே பிரஸங்கமாரி பொழிந்து பயனென்ன? ஒருபோதும் அவனுடைய அவிவேகம் நீங்காதென்றபடி.

***

"ஓ பிரியமுள்ள பகவானே!" கொஞ்சமும் பயமில்லாத சிறு குழந்தைகளாய் உம்மைக் கூப்பிடுகிறோம். உமது குணாதிசயங்க ளின்னதென்று

தெரியாமலே கெஞ்சுகிறோம். உமது வல்லமை தெரியாமலே எங்கள் உள்ளத்தை மறைக்கிறோம். உமது இரக்கம் தெரியாமல் பயப்படுகிறோம். நூதன நூதனமாகிய அகிர்த்தியங்களை நாங்கள் செய்து பிறகு உம்மை நினைத்துக் கலங்குகிறோம், ஆகிலும் உமது கடமையை நீர் செய்கிறீர். உமது பேரில் எள்ளளவும் குற்றமில்லை. எங்களிடத்தில் அணுவளவும் சுத்தமில்லை. ஸகல லோக ஜீவதயாபரனே! உமது சிருஷ்டிக்குள் ஓர் அணு மாத்திரமாகிய எங்கள் குற்றத்தை மன்னித்து எங்களுக்குத் தேவரீர் அளித்திருக்கிற ஞான விளக்கைத் தூண்ட வேண்டுகிறோம். ஓ சர்வ வல்லமையுள்ள தந்தையே! உமது லக்ஷண மேதுமற்ற எங்களிடத்தில் உமது வாத்ஸல்யத்தை பரிபூரணமாக வையும். எங்களுடைய எண்ணத்தின்படிக்கல்ல; உமது திருவுளத்தின்படியே பிரஸாதிக்கக் கடவீர். உமது ஆதரணைக்குள் இருக்கும் எங்களை அரவணைத்தருள்க. பகவானே! நீர் அரூபியாயிருக்கின்றீர்; நாங்களும் குருடர்களாயிருக்கிறோம். எப்படி யுமது சேவையைக் காண்பது? ஓ கருணைக் கடலே! அருள் வள்ளலே! குணக்குன்றே! எங்களையும், எங்கள் ஸகோதரர்களையும், எங்கள் தாய் நாட்டையும் ஆசீர்வதிக்க வேண்டுகிறோம். உயிருக்குயிரே! உம்மை விட்டு ஒருகாலும் அகலோம். எங்களையும் உம்மில் நின்று ஒருகாலும் பிரிக்க மாட்டீர். என்றென்றைக்கும் எம்முடையவும், எங்களைச் சூழ்ந்தவர்களுடையவும் சித்தங்களைச் சுத்தப்படுத்தி உமது சேவைக்கு அடிமை யாக்கிக்கொள்ளப் பலவாறு எங்களுள்ளத்தில் ஸதா காலமும் பிரார்த்திக்கிறோம்.

---

பின்வரும் கடிதங்கள் வந்தனத்துடன் மறுக்கப்பட்டன :—(1) "சந்தியாவதி." (2) வெற்றிக்குரிய வழிகள்—நீண்ட வியாசத்திற்குப் பத்திரிகையில் இடமில்லை. (3) ஆநந்தம். (4) விஸ்வாத—கந்தசாமி சம்பாஷணை—தற்புகழ்ச்சியாதலின் பிரசுரிக்கக் கூடவில்லை. (5) நமது பெண்களின் முக்கிய கடமை—இது பழய விஷயம். (6) ஓர் விண்ணப்பம். (7) ஹாஸ்யத் துணுக்குகள்—இன்னும் திறமையாய் எழுதப் பழக வேண்டும். (8) ஹிந்து மதஸ்தாபனம். (9) கோபம்—இதில் நீதி வேண்டாம், அநுபவமாக எழுதுக. (10) புது மணப் பெண்ணிற்கான புத்திமதிகள்—இக்கருத்துகள் ஏற்கெனவே பத்திரிகையில் வந்துவிட்டன. நமது அன்பர் பத்திராசிரியர் எழுதியவற்றையே தழுவி வரைந்திடாமல் வேறு வழியில் சுருக்கி எழுத வேண்டும். (11) வாசகசாலை விளம்பரம். (12) விரத ஐய வினாக்கள். (13) எனது உள்ளக்கிடக்கை. (14) விநோதங்கள். (15) சிறு பையன் கதை—மறு பாதியையும் பார்க்க வேண்டும். (16) ஜீவகாருண்யம். ப-ர்.

***

**மதிப்புரை:**—(1) திவான் லோடபடசிங் பகதூர், (2) ராஜ ராஜம், (3) ஞானசௌந்தரி—இவைகளின் மதிப்புரை அடுத்த ஸஞ்சிகையில் வெளியாகும். ப-ர்.

காலண்டர் வரவு :—இரங்கூனில் வெகு காலமாய் பிரக்யாதிப் பெற்றிலங்கும் நவீன கதா புஸ்தகசாலையாரின் சிலாக்யமான காலண்டரும், அவர்கள் ஏஜண்டுகளாயிருந்து விற்பனை செய்யும் "நவரஸம்" என்ற ஔஷதத்தின் காலண்டரும் அன்புடன் வரப் பெற்றுக்கொண்டோம். ப-ர்.

# ஆநந்த குண போதினி

அக்ஷய ௵ மாசி ௴ 1௳

## கிரேட்பிரிட்டன் இந்தியாவிற்கு அளித்த வாக்குத்தத்தங்கள்.

---

இந்தியாவிற்குப் பிரிட்டிஷார் அவ்வப்போது அளித்த வாக்குத்தத்தங்களையும், அதன் சார்பாய் ஏற்பட்ட சரித்திர பூர்வமான நடவடிக்கைகளையும் நமது ஞாபகத்திற்கு அடிக்கடி கொண்டு வருவது உத்தமம். நாம் இப்பொழுது அரசாங்கத்தினரிடம் கேட்கும் உரிமைகளுக்கு வெகுகால முதற்கொண்டே பாத்தியதை யுடையோமென்பதை இவ்வாக்குத்தத்தங்கள் ஒருவாறு விளக்கும். இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாக்ஷியானது அதன் ஆரம்ப காலத்தில் 'ஈஸ்ட் இந்தியா' கம்பெனியாரின் நிர்வாகத்தில் இருந்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் இராஜாங்கம் விருத்தியடைய ஆரம்பித்த பின்னர் ராஜாங்கச் சேர்க்கை விஷயமாக ஏற்பட்ட யுத்தச் செலவெல்லாம் முற்றிலும் இந்தியாவின் பண உதவியாலேயே வகிக்கப்பட்டது. ஈஸ்டு இந்தியா கம்பெனியின் ராஜபரிபாலன விஷயமாக இருபது வருஷங்களுக்கு ஒருமுறை பிரிட்டிஷ் பார்லிமெண்டு தனது விசாரணையை நடத்திக்கொண்டிருந்தது. இதுவானது அந்தக் காலத்திலிருந்த ராஜதர்ம நிபுணர்கள் இந்தியாவின்மீதுள்ள இங்கிலாந்தின் பொறுப்பையும் கடமைகளையும் பற்றிய உண்மையை யறியவும், பிரிட்டனின் அரசுமுறை இந்தியாவில் எப்படியிருக்க வேண்டுமென்று கவலையாய் ஆராய்ச்சி செய்யவும் ஸாதகமாயிருந்து வந்தது.

1833-ம் வருஷத்தில் முதல் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. அந்த வருஷத்தில் ஈஸ்டு இந்தியா கம்பெனியின் சட்டத்தில் கவர்ன்மெண்டு உத்தியோக விஷயமாக ஜாதி, மதம், நிறம் இவ்வித வித்தியாஸ மன்னியில் ராஜாங்க உத்தியோகங்களுக்குத் திறமையே தகுதியாக யிருக்கும்படி ஏற்படுத்தப்பட்ட ஒரு முக்கிய வசனம் அந்தப் பிரதிக்கினையின் இடையே சேர்க்கப்பட்டது. பிரிட்டிஷாரின் பெயர்வைத்து இந்தியர்களுக்கு அளித்த முதல் வாக்குத்தத்தம் இதுதான். அது பார்லிமெண்ட் ஆக்டில் சேர்க்கப்பட் டிருக்கிறது. மெக்காலே (Macaulay) என்பவர் இந்த முக்கிய வசனம் தயார் செய்தவர்களில் ஒருவராக இருந்ததால் தமது ஜீவகாலமுழுதும் அதன் நிமித்தம் பெருமை யடைந்ததாய்ச்

சொல்லியிருக்கிறார். மேலும், அந்தக் காலத்திலிருந்த ராஜதர்ம நிபுணர்களின் நீதியானது இங்கிலாந்தின் ஜனங்கள் அனுபவிக்கிற அவ்வளவு ஸ்வாதீனத்தை இந்தியர்களுக்கும் விசாலிக்கச் செய்ய வேண்டுமென்ற கொள்கையுடன் வெகு தெளிவாகவும் இருந்தது.

அதற்குப்பின் இருபது வருஷங்கள் கழிந்தன. 1853-ம் வருஷத்தில் முந்திய வாக்குத்தத்தமானது புதுப்பிக்கப்பட்டது. அப்போது ஜான் பிரைட் (John Bright) என்பவரும், ஸ்டான்லி (Stanley) என்பவரும், லார்ட் டெர்பி (Lord Derby) என்பவரும், ஈஸ்ட் இந்தியா கம்பெனி டயரெக்டர்களுடைய நண்பர்களும் ஐரோப்பியர்களுக்கு மாத்திரம் உத்தியோகங்கள் கொடுக்கப்படாமல் எல்லோருக்கும் தரப்படவேண்டுமென்று பலமாய்த் தூண்டினார்கள். இன்னும் அவர்கள் இங்கிலாந்தில் நடக்கும் பரீக்ஷைகளெல்லாம் இந்தியாவிலும் ஒருமிக்க நடக்கும்படி ஏற்படுத்த வாதாடினர். ஆனால் அது பயன்படவில்லை.

பிறகு 1857-ம் வருஷத்தில் சிப்பாய்க் கலகம் உண்டானது. அது அடக்கப்பட்ட பின்னர், பிரிட்டன் தேசத்தில் ராஜதர்ம நிபுணர்கள் இந்தியாவில் ராஜரீகம் இன்னவாறு இருக்கவேண்டுமென்று யோசிக்கும்படி மறுபடியும் கட்டாயப்படுத்தப் பட்டனர். இந்தியாவின் அரசியலானது கம்பெனியாரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது வெளிப்படுத்தப்பட்ட அறிக்கைப் பத்திரம் (Proclamation) விக்டோரியா மகாராணியின் பிரத்தியேக வேண்டுகோளின்பேரில் லார்ட் டெர்பி (Lord Derby) என்பவரால், ஒரு பெண்ணரசியார், பிரஜைகளாலான ஒரு கொடிய கலகத்திற்குப் பின்னர் தாம் எவர்களுடைய ராஜாங்கத்தை ஏற்றுக் கொள்ளுகின்றாரோ-அப்பேர்ப்பட்ட கோடிக்கணக்கான ஜனங்களுக்கெல்லாம் சொல்லுவதற்கு நன்றாய் உபயோகப்படும்படியான விதமாய் தயாளமாயும் பரோபகாரமாயும் மதசகிப்புள்ளதுமான பதங்களால் வரையப்பட்டது. அந்த அறிக்கைப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்களைவிட இந்தியர்களுக்கு அவ்வளவு திருப்தியானது வேறெதுவுமில்லை. விக்டோரியா மகாராணியாரை அந்த மாதுசிரோமணியார் காட்டிய இரக்கத்திற்காக இந்தியர்கள் அவரைத் துதித்தார்கள். ஈன்ற அன்னையினும் மேலாக மதித்தார்கள். பெண்ணரசி, பெண்ணரசி என்று பெருமை சொல்லிக் கொண்டார்கள். அந்த அறிக்கைப் பத்திரம்தான் இரண்டாவது வாக்குத்தத்தம். அது பிரிட்டிஷ் ஸ்தாபனங்களை இந்தியாவில் விசாலப்படுத்தவும், உண்மையிலேயே அவர்களுக்குச் சுய அரசு கொடுக்கிறதற்குமான வாக்குத்தத்தம். அது இந்திய 1833-ம் வருஷத்திய வாக்குத்தத்தத்தையும் உறுதி செய்தது.

மஹாராணியார் இந்தியா ராஜ்யத்திலுள்ள ஸ்வதேசிகளுக்கும், மற்றெல்லாப் பிரஜைகளுக்கும் தாம் கடமைப்பட்டிருக்கிற



தாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியர்கள் உண்மையிலேயே பிரிட்டிஷ் பிரஜைகளவ்வளவு ஸ்வாதந்திரிய உரிமைகளுடன் உண்மையான பிரிட்டிஷ் பிரஜைகளாக வேண்டுமென்பதும், இந்திய ராஜாங்கமானது ராஜாங்கமாகவே பரிபாலிக்கப்பட வேண்டுமென்பதும் அதன் முக்கிய லக்ஷ்யங்கள். அந்த அறிக்கைப் பத்திரமானது ‘இந்தியாவின் செழிப்பே நமது பலம், இந்தியா திருப்தியடைவதே நமது பாதுகாப்பு, அதன் நன்றியுணர்வே நமக்கு மேன்மையான வெகுமதி’ என்றும் முடிவுபெற்றிருக்கிறது. இது இந்தியாவின் மகா பெரிய சாசனம் என்று அழைக்கப் பட்டிருக்கிறது. இதுதான் இந்தியர்களுக்கு முக்கியமாய் வேண்டியது.

பிறகு 1877-ம் வருஷத்தில் விக்டோரியா மஹாராணியார் இந்தியா சக்கரவர்த்தினியாகப் பிரசுரிக்கப்பட்ட காலத்தில் லிட்டன் பிரபு என்பவர் மஹாராணியாரின் பெயர்வைத்து இன்னொரு வாக்குத்தத்தம் வெளியிட்டார். முந்திய அறிக்கைப் பத்திரங்களிலுள்ள வாக்குத்தத்தங்கள் யாவும் இதில் திருப்பச் சொல்லப்பட்டன. அதன்பின் 1887-ம் வருஷத்தில் நடந்த ஜூபிலி கொண்டாட்டத்தின்போது மறுபடியும் முன்புசெய்த வாக்குத்தத்தங்கள் புதுப்பிக்கப்பட்டன. மிஸ்டர் ஹெர்பட்பால் என்பவர் இங்கிலாந்தில் நடக்கிற பரீக்ஷைகளெல்லாம் இந்தியாவிலும் வைக்கப்பட வேண்டுமென்று பார்லிமெண்டில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து அதை ஒப்புக்கொள்ளும்படியும் செய்தார்.

இவ்விதம் ஏராளமாகப் பயபக்தியான வாக்குத்தத்தங்கள் செய்யப்பட்டதற்குப் பின்பு, ஸமீபத்தில் நடந்தேறிய ஐரோப்பிய மஹாயுத்தத்தின்போது இந்தியா புரிந்த மகத்தான சகாயங்களுக்காக அதற்குத் தகுந்த பிரதி பிரயோஜனத் திருப்தி உதவப்படுமென்றும் சொல்லப்பட்டது. இப்பொழுது 1929-ம் வருஷத்தில் ஒரு ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டு ராஜ்ய பாகங்கள் ஆராயப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுளது. இந்தியா தன்னுடைய பாத்தியங்களை வற்புறுத்த சக்தியற்ற தென்பது பார்லிமெண்டுக்குத் தெரிந்த விஷயமே. கடைசியாக, இவ்வாறான வாக்குத்தத்தங்கள் சித்திபெறுவதற்கு கிரேட் பிரிட்டனின் பெருங்கருணையோடு கூடத் தனது இடைவிடா முயற்சியும் அதற்கு உபபலமாய் இருக்க வேண்டுமென்று இப்போது இந்தியா தெரிந்துகொண்டு, விழிப்புமுகமாய் அதற்கான உத்தமப் பிரவர்த்திகளைச் செய்துகொண்டு செல்லுகின்றது. அது அடுத்த தலைமுறையிலாயினும் நிறைவேறுக.

# சென்ற மாதம்

**சமையற்றொழில்.** சமையற்றொழிலுக்குப் பிரான்சு தேசத்தில் நல்ல மதிப்பு உண்டென்றும், இங்கிலாந்தில் அது கேவலப் பிரவர்த்தியாய்க் கருதப்படுகிறதென்றும் "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையில் சில நிருபங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில ஸம்பிரதாயத்தில் சமைக்குந் தொழிலைக் கேவலமான வேலையாட்களிடம் விட்டுவிடப்படுகிறது. ஆங்கிலப் பெண்களுக்குப் பந்து விளையாடுவதிலுள்ள சிரத்தை பாக சாஸ்திரத்திலில்லை. பாரதவருஷத்திய அங்கனைகளுக்கோ அதுவே பிரதமமான பிராணாதாரமான தொழிலாகும். கணவனுக்குச் சமையல்செய்து போடுவதென்பது இந்தியப் பெண்மணிகளுக்கு ஏற்பட்ட முதல் வேலை. பர்த்தாவுக்குப் பணிவிடை செய்வதற்கான வழியிலேயே இந்திய நங்கையர்கள் எல்லா வகைகளிலும் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். பழய காலங்களில் காபி கிளப்புகள் இல்லாமையால் பாலும் வெண்ணெயும் நெய்யும் நயமான விலையிற்கிடைத்து அதைக்கொண்டு மிக்க ருசிகரமான பலவகைப் பக்ஷணங்களை நமது பெண்மணிகள் அடிக்கடி செய்துவந்தனர். இப்பொழுதோ எல்லாம் விலையேறிவிட்டதில், தெரிந்த ஒரு பக்ஷணத்தை மறுபடி செய்வதற்குள் அடுத்த மகாமகம் நெருங்கிவிடுகிறது! இந்த நிலையில் உயர்தரமும் அருமையுமான பக்ஷணங்களைத் தம் சிறுமிகளுக்குத் தாய்மார்கள் கற்றுக்கொடுத்துவைப்பதெப்படி? தாய்மார்களுக்குத் தெரிந்த பல பாகங்கள் அவர்களின் சிறுமிகளுக்குத் தெரியாமலே போய்விடுவது பெரிய நஷ்டம்! பழங் காலத்துப் பாட்டிகள் வெகு நேர்த்தியாக ஊறுகாய்கள் முதலியன போடத் தெரிந்திருந்தனர். அவர்களின் உயர்ந்த நைபாக முறைகளும் இப்போது மறையத் தொடங்கியிருக்கிறது. என்னதான் வீட்டில் கஷ்டப்பட்டுப் பக்ஷணங்கள் செய்தாலும், அதைவிட உயர்தரமாய்க் காப்பி ஹோட்டல்களில் கிடைப்பதால் வீட்டிற் செய்தவைகளின் மீது பலருக்குப் பிரியமிருப்பதில்லை. வீட்டுக் காபி நன்றாயில்லையென்று காப்பிஹோட்டலுக்கு ஓடுவோர் எத்தனை பேர்! எதையும் வீட்டிலேயே செய்து புசிக்கவேண்டுமென்ற வீர விரதத்தை நமது புமான்கள் கொள்ளவேண்டும். நமது பக்கத்தில் சமைக்கத் தெரிந்த ஆடவர்களுக்குப் பெண்களைவிட விசேஷ மதிப்புண்டு. நமது பெண்மணிகளுக்கோ சமையற்றொழில் உயிர்த்தொழிலாகும். நளன், பீமன் இவர்களும் பாக சாஸ்திரத்தில் பிரக்யாதி வகித்தனர். நமக்கு மேல்நாட்டு நாகரீகமும் வேண்டாம், சமைக்கும் தொழில் ஏதோ புதுத் தொழில் போல் கௌரவிக்கும் ஆபாஸமும் வேண்டாம். சமைக்கும் தொழில் தெரியாமலும் போகவேண்டாம். இங்கிலாந்தில் சமைக்கும் தொழிலைக் கற்பிக்க ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டிருப்பதுபோல் நமது நாட்டில் ஏற்படவும் வேண்டாம். நமது வீட்டு அடுப்பங்கரையே நமக்கு எல்லா பாகசாஸ்திரமும் கற்பிக்கும் பெரிய பள்ளிக்கூடமாகும். நாம் எதையும் வீட்டிலேயே செய்து உண்பது என்று தீர்மானித்துவிட்டால், நமது அடுப்பங்கரையேபெரிய ஸர்வ கலாசாலையாக இருந்து வெகு நன்றாகப் போதித்துக் கொடுத்து



விடும். நமது புராதன நாகரீகம் அநுஸரித்து வந்த கிரியைகள் யாவும் பரமோத்கிருஷ்டமானவையென்பதைத் தெரிந்துகொள்ளக் கடவோம்.

***

**மத நிந்தனை.** பூஜார்ஹரான நபிகள் நாயகம் பல பத்தினிகளைத் தமது பரிசுத்த ஜீவியத்தில் கொண்டிருந்தார். அவற்றை வேறு விதமாகப் பொருள்படுத்தி, நிந்தனைகளை அடுக்கி, பல மனைவியர் விவாகம் கூடாதென்றும் தெரிவிக்க வந்தது போல் நடித்து முற்றும் துவேஷமான வாக்கியங்களில் ஸ்ரீமான் ராஜபால் என்றவர் ஒரு நூல் வெளியிட்டதாகவும், லாகூரில் அதன் பொருட்டு 18-மாதக் கடுங்காவலும் 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதாயும் சமாசாரம். இவ்விதமாகவே கிறிஸ்துவப் புஸ்தக பிரசுர சங்கத்தார் இஸ்லாம் மத சம்பந்தமாயும், ஹிந்து மத சம்பந்தமாயும் அநந்தமான நிந்தனைப் பிரகடனங்களைப் பரப்பியுள்ளார். பொதுவாக மத நிந்தனையென்பதே தகாது. அதனால் உள்ள அற்ப சொற்ப மனத் தூய்மையும் பாழ்பட்டுப் போகவே நேரும். அவரவர் மதத்தை அவரவர் சிலாகித்துப் போற்றிக்கொண்டு அவ்வளவுடன் நிற்பது தான் அவரவர்க்கும் மரியாதையாகும். எல்லா மதங்களும் ஈச்வரச்சாயை பொருந்தியதே. அவரவர்க்கு அவரவர் குழந்தை தித்திப்பதுபோல், அவரவர்க்கு அவரவர் மதம் பெரிது. அதை மற்றவர் நிந்திக்கவேண்டாம்! யதார்த்த பக்தனுக்கு மத நிந்தனை செய்யப் பொழுதே இராது.

***

**"புதிய டில்லி"** டில்லியில் ஒரு பாகத்தில் நவீனமாய் நிர்மாணம் செய்யப் பெற்ற "புதிய டில்லி" எனும் இடத்தில் 1912-ம் வருஷ முதல் கவனம் செலுத்திக் கட்டப்பட்ட "கவுன்ஸில்-ஹவுஸ்" என்ற ராஜீய மாளிகையைச் சென்ற ஜனவரி மாதம் 18-ம் தேதியன்று ராஜப் பிரதிநிதி லார்ட் இர்வின் திறந்துவைத்தார். 'இந்த உன்னத மாளிகையில் நல்லறிவும் நியாய புத்தியும் குடியிருக்க வேண்டுமெனக் கோருவதாயும், அம்மாளிகையிலிருந்து, தேச சேவை செய்வோருக்குப் பகவான் அருள் பாலிக்க வேண்டுமென்றும்' சக்கரவர்த்திப்பெருமான் தமது ஆசிச் செய்தியை யனுப்பியிருந்தனர். இந்த மாளிகையின் நிர்மாணத்திற்கான பூர்வ சரித்திரத்தை நாம் கவனித்துப் பார்ப்பின், பிரிட்டிஷாரின் இராஜ தந்திர நிபுணத்துவம் நன்கு விளங்கும். அதன் குறிப்பை மட்டும் இங்கு தருகிறோம். 1904-ம் வருஷத்தில் இராஜப் பிரதிநிதியாகிய லார்ட் கர்ஸன் அரசாங்க நிர்வாகம் நேருக்கு நேராய் சுலபமாயிருக்கும் பொருட்டாக வங்காள மாகாணத்தை, கீழ் வங்காளம் மேல் வங்காளம் என்று இரு பாகங்களாகப் பிரித்தார். தங்கள் மாகாணம் இரண்டாகப் பிரிவினைப்படுவது தங்கள் ஒற்றுமையைச் சிதைக்குமென்று மகா மேதாவிகளான வங்காளிகள் கண்டுகொண்டுபெருங்கிளர்ச்சிசெய்தனர். அவ்விஷயமாய் இராஜப் பிரதிநிதியான லார்ட் ஹார்டிஞ்சு சக்ரவர்த்திப் பெருமானுடன் கலந்துகொண்டு மகுடாபிஷேககாலத்தில் பிரிவினைப் பட்ட வங்காள மாகாணத்தை முன்போல் ஒன்றுபடுத்திவிட்டு, அங்கிருந்த லெப்டினெண்ட் கவர்னரையகற்றி, ஒரு கவர்னரை அங்கு நிய

மித்துவிட்டு, அதுகாறும் அங்கு இருந்துவந்த இந்தியா கவர்ன்மெண்டைப் புதிதாக டில்லிக்கு மாற்றி, அது முதல் டில்லியையே இந்தியா கவர்ன்மெண்டின் தலைமை ஸ்தானமாக்கி, அதற்காகப் புதிய மாளிகையும் அமைக்கத் திட்டம்செய்தார். அந்த மாளிகைதான் இப்போது முடிவுபெற்றுத் திறந்து வைக்கப்பட்டதாகும். சுலபமாக நிர்வகிப்பதின் பொருட்டு லார்ட் கர்ஸன் வங்காளத்தைப் பிரித்த ராஜ தந்திர நுட்பம் வங்காளத்தை ஒன்றுபடுத்திவிட்டதில் நிறைவேறாதது போறக் காணப்படினும், அங்கு லெட்டினெண்ட் கவர்னருக்குப் பதிலாகக் கவர்னரே ஏற்படுத்தப்பட்டுவிட்டதனால், லார்ட் கர்ஸனின் 'சுலப நிர்வாக'க் கொள்கையும் இங்கு கைகூடி வரப்பெற்று, இன்னும் திறமையாக ராஜீய நிர்வாகம் நடத்தக் கூடியதாகவும் அமையலானது. அவ்விதமே வங்காளத்தில், அதாவது கல்கத்தாவில் இருந்துவந்த இந்தியத் தலைமை அரசாங்கம் வேறு இடமான டில்லிக்கு மாற்றப்பட்டு மற்றொரு புதிதான தனி இடம் ஏற்பாடானதில் 'நிர்வாகம் சுலபமாயிருக்கவேண்டும்'' என்ற லார்ட் கர்ஸனின் கொள்கையை இந்த டில்லி மாற்றமும் சித்திபெறச் செய்துள்ளது. லார்ட் கர்ஸன் மகா மேதாவி. அவர் கொள்கையையும் ஆதரித்து, பொது ஜனங்களின் பிரியத்திற்கு இணங்கியும் நடந்துகொண்டு சென்றுள்ள பிரிட்டிஷ் ராஜ தந்திர நிபுணத்வம் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். "புதிய டில்லி" ஓங்குக.

***

சீனாவில் குழப்பம் :—சீனர்கள் தங்கள் நாட்டில் உள்ள அந்நிய தேசத்தினர் அனைவரையும் வெளியேற்றிவிட வேண்டுமென்ற ஆக்கிரகத்துடன் பெருங் குழப்பம் செய்து வருகின்றனர். அதில் ஆங்குள்ள பிரிட்டிஷாருக்கு உதவியாயிருக்க இந்தியாவிலிருந்தும் சீனாவுக்குச் சேனைகள் போகின்றன.

***

டாக்டர் ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி அம்மாள் :—இம்மாது சிரோன்மணியார் சென்னைச் சட்டசபையின் உபதலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். பெண்மணிகளின் முன்னேற்றத்தில் மிக்க தாகம் கொண்டவர்களுக்கு இச் செய்தி அளவற்ற திருப்தியும் பூரிப்பும் நல்கும்.

---

## அன்பற்ற இடத்தில் நாய்க்கும் வேலையில்லை!

அவர்களிடம் அவ்வளவு மனஸ்தாபம் கோபம் எல்லாம்—அவர்கள் உண்மை யன்பினரென்று நம்பி விட்ட பேதமையால் தான். ஒரு அன்பும் அங்கு இல்லை யென்று தெரியவே எல்லா கோபமும் போய் விடுகிறது! பெற்ற தாய் காட்டும் அன்பில் குழந்தையின் சேஷ்டையும் துடுக்கும் அதிகம். அன்பற்ற மாற்றாந்தாயிடமோ குழந்தை தெய்வமே என்று அடங்கி ஒடுங்கிவிடுகிறது! அன்பால் தான் எல்லா கோபமும் சச்சரவும்-கடிதம் எழுதாமையுங்கூட.

# குழந்தைகள் பக்கம்

## எங்கள் வீட்டுக் குருவி

---

அம்மா! எதிர் வீட்டு சுந்தரம் தன் கையில் ஒரு குருவி வைத்துக்கொண்டு இருக்கிறான். அது அவனுடன் விளையாடுகிறது. அரிசியைக் கையில் வைத்தால் அது கொத்தித் தின்னுகிறது. அந்த மாதிரி எனக்கும் ஒரு குருவி வாங்கித் தா என்று ராமன் தன் தாயாரைக் கேட்டான். அதற்கு அவன் தாயார், பறக்கும் குருவியைப் பிடித்து விளையாடுவது பாவம் என்று சொன்னாள். எப்படி அம்மா பாவம் என்று ராமன் கேட்டான். அதற்குத் தாயார், உன்னை எவராவது பிடித்துப் போய் விட்டால் உனக்கு எப்படி இருக்கும்; நீ எவ்வளவு அழுவாய்; பயப்படுவாய்: எப்படியாவது அம்மாவிடம் ஓடிவந்து விடவேண்டும் என்று எண்ணுவாய் அல்லவா? அப்படித்தான் குருவியும் எப்படியாவது தப்பிப் பறந்துபோய்விட நினைக்கும் என்று சொன்னாள்.



இதற்குள் சுந்தரம் அழுது கொண்டே அங்கு வந்தான். அவனைப் பார்த்து ராமன் குருவி எங்கே என்று கேட்டான். அதற்கு சுந்தரம், குருவியின் கயிற்றை எப்படியோ மறந்து விட்டுவிட்டேன்; உடனே குருவி தப்பித்துக்கொண்டு பறந்து விட்டது என்று அழுது கொண்டு சொன்னான். குருவியிடம் கயிறு ஏது என்று ராமன் கேட்டான். அதற்கு சுந்தரம், குருவியின் இடுப்பில் ஒரு கயிற்றைக் கட்டியிருந்தேன்; அக்கயிற்றைக் கெட்டியாய்ப் பிடித்திருந்தால் குருவி பறந்துபோய் இருக்காது என்றான்.

அதைக் கேட்ட ராமன், இவ்வளவு தானா? குருவி உன்மேல் பிரியமாய் உன்னிடம் இருக்கவில்லையா? அது ஓடிப் போகாதபடி கயிறு கட்டியா வைத்திருந்தாய்? நம் மேலே ஆசையாய் நம்மிடம் தானாக இருந்தால் அல்லவா நம்முடைய குருவி ஆகும் என்று சொன்னான்.

ராமன் தாயார் சுந்தரத்தைப் பார்த்துச் சொன்னதாவது :—சுந்தரமே! அழவேண்டாம். இதோ மேலே பார். அங்கே இரண்டு


குருவிகள் கூடு கட்டிக்கொண்டு இருக்கின்றன. அது "எங்கள் வீட்டுக் குருவி." நாங்கள் ஏதாவது சாப்பிடுகையில் அந்தக் குருவிகள் இரண்டும் பக்கத்தில் வந்து நிற்கும். நாங்கள் ஏதாவது போட்டால் அதைப் பொறுக்கிக் கொண்டு தன் கூண்டுக்குப் போய்விடும். நெல் காய வைத்தால் தனக்கு வேண்டிய நெல்லைக் கொத்திக் கொண்டு போகும். அந்தக் குருவிகள் எங்களுடனேயே இருக்கின்றன. அவற்றை நாங்கள் பிடிக்கமாட்டோம். அந்தக் குருவிகளைச் சுதந்திரமாய் இருக்கும்படி விட்டுவிட்டோம்; அவைகள் சந்தோஷமாய் இருப்பதைப் பார்த்து நாங்களும் சந்தோஷப் படுவோம். அந்தக் குருவிகள் எங்கள் வீட்டை விட்டு ஒருபோதும் போகாது. இந்த சின்னஞ் சிறு குருவிகள் கூட சுதந்திரமாய் இருக்க விரும்புகிறது பார்த்தாயா? நாமும் சுதந்திரமாய் இருக்க ஆசைப் படுகிறோம்; நமது வீட்டுக் குருவிகளும் சுதந்திரமாய் இருக்க ஆசைப்படுகின்றன. குருவிகள் தாமாகக் கூடு கட்டி வாழும்படி அதற்கு நாம் சுதந்திரம் கொடுக்கவேண்டும். அப்போது அது பயமில்லாமல் நம்முடனேயே இருக்கும் என்று சொன்னாள். சுந்தரம் இவற்றைக் கேட்டுவிட்டு, மேலே ஜன்னலின் பக்கம் உட்கார்ந்திருந்த குருவிகளைப் பார்த்து சந்தோஷப்பட்டான்.

"உயிர்களிடத்தில் அன்பு வேணும்"

---

### மந்திரவாதியிடம் எச்சரிக்கையுடன் இரு.

யொத்தபாகத்துக்கு மந்திரவாதி நல்ல மனுஷ்யனில்லை. அவன் நட்பும வேண்டாம், பகையும்வேண்டாம். அவன் உன் வீட்டுவாயிலில் ஏறவும்வேண்டாம்; அவன் சகவாசமே வேண்டாம். அவன் ஏதோ மந்திரங்கள் கற்றவனாயினும் கெடு புத்தியே அதிகம். குடிமுதலியவை அவனிடம் விசேஷம், வெறுக்கத்தக்க அல்ப தேவதைகளின் உபாசனை மிகுதி. அவன் நல்லதும் செய்வான்; கெட்டதும் விளைப்பான். அவன் ஒரு பயங்கர உருவம், பேய்களின் தோழனை அவனுக்கு சூன்யம் வைத்தலாதிய பேய்ச் சேஷ்டைகளெல்லாம் உண்டு. எவ்வளவுக்கு ஜாக்கிரதையாக விரோதமில்லாமலே அவன் ஸகவாசத்தினின்றும் விலகிக்கொள்கிறாயோ அவ்வள்வுக்கும் உனக்கு சுகம்.



# பிரபஞ்சதரிசனம்

## செஞ்சிக்கோட்டை

**நமது** பாரத நாட்டுப் பூர்வீக மன்னர்களிற் சிலர் மலை, மதில் முதலிய அரண்களில் துருக்கமென்னும் மலைக்கோட்டையை மிக்க உறுதியுள்ளதாயும், அழகாயும், பார்ப்பவர்கள் அதிசயிக்கும்படியான சிற்ப வேலைகள் அமைந்ததாயும், சத்துருக்கள் அஞ்சும்படியான அரணிப்புள்ளதாய்க் கட்டிக்கொண்டு பகைவருக் கஞ்சாமல் அரசு செலுத்தி வந்தார்கள். அத் துருக்கங்களில் ஒன்றாகிய செஞ்சிக்கோட்டை தென் இந்தியாவில் மிகப் பிரஸித்திபெற்றது.

***

தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள இச் செஞ்சிக் கோட்டையில் முன்பு அரசாண்ட தேசிங்குராஜனைப் பற்றி மிகவும் வியக்கத்தக்க கதைகளும் பாடல்களும் எழுதப்பட்டிருப்பினும், எல்லா ஜனங்களும் அறியும்படி அக் கோட்டையின் சிறப்பை விவரித் தெழுதினவர்கள் மிகவும் சிலரே. சென்ற மாதத்தில் நான் அங்குள்ள கோட்டை கொத்தளங்களைச் சுற்றிப் பார்க்க மிக விருப்பங்கொண்டு அவ்விடத்தில் சிலநாள் வசித்திருந்தேனாகையால் எனக்குத் தெரிந்தவரையில் அக் கோட்டையைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறேன் :—

***

முறையே 250-அடி, 300-அடி உயரமுள்ள கிருஷ்ணகிரி, ராஜகிரி என்று பெயர் பெற்ற இரண்டு குன்றுகள் சுமார் கால் மைல் அகலமுள்ள பள்ளத்தாக்கினால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ராஜகிரி என்பது தேசிங்கு ராஜனுடைய வாசஸ்தலமாகவும், மற்றோர் குன்று அவர் ராஜரீகம் நடத்துமிடமாகவும் உபயோகிக்கப்பட்டன. ராஜகிரி குன்றில் ஏறிச் செல்லும் பாதை பரிசுத்தமாகவும், படிகள் பாறாங் கற்களால் கட்டப்பட்டு மிருக்கின்றன. குன்றில் முக்காற் பங்கு உயரம் ஏறிப்போனால் அவ்விடத்தில் தேசிங்குராஜனுக்குக் குலதெய்வம் என்று சொல்லப்படாநின்ற ஒரு துர்க்காவதியம்மன் கோயிலைக் காணலாம். அக் கோயிலுக்கு அருகாமையில் ஒரு பாறைச் சருவில் பெரிய சுனை ஒன்றுண்டு. அது சுமார் 200-சதுரடி பரப்புள்ளதாய் இருக்கும். அதில் தேசிங்கு ராஜன் ஜலக்கிரீடை செய்வது வழக்கமாம். அச் சுனையைச் சுற்றி உல்லாஸமாய் உட்காரும் பொருட்டுச் சார்பணைகள் கட்டப்பட் டிருக்கின்றன. அதைக் கடந்து மேற் சென்றால், மிக உன்னதமான குன்றின் சிகரம் ஒன்றுண்டு; அச் சிகரத்தின் உச்சி சற்றேறக்குறைய 50-அடி உயர மிருக்கும். அவ்விடத்திற்கு ஏறிச்செல்ல படிகள் கட்டப்பட்டிருக்கவில்லை. நூலேணிகள் வைத்து ஏறிப்போவது வழக்கமாகையால் நானும் அப்படியே ஏறிச் சென்றேன். அவ்விடம்

தேசிங்குராஜன் வாழ்நாளில் அவரது ராணிக்கு அந்தப்புரமா யிருந்ததாம். அங்கு இப்பொழுது சுற்றுச் சுவரும் அஷ்டகோண வடிவாய் இரண்டு மண்டபங்களும் உருக்குலையாம லிருக்கின்றன. அம் மண்டபங்களைச் சுற்றிலும் அகழிபோல் மிகவும் ஆழமாய்க் கல்லில் குடையப்பட்டிருக்கிறது. மரப் பாலம் போட்டு அதன் வழியாய் அவ்வகழியைக் கடந்து மண்டபங்களைச் சேரவேண்டும். வாஸ யோக்கியமான அறைகளாகத் தடுக்கப்பட்டிருக்கிற அம் மண்டபங்களில் எப்பொழுதுங் கடுங்காற்று வீசுகின்றது. மண்டபங்களின் மேல் ஏறிச் சுற்றிலும் பார்த்தால், பூமி அதப் பாதாளத்தில் அழிந்துவிட்டாற் போலவும், நான் ஆகாயத்தில் பறக்கிறதுபோலவும் தோன்றியதே யல்லாமல், சற்று நேரத்தில் (Fascination of the precipice) கிறுகிறுப்பான மயக்கமும் உண்டாயிற்று.

***

இது நிற்க: இக் குன்றின் அடிவாரம் ஐந்து கோட்டை வாசற்படிகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாசற்படியிலும் போர்ச் சேவகர் வசிப்பதற்குத் தகுமான கட்டிடங்களும் இருக்கின்றன. அவைகளைக் கடந்து வெளியே வந்தால் குன்றுக் கெதிரில் தஞ்சாவூர் ஜில்லாவில் விளையும் நெல் முழுமையும் அடக்கும்படியான களஞ்சியங்களும், எண்ணெய் நெய் முதலிய வஸ்துக்கள் வைப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் அதிசயக் கிணறுகளும், போர்வீரர் கஸரத் செய்வதற்கான கரடி கூடங்களும், இஸ்லாமியருடைய மசூதியும், ஒரு சரவதோபத்திர மண்டபமும், குதிரை லாயங்களும் கொஞ்சமென்கிலும் சேதப்படாம லிருக்கின்றன. இக் குன்றுக்கும் கிருஷ்ணகிரிக்கும் நடுவில் 100-அடி உயரமும், 20-அடி அகலமுமுள்ள ஒரு பெரிய சுவர் கட்டப்பட்டிருக்கிறது. அச் சுவர்மேல் தேசிங்கு ராஜன் குதிரைச் சவாரி செய்து வந்ததாகச் சொல்லுகிறார்கள்.

***

கிருஷ்ணகிரி என்னும் குன்றின் உச்சிக்கு இரண்டு வழிகளுண்டு, ஜனங்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் ஒரு வழியும், போர்ச் சேவகர்களுக்கு மிகவும் செங்குத்தான படிகளால் அமைக்கப்பட்ட மற்றொரு வழியுமாக ஏற்படுத்தப்பட் டிருக்கின்றது. இக் குன்றின் உச்சியில் அரசர் மந்திராலோசனை சபை கூடுகிற ஒரு மண்டபத்தைக் கண்டு கண்ணீர் நிறம்பினேன்; அதில் மந்திரிகள் உட்காருவதற்குச் சார்மனைகளும், கட்டிடத்தின் மத்தியில் அரசனுக்கு ஒரு கல்லூஞ்சலும் போடப்பட்டிருக்கிறது. இக் கல்லூஞ்சல் செய்யப்பட்டிருக்கும் வேலைத் திறமையை நான் எவ்விதமென்று புகலுவேன்? சங்கிலி மாட்டுவதற்கு இரண்டு வளையங்கள் கல்லிலேயே செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்துச் சிற்ப சாஸ்திரிகள் அவ்விதமான வளையங்களை மிகச் சிரமத்துடன் செய்தாலும், நான் பார்த்த அவ்வளவு பெரியதாயும் அழகாயும் இப்பொழுது செய்வது மிக அருமையென்று நினைக்கிறேன்.

***

தேசிங்குராஜன் தன்னிடத்தில் ஊழியஞ் செய்தவர்களுக்குப் பணத்தோடு உண்டிக்குரிய பதார்த்தங்களையும் சம்பளமாகக் கொடுத்து வந்ததாகத் தோற்றுகிறது. அப்படி யிராவிடில் நெற் களஞ்சியங்களும், நெய், எண்ணெய்க் கிணறுகளும் இக் குன்றின் உச்சியிலும் காணப்படுவ



தற்கு ஏது என்ன? ஒரு ஸமயம் யுத்தம் மூண்டுகொண்டால் அதற்காக முன்னதாகச் சேர்த்துவைப்பதாக இருந்திருக்குமோ யாதோ!

***

கிருஷ்ணகிரிக்கு அடுத்த வடக்குத் திசையில் ரங்கனுதகிரி என்று ஒரு மூன்றாங் குன்று மிருக்கிறது. 200-அடி உயரமுள்ள அக் குன்றின் உச்சியில் ஸ்ரீரங்கநாதருடைய கோயில் கட்டப்பட்டிருக்கின்றது. அதில் பள்ளிகொண்டிருக்கிற ரங்கநாதர் தேசிங்குராஜனுக்குப் பிரத்தியக்ஷ தெய்வமாம். ஆர்காட் நவாப் படையெடுத்துச் செஞ்சிக்கோட்டையைச் சமீபித்து வந்து தேசிங்கு ராஜனைப் போருக்கு அழைத்தபோது, அம் மன்னன் யுத்தத்திற்குச் செல்ல ரங்கநாதரை அநுமதி கேட்டதாயும், அவர் இன்றைக்கிருந்து நாளைபோனால் உனக்கு ஜெயமுண்டாகு மென்று கட்டளை யிட்டவுடன், தேசிங்கு மிகவும் மனநொந்து ஸ்வாமிபேரில் அதிக நிஷ்டூரப்பட்டதாயும், அதற்குப் பெருமாள் ஒன்றும் பேசாமல் தன் முகத்தைச் சுவர்ப் புறமாகிய மேற்கு திசையில் திருப்பிக்கொண்டதாயும் சொல்லுகிறார்கள். பிம்பமும் முகத்தைத் திருப்பிக்கொண் டிருக்கிறது. இக் கோயிலில் வேறு விசேஷங்களும் உண்டு; முன் பிரகாரத்தில் ஒரு நந்தியாவட்டச் செடியும், மற்றோர் எலுமிச்சஞ் செடியும் இருக்கின்றன; அவை யிரண்டும் நாள்தோறும் குறைந்தது முறையே ஒரு புஷ்பமும் பழமும் ஸ்வாமி பூஜைக்குக் கொடுத்து வருவதாகச் சொல்லுகிறார்கள். நான் அவ்விடம் சென்ற தினங்களெல்லாம் அப்படியே இருக்கக் கண்டேன். இவை யன்றி அதிக ஆழமான ஒரு ஜுனை யிருக்கிறது; அதன் ஜலத்தைக் கொண்டுதான் ஸ்வாமிக்கு அபிஷேக முதலானதும் செய்து வருகிறார்கள். பனிநீர்க் கட்டி போல் குளிர்ச்சியுள்ளதாக யிருக்கிற அச் சுனையின் ஜலம் எக்காலத்திலும் வற்றுகிறதே யில்லை.

***

ராஜகிரி, கிருஷ்ணகிரி என்னும் இரண்டு குன்றுகளின் மேலும் அவைகளைச் சுற்றிலும் இடிந்துபோன கோட்டைச் சுவரும், தூர்ந்துபோன அகழியும் காணப்படுகின்றன. இக் குன்றுகளிலும் அவைகளின் அடிவாரங்களிலும் விசேஷமாய் மனித ஸஞ்சார மில்லாமையால், அவ்விடங்களில் புலிகளும், கரடிகளும், மயில்களும், மான்களும், குரங்குகளும் ஏராளமாய்க் குடியேறி யிருக்கின்றன. தேசிங்குராஜன் அரசாண்ட காலத்தில் செஞ்சிப் பட்டணம் என்பது எப்படி யிருந்ததோ அதைப் பற்றி நமக்கு யாதொன்றும் தெரியாது. தெரிந்துகொள்ள உண்மையான சரித்திரமு மில்லை. இப்பொழுது வேளாளர்களுடைய விழல் வேய்ந்த சிறு வீடுகளடங்கிய ஒரு குக்கிராமமா யிருப்பதை நாம் எல்லோரும் பார்க்கலாம். ஹா! நாம் பூர்வகாலத்தில் பெற்றிருந்த சிறப்பையும், இப்போது இருக்கும் தாழ்ச்சியையும் நினைத்துக்கொண்டால் எவருக்குத்தான் மனம் உருகாது? நமது புராதன உன்னதங்களெல்லாம் 'பொய்யாய்ப், பழங்கதையாய், கனவாய் மெல்லப் போயினவே!'

"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரதநாடு."

# மதிப்புரை

## சௌந்தரா கோகிலம் :—

[ஸ்ரீமான் வடுவூர் கே. துரைஸாமி ஐயங்காரவர்கள் பி. ஏ. இயற்றியது. முதலிரண்டு பாகங்களின் விலை முறையே ரூ. 1-8-0ம் ரூ. 2-4-0ம் ஆம். கே. விஜயம் கம்பெனி, ராயப்பேட்டை. சென்னை.]

ஒரு குடும்பத் தலைவரின் காலத்துக்குப் பிறகு அவரை நம்பிய மனைவியும் அவரது புத்திரிகளும் ஆண்டிக்கற்றுப் படும் பாடுகளையும், நேரும் சோதனைகளையும் இந்நூல் வெகு நன்றாக எடுத்துரைக்கின்றது. கண்ணபிரானின் உத்தம குணங்களும், உயிருக்குத் துணிந்து அபாயத்திலிருந்து பிறரை விடுவிக்கத் திறனும், தன் கடமையைச் செய்தளவோடு திருப்தியேற்குந் தகைமையும், அவன்றன் காதல் நலமும், அவனுக்கு நேரும் இன்னல்களும், இதே விதமாகக் கோகிலாம்பாளின் தூய நடத்தைகளும், நிதான விவேகமும், அவளது காதலும், பிறகு நேரும் ஸம்பவங்களும், சௌந்தரவல்லியின் உலகியலுணராத மெல்லிய தன்மையும், பிறரது வஞ்சனை வலையிலாழ்ந்து மயக்குறும் பான்மையும் வாசகர்களின் மனத்தை வசீகரிக்கச் செய்கின்றன. போலீஸ் அதிகாரிகளின் அநீதங்களும், சுந்தர மூர்த்தியின் காமப்பேயும் அவனது துஷ்கிருத்தியங்களும், முனியன் முத்துசாமி போன்ற வேலையாட்களின் மோசச் செயல்களும் உலக சுபாவத்தை நன்றாக நினைப்பூட்டுகின்றன. கற்பகவல்லி, பூஞ்சோலையம்மாள் இவர்களின் கஷ்டங்களும், படும் ஸஞ்சலமும் மிக்க சோகபாகமாகும். உத்தம வேலையாட்களுக்கு உதாரணமாய் முருகேசனையும் கந்தனையும் குறிப்பிடலாம். வக்கீல் ராம ராவ் ஆபத் ஸகாயரான உத்தம புருஷராயினும் அத்தகையோருக்குத் தான் தொழிலுக்குத் தக்க வருமானத்தைக் காணோம்.

இந்த நாவலின் இடையிலே இதற்குச் சம்பந்தமல்லாததாய்த் தோன்றுகின்ற திவானின் சரித்திரம் அமிர்தபானம் போன்று அத்யந்த ஸ்வாரஸ்யமாய் ருசிக்கின்றது. அவரது பெருந் தகைமையும், எளியோர் மாட்டு அவர் பாராட்டும் அன்பும், அரிய உதவிகளும், தமது கையெழுத்து போன்று மோசக் கையொப்ப மிட்டோனை ஆதரிக்கும் பான்மையும், போலீஸ் இனிஸ்பெக்டரை வெகு சாதுர்யமாய் ஆழங்கண்டு அந்த அக்கிரமியைச் சிக்ஷித்து நிரபராதிகளைக் காக்கும் பரிவும், அவரது பத்தினியின் கற்பிலக்கணமும், அந்தோ! இறுதியில் அம் மகானுபாவரது வாழ்க்கை பாழ்பட்டுத் துறவியாதலும், முடிவில் மறைந்த தமது தந்தையைக் காண்பதுமான பாகங்களால் இந்நாவலின் மதிப்பு வெகு கிலாக்கினையான உச்சிக்கு உயர்ந்து வாசகர்களைத் திடுக்கிட்டுப் போகும்படி செய்விக்கின்றது. விருத்த விவாகத்தின் கோரமும், விவாகம் செய்து கொண்ட ஆடவர்க்கு அதனால் ஸஞ்சலப் பெருக்கேயன்றி ஒரு துளி இன்பமு மில்லையென்பதும் குஞ்சிதபாத முதலியாரால் இனிது புலனாகும்.

இந்நாவலின் மற்ற பகுதிகள் இனி வெளிவரும் மூன்றாம் பாகத்தில் பூர்த்தி யடையுமென்று தெரிகிறது. ஆயினும் இவ்விரு பாகங்களினின்றே கால யூகங்கள் தோன்றுகின்றன. கோகிலாவை மணத்தற்காகக் கண்ணபிரானைத் தபாற்களவிற் சேர்ந்த சுந்தர மூர்த்தியே அக்களவின் காரணஸ்தனாகலாம். சௌந்தரவல்லி தனது மெல்லிய தன்மையில் சுந்தர மூர்த்தியால் கற்பழிந்தும் கெடலாம். கோகிலா தன் நற்கணவனான கண்ணபிரானை மணந்து இன்புறுதலும் கைகூடலாம். திவானின் மனைவி தன் புத்திரனைக் கண்டித்து நடத்தும் பான்மைக் குறிப்புக்கும் (இரண்டாம் பாகம் பக்கம்-122) கற்பகவல்லி கண்ணபிரானைக் கடிந்துரைக்கும் குறிப்புக்கும் (முதற் பாகம் பக்கம் 51-52) உள்ள ஒற்றுமையைக் கொண்டு திவானின் காணமற்போன மனைவியும் குமாரனுமே கற்பகவல்லியும் கண்ணபிரானு மென்றும் நினைக்கலாம். இக்கண்ணபிரானுக்கும் சுந்தர மூர்த்திக்குங்கூட ஒரு உறவு நேர்ந்து கொள்ளுமோ வெனவும் ஐயம். எவ்விதமோ இந்நாவலின் மூன்றாம் பாகம் மிக்க ஸமத்காரமாய் எழுதப்பட்டிருக்குமென்பது திண்ணமாதலின், அத்தியந்த ஸ்வாரஸ்யமான இந்நாவலின் முடிவுக்காக அம் மூன்றாம் பாகத்தை ஆவலுடன் எதிர்நோக்கி நிற்கின்றோம். ஆசிரியர்க்கு நமது வாழ்த்து.

---

கல்வியின் முக்கிய லட்சியமே ஒழுக்கமும் அறிவும்தான்.

(லார்ட் இர்வின்.)

ஒரு கத்தியை வைத்துக்கொண்டு ஒன்றைச் சீவும்போது கத்தி கையில் பட்டால் கத்தியை எறிந்து விடுவதில்லை. தவறுதல் எங்குமுண்டு.

ஒரு குடும்பத்தினரைக் காப்பாற்றவேண்டி அதன் அங்கத்தினர் ஒருவரைத் தியாகம் செய்யலாம். ஒரு கிராமம் முழுதும் கெடாமல் காப்பாற்ற ஒரு குடும்பத்தை விட்டுவிடலாம். ஒரு மாகாணத்தைக் காப்பாற்ற ஒரு கிராமத்தைத் தியாகம் செய்யலாம் என்பது பழய தர்ம சாஸ்திரம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை விஷயம் மனிதர்களுடைய கையை விட்டுத் தெய்வத்தின் கைக்குப் போய்விட்டது. நாம் ஒருவரை யொருவர் பகைக்கிறோம். நாம் கொலை செய்பவர்களாயும் ஆய்விடுவோம். நாம் அனைவரும் கடவுளின் பாதத்தை ஸ்நானம் செய்வித்து நமது பாபங்களைப் போக்கிக் கொள்வோம். மனிதர்களுடைய பிரயத்தனமெல்லாம் பலிக்காமற் போன பின்பு தெய்வத்தினிடமிருந்து ஒற்றுமை வருமென்று எனக்கு நம்பிக்கை யிருக்கிறது.

(மகாத்மா.)

### வலிமையின் வேகம்.

தேக வலிமை உடனே எதிர்க்க—கையை ஓங்கிவிடத் தூண்டுதல் தருகிறது. பொருள் வலிமையோ எதையும் பணத்தால் வெற்றிகொண்டு சமாளித்துவிடலாமெனத் தைரியப்பட வைத்துவிடுகிறது. இந்தத் தேக வலிமையும் பொருள் வலிமையும் பிறரை ஆள உபயோகமாவதன்றி, அந்த இரு வலிமைகளின் முன்பு பிறரும் வணங்கி அடங்கி விடுகிறார்கள்! ஆனால் அக்கிரமமான வலிமையோ கடைசியில் துணிந்தவனுக்கே ஸர்வ நாசம் தான்! வேண்டுமானால் காத்திருந்து பார்!

# கிறிஸ்துவர்களான ஹிந்துக்கள்

ஹிந்துக்களாயிருந்து கிறிஸ்து மதத்திற் சேர்ந்தவர்களின் உபயோகத்துக்காக 1850-வருடத்திய 21-வது ஆக்ட் ஒன்றிருக்கிறது. அது சட்ட நிர்ணய கவுன்ஸில் ஏற்படாததற்கு முன் அதாவது சுமார் 70-வருஷங்களுக்கு முன் வெகு அவசரமாய் உண்டானது. அப்போதுள்ள ஜனங்கள் அந்த சட்டத்தின் நிபந்தனைகள் ஆக்ஷேபத்துக்குரியவை யென்று அறியவும், அதைக் கவர்ன்மெண்டாரிடம் தெரிவிக்கவும் ஏதுவில்லாமற் போயிற்று. அக்காலத்தில் இந்த சட்டத்தால் ஹிந்துக் குடும்பங்களுக்குக் கஷ்ட முண்டாகு மென்று யாரும் கவனிக்கவில்லை. இந்த ஆக்டானது அநுஷ்டானத்திற்கு வந்த சிற்சில விடங்களில் ஹிந்து குடும்பங்கள் ஸங்கடம் அடைந்தன. 1850-ம் வருஷத்திய 21-வது ஆக்டில் ஹிந்துவானவன் கிறிஸ்து மதத்தில் பிரவேசித்தாலும் அவன் ஹிந்துவாயிருந்தபோது அடைந்திருந்த பாத்தியமும் அல்லது ஆஸ்தியும் அவனை விட்டு நீங்காது என்று குறிக்கப் பட்டிருக்கிறது. மிஷனரிகளின் வார்த்தையைக்கேட்டுக் கவர்ன்மெண்டார் இந்த சட்டத்தை யுண்டாக்கினார்கள். பிற்காலத்தில் இந்த சட்டப்படி தீர்மானிக்கும்போது நியாயாதிபதிகள் வெகு சிரம மடைந்தனர். பஞ்சாப் சீப்கோர்ட்டார் ஷை சட்டத்தில் பாத்யம் அல்லது சொத்து (Rights and Property) என்பது, சொத்தின் பாத்தியம், (Rights of Property) என்றிருந்திருக்கவேண்டுமென்று ஊஹித்தார்கள். அதாவது இராமன் என்பவன் கிறிஸ்துமதத்திற் பிரவேசிக்கிறான். அவனுடைய தகப்பனுக்கு பதினாயிர ரூபாய் சொத்தும் கோயில் ஸ்தானீகமுமிருக்கின்றன. இராமனுக்கு 4-தம்பிகளுண்டு. இராமன் கிறிஸ்துவனானதால் பிதுரார்ஜித சொத்தாகிய பதினாயிரம் ரூபாயில் அவனுக்குள்ள பாகமாகிய இரண்டாயிர ரூபாயை இழக்கவில்லை. அதாவது ஷையான் தன் பங்காக 2000-ரூபா அடைகிறான். இது தான் 1850-வருஷத்திய 21-வது ஆக்டின் தாத்பரியம். ஆனால் பாத்தியமும் அல்லது ஆஸ்தியும் என்று ஷை சட்டத்தில் கண்டிருப்பதால் இராமன் இரண்டாயிர ரூபாயைப் பெறுவதுடன் கோயில் ஸ்தானிகத்தையும் பெறவேண்டி வழக்குகொண்டு வருகிறான். அந்தப்படி நியாயாதிபதிகள் தீர்மானிக்க முடியுமா? கிறிஸ்து மதத்திற் சேர்ந்தவன் ஒரு கோவில்ஸ்தானீகத்தைப் பெறும்படி மற்ற ஹிந்துக்கள் விடுவார்களா? கிறிஸ்துமதத்தை யனுசரிப்பவன் குடும்பத்துடன் சேர்ந்திருக்க முடியுமா? அவனை மற்றவர்கள் வீட்டில் வைத்துக் கொள்வார்களா? இவ்வளவு அசந்தர்ப்பங்களெல்லாம் ஷை சட்டத்தால் விளையுமென்று ஹிந்துக்கள் அறிந்திருந்தால் இந்த சட்டத்தை அப்போதே ஆக்ஷேபித் திருப்பார்கள். அப்படி இது வரையிலும் ஷை சட்டத்தால் பாதகமுண்டாகாம லிருந்ததற்குரிய காரணங்களைச் சொல்லுகிறோம். அநேகமாய் கஷ்டத்திற் குள்ளாகித் தவிக்கும் ஏழைகளே கிறிஸ்துவ மதத்திற் சேர்ந்தனர். அப்படிப்பட்ட ஏழைகளுக்கு ஆலயங்களில் எவ்வித பாத்தியமுமில்லை. ஆதலின் அவர்கள் ஷை சட்டப்படி கோர்ட்டில் வழக்குகொண்டு வருவதற்கு மார்க்கமில்லா திருந்தது. ஆகையால் இப்போது நான் அந்தச் சட்டத்தால் உண்டாகக்கூடும் ஆபத்தை



ஜனங்கள் அறிந்து கொண்டனர். மைசூர் ராஜ்யத்தில் ஒரு ஹிந்து கிறிஸ்து மதத்திற் சேர்ந்தான். அவன் மனைவி குழந்தையைத் தன்னிடம் வைத்துக்கொண்டாள். புருஷன் 1850-ம் வருஷத்திய 21-வது ஆக்டுப்படி தானே அக்குழந்தைக்குக் கார்டியன் என்றும், ஆதலின் குழந்தை தன்னிடம் இருக்க வேண்டுமென்றும் மைசூர் சீப்கோர்ட்டில் வியாஜ்யம் செய்தான். சீப்கோர்ட்டார் ஷை ஆக்டானது மைசூர் சமஸ்தானத்தில் வியாபிக்கவில்லையென்றும், ஒரு வேளை சொத்தைமட்டும் அடையக் கூடுமாயினும் மற்றவிதமான எவ்வித பாத்யமும் அவனுக்கில்லை என்றும் தீர்மானித்தார்கள். இது அங்குள்ள மிஷனரிகளுக்குக் கஷ்டமாயிருந்தது. அவர்கள் இதைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டு சென்னை கவர்ன்மெண்டுகளுக்கும் அறிவித்தனர்.

இதுநிற்க: திருவாங்கூர் ராஜ்யத்தில் இந்த சட்டம் என்ன நிலைமையிலிருக்கிறதென்று பார்ப்போம். அவ்விராஜ்யத்தில் சகோதரர்கள் குடும்பத்திலொன்றாயிருந்து அந்த சொத்தை அனுபவிக்கவேண்டும். எவனாவது குடும்பத்தைவிட்டுப் பிரிந்துபோனால் சொத்தை யிழந்து சம்பாதித்துச் சாப்பிடவேண்டும். இதுவே அத்தேச ஆசாரம். ஆதலின் அங்கேயுள்ள இந்து கிறிஸ்து மதத்தில் சேர்ந்தால் தன் உற்றார் பெற்றாரை இழப்பதுடன் ஆஸ்தியையும் இழந்துபோகிறான். ஆதலின் இந்த ஆக்டின் வாசனையே திருவாங்கூர் ராஜ்யத்தில் இருக்கமுடியாமல் போயிற்று. இதைப்பற்றி மிஷனரிகளுக்கு வருத்தம். ஏனெனில் கிறிஸ்துவ மதத்தில் சேருபவன் பந்துக்களை இழப்பதுடன் பணத்தையு மன்றோ இழக்கவேண்டி யிருக்கிறது. ஆதலின் பாதிரிகள் இவ்விஷயமாய் கவர்ன்மெண்டாருக்கு அறிவித்தார்கள். அவர்கள் சுதேச ராஜ்யங்களில் இந்தச் சட்டத்தை அநுசரிக்கும்படி தாங்கள் பிரயத்தனம் செய்வது பிசகென்று சொல்லிவிட்டனர்.

---

## மறந்துவைத்துச் சென்ற பொருள் !

ஆ! அதோ பார்! உன்னிடம் அவன் மறந்து வைத்துவிட்டுச் சென்ற பொருளைத் தேடிக்கொண்டு ஓடிவருகிறான் பார். நீ எங்கே இல்லையென்று சொல்லிவிடுகிறாயோ வென்று அவன் தவிப்பான தவிப்பு தவிக்கிறான். அவன் ஆத்மா சாந்தி பெறும்படி அவன்வைத்து மறந்த பொருளை உடனே அவனுக்கு எடுத்துக் கொடு. அப்போது உன் மீது அவனுக்கு விஸ்வாசம் அளவு கடந்ததாகிவிடும். அதுமட்டுமல்ல, உன் மனமும் வெகு பரிசுத்தம் பெறும்; அவ்வளவோடில்லை; அவன் பூரிப்பிலும் உனக்குப் பங்குண்டு. அத்துடன் கடவுளின் ஆசியும் உனக்குக் கிட்டும். ஒரு போதும் ஒளியவைத்துவிட்டு நான் பார்க்கவில்லையே என்று சொல்லிவிடாதே. அது பின்னுக்கு உனக்கு கெடுதி.

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(494-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 38. இல்லை யென்ற வீட்டில் பல்லியும் சேராது.

“இல்லை” என்ற பதம் மிக்க இழிவானது; வெகு கொடிய அன்பற்ற சொல்; அதனினும் இரக்கமற்ற நீசத்தனமான சப்தம் வேறில்லை இல்லை யென்று சொல்லி விடுவது அதி சுலபம். உட்கார்ந்தபடியே அதை வாய் நோகாமல் சொல்லி விடலாம்; ஆனால் அதைக் கேட்பவர்களுக்கோ நெஞ்சு பிளந்து போகிறது. அவர்கள் மனம் ஏமாறிப் போய்விடுகிறது. அவர்களை ஒரு கலக்கு கலக்க வைத்து விடுகிறது. அவர்களை அப்படியே சோர்ந்து போக வைத்து என் செய்வோமென்று ஏங்கச் செய்து விடுகிறது. கண்ணீரும் விட வைக்கிறது. இல்லை யென்று சொல்லிக்கொண்டு பிச்சைக்காரன் ஒரு ஐசுவரிய ஸம்பன்னனின் வாயிற்படியில் ஏறித் தனக்கு ஏதாவது இடுமாறு வேண்டுகிறான்; உள்ளே யிருந்து பணக்காரனுடைய “இல்லை” என்ற தொனி வருகிறது. இருவரும் இல்லை யென்ற பதத்தை உபயோகிப்பதில் இருவரும் கேவலஸ்தர்களே யாகிறார்கள். இல்லாத பிச்சைக்காரனின் கேவலம் அவனைப் பார்த்தபோதே தெரிந்துவிட்ட சங்கதி. எல்லாம் இருக்கிற பணக்காரனின் குணம்,—எல்லாம் இருந்தும் இல்லாத பிச்சைக்காரன் தான் அவன் என்கிற விஷயம்,—இப்போது தான் தெரியத் தொடங்குகிறது. அவனுடைய ஹிருதய விசாலத்தின் லக்ஷணம் இந்த இல்லை யென்ற சொல்லிலிருந்தும் வெளிப்பட்டு விடுகிறது. அவன் குபேர நிதி படைத்திருந்தா லென்ன, அவன் எவ்வளவு பெருமை மிக்கோனா யிருந்தா லென்ன,—யாருக்கு என்ன உபயோகம்? எது வரையில் உண்டும், உடுத்தும், ஏழைகளுக்குக் கொடுத்தும் ஒருவன் அனுபவிக்கிறானோ அவ்வளவுக்கே அவன் அனுபவித்த சொத்தாகும். மற்றதெல்லாம் எவர் கைக்குப் போய் எவ்வாறு செலவழியக் காத்திருக்கிறதோ! “இல்லை” என்று சொல்பவர்களுக்கு “இல்லை” என்பவன் ஈனர்களினும் ஈனன்.

***

ஏழைகள் வீட்டினருகே வந்து பிச்சைக் கேட்கத் தொடங்கியதும் சிறு குழந்தைகள் அங்கு கூடிக்கொண்டு “இல்லை போ போ” என்று அவர்களைத் துரத்துகிறார்கள். இந்த இரக்கமற்ற சுபாவத்தைக் குழந்தைகள் கற்றுக் கொண்டுவிடும்படி பழக்குவிக்கக் கூடாது. அது பிற்காலத்துக்கு வெகு கெடுதியைச் செய்து விடும். பிச்சைக்காரனுக்கு மட்டு மல்ல, பிந்திய நாளில் நாமே இக் குழந்தைகளின் கையை எதிர்பார்க்கிற விருத்தாப்பிய வீட்டுப் பிச்சைக்காரர்களாகும்போது நமக்கும் “இல்லை” என்ற சொல்லை அக் குழந்தைகள் பெரியவர்களானபோது உச்சரித்து விடக் கூடும். அப்பொழுதுதான் அதிலிருக்கிற கஷ்டம் நமக்குத் தெரிய



வரும். ஆதலின் முளைக்கிற முளையிலேயே குழந்தைகள் ஜீவகாருண்யத்தில் சிறந்து விளங்கும்படி அவர்களை நாம் தயாராக்கவேண்டும். பிச்சைக்காரனைக் கண்டதும் வீட்டிற்குள் ஓடி ஒரு சிறு பிடி அரிசியாவது அவனுக்குப் போட்டு அனுப்ப அவர்களுக்கு ஆசை உண்டாகும்படி நாம் அவ்விதம் நடந்து காண்பித்து அவர்களைப் பழக்குவிக்க வேண்டும். இந்த சிறு விஷயத்திலும், இச் சிறு செய்கையிலும் எவ்வளவோ பயனும் ஆழ்ந்த ஞானமும் அடங்கி யிருக்கின்றது. அது இப்போதைக்குத் தெரியாவிடினும், பின்னுக்கு அதன் பலன்கள் நமக்கும், குழந்தைகளுக்கும், உலகத்துக்கும் வெகு பிரயோஜன முள்ளதாக இருக்கும்.

***

“இல்லை” என்ற சப்தத்தை உச்சரிக்காமலே நமது வாழ்நாள் கழிந்துவிடக் கூடாதா என்று நாம் ஆசைப்பட வேண்டும். “இல்லை” என்று சொல்லாமல் இடுவதிலே உள்ள ஆநந்தம் மோக்ஷ இன்பத்தில்கூட இராதென்று சொல்லிவிடலாம். ஒரு பிடி யரிசி இட நமக்குச் சக்தி யில்லாமற் போகும் காலமும் வேளையும் வருவதுண்டு. அன்று நமக்கு சமைப்பதற்கே அரிசியில்லாமலிருந்து வேறிடத்தில் கடன் வாங்கி வந்து, அவ்விதம் வாங்கப் போன இடத்திலும் அவர்களுக்கும் அரிசி அன்றைக்கு இல்லாமல், இருக்கிறதிலே நமக்குக் கொஞ்சம் கொடுக்கிற சங்கதியாய், அந்த விதமாக நாம் பெற்று வந்து, நமது வீட்டிலிருக்கிற அரிசியுடன் கலந்து இன்று வேளைக்குப் போதுமா வென்று அளந்து பார்க்கிற சமயத்தில், வீட்டு வாயிற்படியில் ஒரு பிச்சைக்காரன் வந்து நிற்பதைக் காண்கிறோம். “நமக்கே அரிசி போதாது—இதில் தர்மம் வேறேயா’ என்று எண்ணி விடாமலும், இல்லை—என்ற கொடிய சொல்லைச் சொல்லிவிடாமலும் ஒரு பத்து அரிசியாவது எண்ணிக்கொண்டு போய் அப் பிச்சைக்காரனுக்குப் போட்டுவிட்டு, அப்பா, இன்று அரிசி யில்லை, நாளை வா, வேண்டியவரை போடுகிறேன், கோபித்துக் கொள்ளாதே என்று ஹித வசனமாக உபசாரம் பேசி யனுப்பினால், ஆஹா, அவன் எவ்வளவு குளிர்ந்த மனதோடும் நம்மைக் கொண்டாடிக்கொண்டு போவான்? நாமும் அந்த சமயத்தில் எவ்வளவு உயர்ந்த மனப்பான்மைக்கு வந்து தெய்வத்தன்மை பெற்றவர்களாகி விடுகிறோம்? இதில் நமக்கு ஏதாவது நஷ்டமுண்டா? நாம் இதில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம் என்ன வென்றால், நமது மனம் “இல்லை” என்று சொல்லும் இழிந்த நிலைக்குப் போய்விடாதபடி என்றைக்கும் கண்டித்துத் தயாளத் தன்மையிலேயே எக்காலத்திலும் பிறர்க்கு இரங்கி உதவும் வண்ணமாகவே பழக்கிக் கொண்டு வரவேண்டு மென்பதுதான். இது மகா கஷ்டமும் பெரிய விஷயமுமானாலும் தெய்வத்திற்குப் பிரீதிகரமான இவ்விஷயத்தை நம்மால் ஆன வரைக்கும் நிறைவேற்றி வரக்கடவோம். இந்தச் சிறிய விஷயத்துக்குக் கூறியவற்றையே மற்ற எல்லா பெரிய விஷயங்களுக்கும் முன் மாதிரியாகக் கொண்டு நடக்கக் கடவோம். இப்படி நாம் நடப்பதில் நமது மனம் மிக்க ஸாத்மீக மாகிவிடும்; இளகிய தன்மை கொண்டதாகி விடும்; பரிசுத்தமான ஹிருதயமாகிவிடும். அத்தகைய நிர்மலமான உள்ளத்திலே பகவத் பக்தியும், தர்ம குணமும் வெகு சுலபத்தில் குடி கொண்டுவிடும். அதன் மூலம் நமது பிறவிப் பிணியைப் போக்கி பகவானுடைய பாத கமலங்களை நிச்சயமாய் நாம் பெற முடியுமென்ற திடமான ஆழ்ந்த நம்பிக்கை

கொள்ள நமக்கு ஒருவித துணிகரத்தையும் உறுதியையும் கூட உண்டாக்கி விடும். இந்த உறுதியே நமக்கு இகபரங்களிலும் நம்மை உய்விக்குமாறு செய்ய வைத்து விடும். ஆகவே, இங்குள்ள அரிய பெரிய படிப்பினையையும் ஞானத்தையும் நமது ஹிருதயத்தில் பதிந்து கொள்ளக் கடவோம். அவ்வண்ணமே நடந்து கொள்ளவும் இன்று முதல் நாம் சபதம் செய்து கொள்வோமாக.

***

இல்லை யென்ற வீட்டில் யார் சேருவர்? எவர் வருவர்? பல்லி எந்த வீட்டிலும் இருக்கக் கூடியது. அதுகூட இல்லை யென்ற வீட்டிற் சேராது என்றால், இந்த "இல்லை" என்ற பதத்தை எவ்வளவு கேவலமான தன்மையிலே எடுத்துக் காட்டப்படுகிற தென்பதைக் கண்டீர்களோ? நமது வீட்டிற்கு வருவோர்க் கெல்லாம் பாயஸ விருந்துகள் படைக்க வேண்டு மென்பதில்லை. அது விருந்து ஆகுமே யன்றி ஈசுவரப் பிரீதியான கைங்கரிய மாகாது. நமக்கு உள்ள அன்னத்தில் ஒரு சிறிது இட்டு, அன்னம் இல்லாவிடினும் தாகத்திற்காவது மனம் குளிரத் தந்து மனஸ்பூர்வமாக நமது அன்பைத் தெரிவித்து அனுப்புவது எவ்வளவு மேன்மையாகும்? எளியவர்களுக்குச் செய்வது ஆண்டவனுக்குப் போய்ச் சேருகிற தென்பதை நாம் மறக்கக் கூடாது. நம்மை எல்லோரும் அவன் ஏழையானாலும் உள்ளதை வந்தவருக்கு இட்டு உபசரித்து அனுப்புகிற உத்தமன் என்று பெயர் சொல்லும்படியாகச் செய்து கொள்ள வேண்டும்.

***

இன்னொரு ரகசியம் இதிலிருக்கிறது—அது என்ன தெரியுமா? இவ்விதம் "இல்லை" என்று சொல்லாமல் ஏதோ தன்னாலான வரை பிறருக்கு உதவியும் உண்பித்து வருகிறவனுக்குக் கடவுள் அவன் கால முழுதுக்கும் அவ்விதமே செய்து வருவதற்கு அவனுக்கு எங்கிருந்தோ செல்வத்தையும் தன ராசிகளையும் கொடுத்தபடியே இருக்கிறார். செலவுபோக ஏதாவது மிச்சப் படுத்தி அவன் ஒரு தரம்—சிறு சொத்து சேர்த்து வைக்கக் கடவுள் அவனுக்கு அதிகமாய்க் கொடுக்காமற் போனாலும், அவனது தாராளமான உத்தமச் செலவுகளுக்கும், உதாரத்துவமான விநியோகங்களுக்கும் வேண்டியபடி பணவருவாயை அவனுக்கு உண்டாக்கிக் கொண்டே போகிறார். இன்னும் ஒரு சங்கதி; அவனுக்குத் திடீர் என்று சில அவசியமான விருந்துகள் வந்து விடுகிறது. அவர்கள் அவனுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்திருப்பவர்கள். அவர்களை நன்கு உபசரித்து அனுப்பவேண்டு மென்று நன்றி யறிந்த வுள்ளமாய் அவன் எவ்வளவோ ஆவல் கொள்ளுகிறான். அந்த ஆவலுக்குத் தகுந்தபடி அந்த சமயம் அவன் கையில் போதிய பணமில்லை. பணம் என்ற வார்த்தைக்குக் கூட இடனில்லாமல் ஒரு காசுகூட அவனிடம் இல்லை யென்று சொல்லிவிடலாம். அப்போது அவன் என்ன செய்கிறான்? கடவுளை மனஸ்பூர்வமாய் நம்பி "அவர் தருவார்—நாம் செய்ய முடியும்" என்று ஒரு ஆழ்ந்த நம்பிக்கை வைத்து விடுகிறான். உடனே அவன் கேட்கிற இடத்தில் இல்லை யென்னாமல் வேண்டிய கடன் கிடைக்கிறது. உடனே செலவிடத் துணிகிறான். மறு தினமோ அவனுக்கு எங்கிருந்தோ பணம் வரும்படி பகவான் செய்து விடுகிறார். அவன் பிரியப்படி செலவிட வேண்டிய தொகை அவன் வியாபார வகையிலோ, அவனுக்குத் தரவேண்டியவர்களிட-



மிருந்தோ அந்த நெருக்கடியான சமயத்திற்கு எவ்விதமோ பலவந்தமாகத் தானாய் வந்துகொண்டே இருக்கிறது. அவனும் பகவான் நம்மைக் கைவிடுவாரா என்று வெகு சந்தோஷமாய் விருந்தினரை உபசரித்து அனுப்புகிறான். இவ்வாறாகப் பகவான் இவ்வித உதார குணத்தினனைக் கடைசி வரையும் அவனது உதார குணம் பெருகும்படியாகவே செய்து, அதற்கு வேண்டியதெல்லாம் அவனுக்குக் கிடைக்கும்படி அவனை வாழ்த்தி வருகிறார். இது ஒரு ஆச்சரியகரமான விஷய மல்லவா?

***

இவன் சங்கதிதான் இப்படி. இனி, இல்லை — இல்லை — என்று சொல்லும் அற்ப குண முள்ளவர்களின் விஷயத்தைப் பார்ப்போம். அவர்கள் எவ்வளவு தான் கருமிகளாய் இல்லை இல்லை யென்று கூறிச் சேர்த்துச் சேர்த்து வைக்கப் போனாலும், ஐயோ அவர்களுக்குச் சொத்து சேருவதையே காணோம். தரித்திரம் எப்போதுமே வீட்டில் குடி கொண்டு விடுகிறது. ஒருகால் சேர்த்து வைத்தாலும், அவற்றைச் செலவிட ஒரு சோம்பேறி மருமகன், அவர்கள் வீட்டுப் பெண்ணுக்குக் கணவனாய் வந்து விடுகிறான்! அவன் வேலைவெட்டி, எதற்கும் போகாமல் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு தின்று எல்லாவற்றையும் அழித்து விடுகிறான். அல்லது துன்மார்க்கனான குமாரனாலும் பிள்ளைகளாலும் அந்த சொத்துக்கள் பாழாய் விடுகின்றன. கடவுளுடைய சாபமும், ஏழைகளின் சாபமும் அவர்களை விருத்திக்குக் கொண்டுவருவதே யில்லை. காலமுழுதும் கஷ்டமும் தரித்திரமும் துக்கமும் உபாதைகளுமாகவே முடிகிறது. இவ்விரு வகையில் எவருடைய வாழ்வை நீ விரும்புகிறாய்?

***

"இல்லை" என்னாமல் கடைசிவரை இட்டவர்களுக்கு அவர்களுக்கு இல்லாத காலத்திலும் தருவதற்குக் கடைசிப் பொருளாக ஒன்று இருக்கவே பண்ணுகிறது. கர்ணனுக்குக் கடைசியில் தருவதற்கு அவன் செய்த தானங்களின் பலன் இருந்தது. குமணச் சக்ரவர்த்திக்குக் கடைசியில் தருவதற்குத் தன் தலை இருந்தது. அந்தத் தலையைக் கொண்டு போகுமாறு தன்னை நாடிவந்த வித்வானுக்குக் கூறினான். ஒருவன் ஏழை; அவன் எவ்வளவோ பாடு படுகிறான்; அவன் முன்னுக்கு வர சமயம் அகப்படுவதில்லை. சமயம் வந்து வேலை கிடைப்பினும், செலவுக்குப் பணம் போதாமல் பரம தரித்திரமாய் இருக்கிறது. ஆயினும் அவன் நன்கு கற்றவன், நன்கு உழைப்பவன்; அப்படிப்பட்டவனை ஆதரித்து அவன் வித்தையைக் கொண்டே ஜீவிக்க அவனுக்கு ஒரு நல்ல வழி காண்பித்துக் கொடுத்தால், நமக்கு நஷ்ட மில்லாதபடி அவனுக்கு ஒரு உதவி செய்தால், அவனது ஆத்மாவும் அவனை நம்பிய குடும்பமும் நம்மை எவ்வளவுக்கு வாழ்த்திப் போற்றும்? இந்த உதவியை நாம் செய்யக்கூடு மல்லவா? நம்மால் முடிந்த உபகாரங்களை எப்போதும் செய்யக் கடவோம். அதற்குப் பதில் ஆண்டவன் நமக்குச் செய்வார். நம்மால் இயன்றளவும்—இல்லை—என்ற சொல்லைச் சொல்லாமல் இருக்கவும், நம்மால் கூடியதைப் பிறருக்குச் செய்யவும் நம்மை அதற்கேற்றபடி பயிற்சி செய்துகொள்ளக் கடவோம். "இல்லை யென்ற வீட்டில் பல்லியும் சேராது" என்ற பழமொழியைக் கூறி எவர்களும் இகழாதிருக்குமாறு இறைவன் நம்மை ஆசீர்வதிப்பாராக.

(தொடரும்)

## "ஆநந்த குண போதினி"யைப்பற்றி
# அபிப்பிராயங்கள்.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த "கிருஷிகன்" பத்திரிகை பின்வருமாறு எழுதுகின்றது :—

"ஆநந்த குணபோதினி" என்னும் ஒரு மாதாந்தரப் பத்திரிகையின் ஒன்று முதல் 9-பிரதிவரை வந்தனத்துடன் வரப்பெற்றோம். இப்பத்திரிகையானது ஓராண்டிற்குள்பட்ட வயதுடையதாயினும், இதன் ஆசிரியரான ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடவர்கள் சென்ற 25 வருஷங்களாகப் பிரஜாநுகூலன் என்ற மாதாந்தரப் பத்திரிகையை நடத்தி அதிக அநுபோகமுள்ளவர்களாதலாலும், தற்காலத்திலிருக்கும் ஆசிரியர்களுக்குள் உலக அநுபவங்கள் உள்ளதை உள்ளபடி கவனித்து எழுதுவதில் நிகரற்றவராதலாலும், இப்பத்திரிகையில் எழுதப்படும் விஷயங்கள் எவர் மனதையும் வசீகரிக்கச் செய்யுமென்பதில் கிஞ்சிற்றேனும் ஐயமில்லை. இதில் குழந்தைகள் முதல் முதியோர் வரையில் கேட்டானந்தப்படக்கூடிய விஷயங்களும், கதைகள், விகடத்துணுக்குகள், மனோரம்யமான குறிப்புகள் முதலியவைகளும் மாதாமாதம் வெளிவருகின்றன. இப்பத்திரிகைக்கு நீண்ட ஆயுளையும், அளவற்ற சந்தா நேயர்களையும், கொடுத்தருள வேண்டுமென்று ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்."

## II

அநேக நாவல்களின் ஆசிரியரும், பிரபல கிரந்த கர்த்தாவுமாகிய ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்காரவர்கள் பி. ஏ. பின்வருமாறு பத்திராசிரியருக்கு எழுதுகின்றார் :—

* * * தங்கள் "ஆநந்த குண போதினி"க்கு நானும் ஒரு சந்தா நண்பனைச் சேர்ந்துகொண்டிருக்கிறேன். அது தங்களால் நிரம்பவும் திறமையாக நடத்தப்பட்டு வருகிறது. விஷயங்கள் மிகவும் ரஸமாக இருக்கின்றன. தமிழ் நாட்டில் வெளியாகும் பொது விஷய சஞ்சிகைகள் யாவற்றிலும் இது சிரோரத்தினமாக விளங்குமென்று நான் உறுதியாக நம்புகிறேன். தங்களுக்குப் பகவான் தேக ஆரோக்கியத்தையும், ஏராளமான சம்பத்தையும் அளித்து இந்த சஞ்சிகையை உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்து நிலைநாட்ட அருள் புரியவேண்டும்."

---

"நாடகமென்பது மனிதர்களது பல்வேறு மனோ பாவத்திற்குத் தகுந்தபடி உணர்ச்சிகளை யுண்டாக்கி, அவர்களது செய்கைக்கு அவைகளைச் சம்பந்தப்படுத்தி, மனிதர்கள் விரும்புகிறபடி சிலருக்குப் புத்திமதியும், சிலருக்குச் சல்லாபமும், சிலரது நன்மைக்கு இயல்பான உபதேசங்களையும் கொடுக்கின்றது. உலகத்திலுள்ளோரது நவரஸங்கட்கு இயையும்படியும், அபிநயம் முதலியவைகளால் சுகதுக்கமிவைகளை யுணர்த்தும்படியும் அமைந்திருப்பதுதான் நாடகமாகும்." (மாடர்ன் ரெவியூ.)

# மகா சிவராத்திரி விரதம்

மஹா விசேஷமான இவ்விரதம் அடுத்த மார்ச்சு மாதம் 2-ம் தேதி வருகிறது. இவ்விரதத்தின் வரலாற்றை இங்கு சுருக்கிச் சொல்லுகிறோம். முன்னொரு காலத்தில் உண்டாகிய மத்திமப் பிரளயத்தில் பிரம முதல் பிபீலிகை பரியந்தமுள்ள ஆன்மகோடிகளெல்லாம் மாயையிலொடுங்க, மாயை சிற்சத்தியிலொடுங்க, சத்தி சிவத்திலொடுங்க, சிவமொன்றே தனித்து நின்றது. அக்காலத்து சிவத்தினின்றும் வேறாகாது விளங்குந் தாதான்மிய சத்தியென்னும் பராசக்தியாராகிய அம்மையார் ஆகம விதிப்படி சிவபிரானை அருச்சனை புரிந்தனர். சாம நான்குஞ் சென்றபின் சிவபிரான் பொற்றாளினைப் படிந்து, நான் வழிபட்ட இன்றைய இராத்திரியை இனிவரும் விண்ணவரும், மண்ணவரும், சிவராத்திரியெனவும், இன்றிரவு முழுதும் அர்ச்சிக்கின்ற யாவரும் தேவரீர் திருவடியையடையவும் வரமருள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவ்விதமே பரமனும் உமையவட்குக் கிருபை சுரந்தனர். ஆதலின் அன்று முதல் சிவராத்திரி யெனப் பெயர் பெற்றது.

இதன்றி வேறொரு காரணமுமுண்டு. பூர்வத்தில் பிரமன் மஹா விஷ்ணுவுடன் வாது புரிந்து எதிர்த்த தருணம் இருவருக்கும் மத்தியில் சிவபிரான் அக்கினிப் பிழம்பாகிப் பிரகாசித்தனர். அவ்வேளை மாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசித் திதியென்று சொல்லுவர். அவ்விதம் இரு மூர்த்திகளின் மத்தியில் தோன்றிய ராத்திரி சிவராத்திரியெனவும் கொள்ளப்பட்டது.

சிவராத்திரி தினத்தன்று சூரியோதய காலத்தில் நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துச் சிவத் தியானத்துடன் அன்று பகல் முழுவதும் உபவாசமாயிருந்து, இராத்திரி நான்கு சாமத்திலும் நித்திரையில்லாமல் சிவபூஜை செய்யவேண்டும். மறுநாள் உதயமானவுடன் நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிவதரிசனஞ் செய்து வந்து பாரணஞ் செய்ய வேண்டியது.

---

## காதலின் ஜோதி !

பெண்மக்களுக்குக் 'காதல்' சூரிய வெளிச்சத்தைப் போலும், ஆண் மக்களுக்குக் காதல் நக்ஷத்திர ஒளியைப் போலும் காணப்படும். ஆண் மக்களுக்குக் காதலைத் தவிர பொருளீட்டல், புகழ் பெறுதல் போன்ற வேறு பல ஆசைகள் இருப்பதும், பெண்களுக்கோ அங்ஙனமில்லாமல் 'காதல்' ஒன்றே அவர் தம் ஆசையாக இருப்பதுமே— இவ்வாறு வெவ்வேறு விதமான ஒளியில் இருவருக்கும் தோன்றுதற்குக் காரணமாகும்.

# சென்று போன நாட்கள்

(295-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 3. ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ணதாஸ்

தஞ்சாவூர் "ஜனனுகூலன்" பத்திராசிரியர் ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ணதாஸ் அவர்களைத் தமிழ்நாட்டில் அறியாதார் இரார். அறிந்தவர்களிலும் பலர் இப்போது காலஞ் சென்றிருக்கக்கூடும். நாற்பது வருஷங்களுக்கு முன்பு அவர் "ஜனனுகூலன்" என்ற தமிழ் வாரப் பத்திரிகையை ஆரம்பம் செய்தார். ஆரம்பித்த விதம் மிகு ருசிகரமானது. பத்திரிகைக்கு என்ன பெயர் இடலாமென்று பல பெயர்களை எழுதிச் சீட்டுக் குலுக்கிப் போட்டதில் முதலில் எடுத்த சீட்டில் "ஜனனுகூலன்" என்று இருக்கவே, அப்பெயரையே கொண்டு பத்திரிகையைத் தொடங்கினர். பத்திரிகையோ ஏழை ஜனங்களுக்கு ஏற்ற பத்திரிகை. அதன் விலையோ காலணு. அந்தக் காலத்தில் காகிதத்தின் கிரயமும் அச்சுக்கூலியும் மிகச் சொற்பமே. ஆங்காங்கு ஏஜண்டுகளை வைத்துக் காலணு வீதம் தமது பத்திரிகைகள் விற்பனையாகும்படி செய்தார். பத்திரிகை பிரதி சனிக்கிழமை தோறும் தவருது வெளியாகும். ஒவ்வொரு பத்திரிகையிலும் தஞ்சாவூர் ஜில்லாவின் செய்திகளும், மற்றும் உலக வர்த்தமானங்களும் நிறைந்திருக்கும். அந்த ஜில்லாவின் அதிகாரிகளைப் பற்றிய புகார்களைத் தகுந்த ஆதாரத்தோடும் எடுத்து வெளியிட் டிருக்கும். காலணு பத்திரிகையாயினும் இதற்கு முன் நடுங்காத உத்தியோகஸ்தர்கள் அபூர்வம். எங்கு "ஜனனுகூல"னில் தங்களைப்பற்றி வந்து விடுகிறதோ வென்று தங்களைத் திருத்திக் கொண்டவர்களும் பலர். பொதுஜன செல்வாக்கு "ஜனனுகூல"னுக்கு விசேஷமா யிருந்தது. திவான்பகதூர் ரகுநாதராவ் போன்ற பிரமுகர்களெல்லாம் இப் பத்திரிகையை வெகு பிரீதியுடனும் பாராட்டி அபிமானித்து வந்தார்கள். இந்நாளில் புதிதாய்த் தோன்றுகிற சில வாரப் பத்திரிகைகள் Review—அதாவது அபிப்பிராயங்களின் வடிவினதாகிய தமிழ் நாடு, குடியரசு இந்தப் பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டு தாங்களும் நீண்ட வியாசங்களைப் பக்கம் பக்கமாய் வெளியிட்டுக் கொண்டு வர்த்தமான மேதுமே பத்திரிகையில் இல்லாமல் இருக்கின்றனவே, அதைப் போலின்றி ஜனனுகூலன் பத்திரிகையில் அந்த ஒருவாரத்தின் அவ்வளவு விஷயங்களும் அடங்கியதா யிருந்தது. வெளியூர்களில் ஞாயிற்றுக்கிழமை காலை நேரத்தில் ஜனங்கள் காலணுவைக் கையில் வைத்துக் கொண்டு "ஜனனுகூல"னை, வாங்குவதற்காகக் காத்துக் கொண்டிருந்து, தபாலில் பத்திரிகைக்கட்டு வந்ததும் வெகு ஆவலுடனும் வாங்கி வாசிப்பார்கள். அவர்கள் ஆநந்தமாய்ப் படிக்கும்படியாக அதற்கேற்ற சங்கதிகளோடு அந்தப் பத்திரிகையும் இருக்கும். வாசிக்கத் தெரியாத கிராம வாசிகள் காலணுவைக் கொடுத்துப் பத்திரிகையைப் பெற்றுப் போய்ப் படிக்கத் தெரிந்தவர்களிடம் கொடுத்து வாசிக்கும்படி சொல்லி வெகு பிரியமாய்க் கேட்பார்கள்.

"ஜனனுகூலன்" பத்திரிகை பொதுவாகத் தமிழ் நாட்டுக்கும், சிறப்பாகத் தஞ்சை ஜில்லாவுக்கும் கனத்த ஊழியம் செய்திருக்கின்றது. "ஜனனுகூலன்" என்றால் பால் குடிக்கும் குழந்தைக்கும் கூடத் தெரிந்



திருக்கும். பிரதி வாரமும் இரண்டாயிரம் பிரதிகள் வரை வெளியாகி வந்தன. 1899-ம் வருஷத்தில் ஆரம்பித்த போயர் யுத்தத்தின்போது ஜனனுகூலன் ஐயாயிரம் பிரதிகளுக்கு மேலும் விற்பனையாயிற்று. யுத்த சமாசாரங்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவும் தன்னகத்தே தாங்கிப் பத்திரிகை வெளியேறும். ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ணதாஸ் பத்திரிகைத் தொழிலில் நன்கு தேர்ந்தவர். ஒவ்வொரு விஷயத்தையும் வெகு நன்றாகவும் தெளிவாகவும் இனிய நடையில் எழுதும் திறமை வாய்ந்தவர். பத்திராதிபருடைய சாமர்த்தியத்திற்கு மேல் பத்திரிகையை விற்கிற ஏஜண்டுகளின் சாமர்த்தியமும் இருக்கும்! என்ன சாமர்த்திய மென்றாலோ, பத்திரிகைகளை விற்றுப் பணத்தை எடுத்துக் கொண்டு பத்திராதிபருக்குப் பட்டைநாமம் சாத்துகிற சாமர்த்தியம் தான்! இந்த வகையில் எவ்வளவு நஷ்டங்கள் நேர்ந்த போதிலும் அதற்கெல்லாம் சலிக்காமல் பத்திரிகையை மிகவும் ஒழுங்காக நடத்தி வந்தார். ஆயினும் கடன் அதிகப்பட்டுப் போய், அந்தத் தொந்தரையால் பல கஷ்டங்களுக்கும் ஆளாயினர். ஒரு சமயம் ஒரு கடன் தொகைக்காக இவர் வாரண்டில் பிடிக்கப்பட்டார். அந்த வாரத்தில் தமது பத்திரிகையில்—"நம்மீதுள்ள விரோதத்தின் பேரில் பிடிக்கச் செய்து" என்று போலீஸாரைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதி யிருந்தார். "நம்மைப் போலீஸார் வாரண்டில் பிடித்தார்கள்" என்று எழுதி யிருந்தால் அது குற்றச் சொல் ஆகாது. அது சாதாரண சங்கதி. ஆனல் "நம்மீதுள்ள விரோதத்தின் பேரில் பிடிக்கச் செய்து" என்று எழுதிய ஒரு வரியானது அவதூறு வழக்காக முடிந்துவிட்டது. போலீஸார் தமது கடமையின் பிரகாரம் அவரைப் பிடித்ததே தவிர, விரோதத்தின் பேரில் பிடித்ததல்லவென்றும், அவ்விதம் 'விரோதத்தின் பேரில்' என்று குறிப்பிட்டதானது போலீஸாரை அவமதித்ததாகு மென்றும் எடுத்துக் காட்டிப் பத்திரிகையின் மீது போலீஸார் அவதூறு வழக்கு தொடர்ந்தனர். பத்திரிகைத் தொழிலில் தவறி வந்துவிட்ட ஒரு சிறு வார்த்தை எவ்வளவு ஆபத்தாக முடிந்து விட்டது பாருங்கள்.

"ஜனனுகூலன்" அவதூறு வழக்கு தமிழ் நாடெங்கும் அந்தக் காலத்தில் வெகு பிரபலமா யிருந்தது. வழக்கின் செலவுக்காக ஏழைகள் முதல் தனவந்தர் ஈருக அனைவரும் தங்களால் இயன்றதைக் கொடுத்து உதவினர். கடைசியில் பத்திராசிரியருக்கு ரூபாய் 200-அபராதமும், அது செலுத்தப் படாவிடில் ஆறுமாத வெறுங் காவலும் விதிக்கப்பட்டதாக நமக்கு ஞாபகம். அபராதத் தொகை உடனே செலுத்தப்பட்டது. அந்த சமயம் ஜனனுகூலனில் பத்திராசிரியர் எழுதியிருந்த வீர வசனங்கள் கல்லையும் கரைய வைக்கும். தமக்குச் சிறைவாசம் விதிக்கப்படினும், பத்திரிகை ஒருபோதும் நிற்காமல் வெளியாகி வருமென்றும், தாம் சிறையில் இருந்து கொண்டே பத்திரிகைக்கு விஷயங்கள் அனுப்பி வரத் தீர்மானித்திருப்பதாயும் பத்திரிகையில் ஆசிரியர் எழுதி யிருந்தார். இந்த வழக்கின் அப்பீல் ஹைகோர்ட்டு வரைக்கும் செய்யப்பட்டும் பயன்படா தொழியவே, இதன் மூலம் பத்திராசிரியருக்குக் கனத்த பொருள் விரயமும் உண்டானது. இவ்வளவும் தவறி வந்துவிட்ட ஒரு சிறு வார்த்தை செய்த வேலையெனில், பத்திராசிரியர் தமது எழுதுகோலை எவ்வளவு இழுத்துப் பிடித்து நிதானித்து எழுத வேண்டியவராய் இருக்கிறு ரென்பதும் இங்கு சிந்திக்கத் தகுந்தது.

இந்த வழக்கு ஒழிந்த பின்பும் "ஜனனுகூலன்" வழக்கம் போல் நடைபெற்று வந்தது. ஆனல் மகா துரதிர்ஷ்டம் பொருந்திய ஐரோப்பிய மஹா யுத்தம் மூண்டு கொண்டு காகிதத்தின் விலை ஒன்றுக்கு ஐந்து பங்காக ஏறிவிடவே, பத்திரிகையைக் காலணவுக்குக் கொடுப்பது கஷ்டமாகி அத்துடன் காலணு பத்திரிகை என்ற சொல்லும் முடிவு பெற்றது. அரையணு விதமாகப் பிறகு விற்கப்படலானது. அதன் பின்பு சிலகாலம் பத்திரிகை நிறுத்தப்பட்டிருந்து இப்பொழுது மறுபடியும் முன்போல் நடைபெற்று வருவதை யறிந்து சந்தோஷிக்கின்ருேம். "ஜனனுகூல"னுக்கு இப்பொழுது நாற்பது பிராயமாகின்றது. தமிழ் நாட்டின் பழங் காலத்திய பத்திரிகைகளில் அது ஒன்ருகும். அதற்கு முன்னும் பின்னும் தோன்றிய பத்திரிகைக ளெல்லாம் மறைந்து போயின. சென்ற மாதத்தில் அப்பத்திரிகை நமக்குக் கிடைத்ததும் மிக்க ஆசையுடனும் ஏற்று அதற்குப் பல முத்தங்களும் தந்து ஆவலோடும் வாசித்தோம். அப்பத்திரிகையின் பழங் காலத்திய நறுமணம் இப்போதும் அதில் கமழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டு களித்தோம்.

"ஜனனுகூலன்" பத்திராசிரியர் ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ணதாஸ் "மருமக்கள் துயரம்" என்ற அழகிய சிறு நூலினையும், "மகாத்மாக்களின் மகிமை" என்று மற்ருெரு புஸ்தகமும் வெளியிட்டுள்ளார். இதில் "மருமக்கள் துயரம்" என்ற நூல் அக்காலக் "காபிரைட்" சட்டத்தின்படி ரிஜிஸ்தர் செய்யப்படாததால், சென்னையில் அதைப் பலரும் அச்சிட்டு விற்பாராயினர். ஆசிரியருக்கு இப்பொழுது எழுபது பிராயமாவது இருக்கும். ஸ்ரீமான் டி. வி. கிருஷ்ணதாஸ் இன்னும் நெடுங்காலம் வாழ்க. அவரது "ஜனனுகூலன்" பத்திரிகையும் என்றும் சிறந்து விளங்குக.

---

247. "மாணக்கர்களாகிய நீங்கள் யாவரும் இந்தியரென்பதில் பெருமை கொள்ளவேண்டும்." (ஸர் ஜகதீச சந்திரபோஸ்.)

## நீ மனிதனு? மிருகமா?

உன்னை வெகு அலக்ஷியமாய்க் கேவலப்படுத்துகிறவனை நீ தனித்த இடத்தில் தூற்றி அவமானப்படுத்தலாம். ஆனல் அவன் பலருடன் வந்திருக்கும்போது அவனை ஒருபோதும் தாழ்த்தாதே. அது மகா பெருங் கொலைப்பாவமாம். பலர் முன்பு உன் சத்துருவுக்குக் கூட மரியாதையைத் தந்து கௌரவிக்கும் மேலான புத்தியில் நீ ஸஞ்சரி. நீ கொடுக்கும் கௌரவத்தைப் பார்த்து, மற்றவர்களும் அவனை மதிக்கும்படி செய்துவிடு. அவனும் உன் உயரிய தன்மைக்கு நாணித் திருந்திவிடுவான். இதைவிட்டு எவனையும் பலர் முன்பு கேவலமாய்ப் பேசி அவமானப்படுத்திவிடாதே. அது ஒரு கேடுகெட்ட மிருக குணமாம். நீ மனிதனு? மிருகமா?

# சிறுமியர்க்கான 100 போதனைகள்

கல்வியே செல்வம்.
கற்பே ஆபரணம்.
அச்சம் பெறு.
'மடம்' கொள்.
'நாணம்' நன்று.
'பயிர்ப்பே' மேன்மை.
காவலுக்கு உட்படு.
பெண்பருவம் ஏழு.
தினமும் வேலை செய்.
படிப்பே திருத்துவது.
சமையலில் தேர்ந்திடு.
தையல் தெரிந்திடு.
கோலமிட அறி.
கௌரவ நடைகொள்.
சிரிப்பு ஆபத்து.
வைத்தியம் தேர்.
செட்டு வேண்டும்.
காலப்போக்கு கெடுதி.
அவசரம் தகாது.
புசிப்பில் நிதானி.
கடன் ஒரு சனியனே.
சுத்தமே அழகு.
சிநேகத்தில் ஜாக்கிரதை
பேச்சில் சாதுர்யப்படு.
குடித்தனம் பழகு.
எழுதுமுன் நிதானி.
உலகியல் உணர்.
கெட்டபெயர் பெருதே.
அடக்கமே பூஷணம்.
வட்டித்தல் பழகு.
எதிர் பேசாதே.
கோபம் கொடிது.
முகத்தைக் கோணதே.

மாமிக்கு நன்கு நட.
ஸதா விளையாடாதே.
ஊர் வம்பு தீது.
சண்டை ஏனோ?
வீண் கூட்டம் ஏன்?
பேன் குத்தாதே; சீவு.
தினமும் மிச்சம் பிடி.
ஒழுங்குடன் இரு.
வீட்டுவேலை பழகு.
பிடிவாதம் தகாது.
பொருமை வேண்டா.
தினசரிக்கிரமம் தெரி.
ஆத்திரம் அடக்கு.
கோள் கூருதே.
பக்தி-ஞானம் மேல்.
எவரையும் உபசரி.
இரக்கம், ஈதல் மிகு.
கேட்டு உணர்.
சொந்த மதத்தை நம்பு.
பிறருக்குத் தந்து புசி.
வேலையில் சிணுங்காதே.
காசு, பணம் கேளாதே.
புஸ்தக ஆசை கொள்.
பத்திரிகைகள் படி.
நூலின் உற்பத்தி அறி.
அச்சு ஞானம் பெறு.
பயிண்டு செய்யத் தெரி.
அநுபவமே பெரிது.
தூக்கம் தரித்திரமே.
உபவாஸ மிரு.
தனியே செல்லேல்.
விரோத புத்தி ஆகாது.
சகிப்பே மேன்மை.

சாந்தமே பூஷணம்.
லக்ஷ்மீகர வடிவிரு.
அன்புடன் நட.
எழுத்துப்பிழை கூடாது
ரகர, றகரம் அறி.
ழகர, ளகரம் தெரி.
இலக்கணம் பயிலுக.
கணக்கு எழுது.
ஒன்று சேர்ந்திரு.
நல்ல தோற்றம் கொள்.
தீங்கு நினையாதே.
நிதானித்துச் செய்.
மௌனம் கலக நாசம்.
சங்கீதம் திவ்யம்.
பூ மாலை கட்டு.
தர்மகுணம் கொள்.
குதூகலத்தோடிரு.
சாதுரியவதியாகுக.
கீழ்ப்படிந்து நில்.
வாக்கு சுத்தம் பெறு.
உன்-கடமையை உணர்.
உண்மையையே பேசு.
வாயாடி யாகாதே.
திருட்டுக்கை கூடாது.
எதிலும் நல்லதைக்கிரகி.
உலகம் கண்ணடி.
விடுகதை யறி.
நிலாவில் மகிழ்ந்திடு.
விளங்கி உன்னதப்படு.
சிரேஷ்டத்தைக் கவனி.
கஷ்டத்தின் பின் சுகம்.
பதிவிரதையா யிரு.
நாகரீகமாக நட.
ஸ்திரீ ரத்ந மாகுக.

☞ இந்த 100-போதனைகளையும் இன்னும் விரிவாக 90-பக்கங்களுள்ள "பாலிகா கல்பகம்" எனும் நூலிற் காணலாம். அதன் விலை அணு 4. அது மூன்ரும் பதிப்பு 'ஆநந்தகுண போதினி' ஆபீஸுக்கு $4\frac{1}{2}$ அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெறுக.

# கவிதா  விலாஸம்

## " நல்லுலகம் "

**வினா :—**

அன்னையை நோக்கி அருந்சிற னொருவன்
என்னைப் பெற்ற எழிலுறுதாயே !
நல்லுல கொன்றை நவின்றுளாய் பலநாள்
சொல்லுமவ் வுலகு சொகுசுடைத் தாமோ ?
ஆங்குறை குழவிக ளானந்த நிலையிற்
பாங்குடன் இருக்கப் படுமொரு நிலமோ ?
எங்குள தந்த எழில்நா டம்மே !
அங்குநா மனைவரும் அடைந்தே வசித்தல்
நன்ற விராதோ ? நாளெலாங் களித்துத்
துன்ப மெல்லாந் தொடரா தோடுமோ ?
சின்னாள் தோன்றுந் சிறந்த மலர்பல
அந்நாட் டென்று முளதாங் கொல்லோ ?
மலர்நிறை கிச்சிலி மணமுள ரோஜா
துல்லிய நிறமுள தூமல் லிகையும்
கோங்கந் தாமரை குவளை குமுதம்
வீங்கு புகழோடு விளங்குபல் மலரும்
ஆங்குள கொல்லோ? அறைகுவை அன்னாய் !

***

**விடை :—**

*ஆங்கிலை, ஆங்கிலை*
*அருமைக் குழந்தாய் !*

***

**வினா :—**

ஆதாயி னம்ம ! அணிகொள் கனிமரம்
ஏதாயி னுண்டோ ? எழிலுஞ் சுவையுஞ்
சொருபழ முடைய சுகந்தரு தீங்கனி
பெருத்துள மாவும் பிறங்கவங் குண்டோ ?
இலைதலை யோங்கும் இனிய வாழையும்
நிலைநிலை யாக நின்றுள தெங்கு
முதிர்பழ நிரம்பிய மொழிபே ரீந்தும்
இதவெலு மிச்சை இலந்தை நாவல்
பலவும் உண்டோ பகருமவ் விடத்தே ?
அலது : பகலவன் அலர்கதிர் நிலவும்



கடனடு உளதாய்க் காண்டகு பசும்புற்
கிடக்கை நறுமணங் கிளரும் போதுகள்
அலைதரு செறிந்த அடவிகள் பலவும்
நிலவிடு தென்றலாம் நேயநற் காற்றும்
அழகிய தொழுதி அனந்தம் பறக்கவும்
எழிலி நோக்கி இளமயி லாடவும்
தூதுணந் தாவி தொத்தல நுதறவும்
மாதோ டிருக்கும் மணிதிகழ் தத்தை(யும்)
வானம் பாடி(யும்) வளமமர் பூவை(யும்)
பாணன் வெட்கப் பாடிக் களிக்க(வும்)
விளங்கு நோக்கொடு மீயுயர் நிலமோ ?
எதெனக் குரைப்பீ ரெந்தன் தாயே !

***

**விடை :—**

*அல்லை, அல்லை*
*அருமைக் குழந்தாய் !*

***

**வினா :—**

பின்னுமந் தாயைப் பிள்ளைதான் நோக்கி
என்னரு மன்னாய் ! அந்நிலம் எங்கணும்
மின்னு பொன்மணற் மிதக்கப் பாயும்
தண்ணிய ஆறும் தணிவிலா அழகொடு
செய்ய நிறத்துச் செறிந்திடு மணிபல
வையகத் திடத்தே மன்னிக் கிடக்குமோ ?
இரவில் ஒளிரும் இருபெரு வானிடை
மீனம் பலபோல் மிளிரும் வயிரம்
மீனே றுழலும் வேலைப் புறத்தெலாம்
பவளக் கொடியும் பருமணி முத்தும்
தவழ்ந்து கிடப்ப சாற்று சேய்த்துள
தொன்னகர் தானோ துன்னருந் தாயே !

***

**விடை :—**

*அன்றது, அன்றது*
*அருமைக் குழந்தாய் !*

***

என்னருஞ் செல்வமே ! என்னிரு கண்ணே
அந்நிலத் தழகை அறிவகை கூறுவன்
கேட்டி ; உயிருளான் கிட்டிக் காணான்
கேட்டிலர் எவரும் கிளக்கு மின்பச்
செம்பா வென்றும் சிறந்துகண் டுவக்கும்
கம்பலை யில்லாக் கனவிலுந் தானும்

ஒப்புயர் வில்லா வோர்தனி உலகை
எப்படி யெண்ணினுங் காணுதற்கியலா
நரையுந் திரையுந் நமனார் செயலும்
விரைகமழ் மலரும் வீழ்தற்கான
காலக் கூற்றும் கனவிலு மில்லையால்
மாலொடு மாந்தர் மந்தகா சந்தவழ்
செந்தா மரையிலுஞ் சீரிய முகமொடு
சந்தோ டத்திற் சந்தப் பாக்களை
இன்போ டிசைத்தங் கிருப்பர், அவரும்
அன்பே உருவா அருளே நிலையா
மன்னுமப் பெரிய மகத்துவ நாட்டில்
அன்றும் இன்றும் என்றும் இருப்பர் ;
அத்தகை நாடு இத்தரை விட்டேழும்
பத்தருக் கன்றிப் பாவியர்க்
கெட்டா தாகும் எண்ணுநல் லுலகே.

[*இஃது ஆங்கிலத்தில் ஹீமன்ஸ்* (Mrs. Hemans) *என்னும் அம்மையாரால் எழுதப்பட்ட* "The Better Land" *"நல்லுலகம்" என்னும் பாசுரத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதியதாகும்.*]

பூ. துரைப் பிள்ளை.

---

*"துன்பத்திலும் முகமலர்ச்சி கொள்பவனை, (2) துயரத்தினின்று சக்தியைச் சேகரிப்பவனை, (3) யோசனையால் துணிவு கொள்பவனை— நான் அன்புடன் பாராட்டுகின்றேன்."*
(தாமஸ் பெயின்.)

*"அச்சத்தினால் சுருங்கிப்போவது அற்பமானவர்களின் தொழிலாகும். ஆனால் எவனுடைய உள்ளம் உடையப்பெருமை யிருக்கின்றதோ, எவனுடைய நடத்தையை மனைச்சான்று ஏற்கின்றதோ அவன் தான் சாகும் வரையில் தன் கொள்கைகளைப் பின்பற்றிச் செல்லுவான்."*
(தாமஸ் பெயின்.)

## இரவல் சனியன்!

*'இரவல்' எனும் பெருவாரி நோயில் கைவிட்டுப் போய் விட்ட புஸ்தகங்களின் கணக்கை எண்ணத்தான் முடியுமா? மறுபடியும் அதைத் திரும்பப் பெறத்தான் முடியுமா? விலைக் காவது வாங்க முடியுமா? ஆ! இழந்த அந்த அரிய நூல்களை நினைப்பின் பெருங் கண்ணீர்தான்! எண்ண எண்ணப் பெருமூச்சே! எது நல்ல புஸ்தகமோ, எது கிடைக்காததோ அந்தப் புஸ்தகம் தான் காணமற்போயிற்றென்று இரவல் பெற்ற சண்டாளன் சொல்லிவிடுகிறான்! ஐயோ பாழும் இரவலே! சனியனே! உன்னால் பட்ட துன்பமும், அரிய நூல்களின் பிரிவும் போதும் போதும் இனி!*

## பெரியாரின் மொழிகள்

(500-வது பக்கத் தொடர்ச்சி.)

54. A country without metaphysics (Religion) is like a temple decked with every kind of ornament but not possessing the Holy of Holies. *Hegel.*

*மதம் ஒன்று இல்லாத தேசமானது, எல்லா அலங்காரங்களும் பூர்த்தியாகப் பெற்றும் கர்ப்பக் கிருகமில்லாத கோயிலையே ஒக்கும். ஹீஜல்.*

55. To reign is worth ambition, though in Hell ;
Better to reign in Hell than serve in Heaven. *Milton.*

*அரசாள்வது என்பது நரகத்திலாயினும் ஆசைக்குகந்த பொருளாகும். ஸ்வர்க்க லோகத்தில் சேவகம் செய்வதை விட நரகத்தில் அரசாள்வது மேலாகும் (இது சிலருடைய மனப்பான்மை). மில்டன்.*

56. The proper study of mankind is Man. *Pope.*
*மனித ஜாதியின் உயர்ந்த வித்தை மனிதனைப் பற்றியதே. போப்.*

57. O, Opportunity, thy guilt is great,
'Tis thou that executest the traitor's treason ;
Thou set'est the wolf where he the lamb may get,
Whoever plots the sin, thou pointest the season.
*Shakespeare.*

*சந்தர்ப்பம் என்னும் பொருளே! உன் குற்றம் மிகப்பெரிது. நீ தான் ராஜத் துரோகியினுடைய கொடுஞ் செயலைச் செய்கிறாய். நீயே எவ்விடத்தில் ஆடு கிடைக்கு மென்று ஓநாய்க்குக் காட்டுகிறாய். யார் யார் தீஞ்செயல் செய்ய உத்தேசித்தாலும் நீ தான் அது நிறைவேற சரியான சமயத்தைக் காட்டுகிறாய். ஷேக்ஸ்பியர்.*

58. Politics will be a lifeless business if the unexpected does not sometimes happen. *The Hindu.*

*எதிர் பாராத விஷயங்கள் அடிக்கடி நேரிடாது போயின் ராஜீய வாழ்க்கையே உயிரற்றதாகி விடும். 'ஹிந்து'*

59. Flattery comes before you in dangerous forms; you will be commended for excellencies which do not belong to you and this you will find are so injurious to your repose as to your virtue. An ingenuous mind feels in unmerited praise the bitterest of reproof. If you reject it you are unhappy; if you accept it you are undone.

*முகஸ்துதி என்பது உன்முன் அபாயமான உருவங்களில் தோன்றும். உனக்குச் சொந்தமில்லாத உயர்ந்த குணங்களுக்காக நீ மெச்சப்படுவாய். இது உன் சாந்திக்கும், உன் நற்குணத்திற்கும் கேடு விளைவிக்கும். மாசற்ற மனம், தகுதியற்ற புகழ்ச்சியை மிகக் கொடிய இகழ்ச்சியாக நினைக்கும். முகஸ்துதியை உதறித்தள்ளினால் நீ வருத்த முறுவாய். அதை அங்கீகரித்தால் நீ அழிந்து விடுவாய்.*

60. Kingship is a profession which has produced few among the most illustrious, many among the most despicable of the human race.

*அரசு என்னும் தொழிலில் மிகவும் கியாதி பெற்று வாழ்ந்தவர் மிகச் சிலரே; ஆனால் அத்தொழிலில் மனித ஜாதியிலேயே மிக இழிவாகக் கூறக் கூடிய பலர் தோன்றியுள்ளனர்.*

61. One hour of self-sacrifice, one hour of stern exertion against the assaults of passion outvalues a life of prayer.

*தன்னல மற்ற ஒரு நாழிகை, காமங்களை எதிர்த்து நிற்கும் ஒரு நாழிகை, பக்தி மிக்க வாழ்க்கையினும் சிறந்ததாகும்.*

62. Mankind generally worship the powers that do them harm more than those that do them good. *Kingsley.*

*உலக மாந்தர் தங்களுக்கு நன்மை புரியும் தெய்வங்களை விட தீமை புரியும் தெய்வங்களையே தொழுகின்றனர்.* கிங்ஸ்லீ.

63. Patriotism is the refuge of a Scoundrel! *S. Johnson.*

*(சில சமயம்) தேச பக்தி யென்பது துஷ்ட வஞ்சகர்களின் சரணாகதமாகிறது.* ஜான்ஸன்.

64. Arise, awake, or for ever be fallen. *Milton.*

*இப்பொழுது விழித்து எழுந்தால் எழுங்கள். அல்லது எப்பொழுதுமே விழுந்து கிடங்கள்.*

65. We grow weary when idle, because others being busy, we want company. *Johnson.*

*சில சமயம் சோம்பலாய் உட்கார்ந்திருப்பது கூட சலித்து விடுகிறது. ஏன்? மற்றவர்கள் சுறு சுறுப்பாயிருப்பதால் நமக்கு சகாக்கள் அகப்படுவதில்லையால் தான்.* ஜான்ஸன்.

66. Glory is the one thing that is not capable of being altogether vanity. *Renan.*

*உண்மையான கீர்த்தி ஒன்றே முற்றிலும் வீண் டம்பமாக ஆகமுடியாத வஸ்து.* ரெனன்.

67. Religion is *realisation*, not talking but *being*. *Vivekananda.*

*மதம் என்பது அனுபவித்தறியும் விஷயம், வெறும் பேச்சல்ல; வாழ வேண்டிய விஷயமாகும்.* விவேகாநந்தர்.

68. Wisdom consists not in knowing many things not even in knowing them thoroughly, but in choosing and following what conduces the most certainly to our lasting happiness and true glory. And this wisdom cometh from above.

*பல விஷயங்களை அறிவதாவது, அவைகளைப் பூர்த்தியாக அறிவதாவது ஞானம் அல்ல. ஆனால் நம்முடைய உயர்ந்த கீர்த்திக்கும் அழியாத இன்பத்திற்கும் காரணமாக உள்ள விஷயங்களைக் கண்டு அனுசரிப்பதே ஞானமாகும். இந்த ஞானம் ஈசனருளால் தான் கிட்டும்.* (தொடரும்)

R. இராமகிருஷ்ணன், B. A.,

# பால போஷண மர்மங்கள்

## குழந்தைகளின் வியாதியைத் தடுக்க.

சாதாரணமாய் குழந்தைகளுக்குண்டாகும் ஆரம்ப வியாதியே பின்னாளடைவில் பல்வேறு பெரிய நோய்களாகவும் உற்பத்தியாகிவிடுகிறது. குழந்தைகள் அன்னம் செல்லாதிளைத்தால் அதைக் கணைச்சூடென்று சாதாரணமாயும் அலக்ஷியமாயும் சொல்லிவிடுகிறார்கள். தாயின் கர்ப்பாசயத்திலிருந்தே கொண்டு வருகிற இக்கொடிய நோய் நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாய் விர்த்தியடைந்து அஜீர்ணம், அன்னத்துவேஷம், அஜீர்ண பேதி, ஜுரம், சிணுக்கிருமல், நெஞ்சுலர்ந்து மார்பு உயர்தல், தேகம் மஞ்சள் நிறமாகுதல், அஸ்திச் சூடு, எலும்புருக்கி, க்ஷயம், காசம், இளைப்பு, ஈளை முதலிய அசாத்திய வியாதிகளாகி எண்ணிறந்த குழந்தைகள் வீணே மடிகின்றன: இக்கொடிய நோயைத் தடுக்க முயலுதல் மிக்க உபகாரமாகும்.

குழந்தைகள் தாய் வயிற்றிலிருக்கும்போது கப ஜுரம், பித்தவாத ஜுரம், அஜீர்ணம், நெஞ்சுவலி, சீதபேதி, சூதகக்கிராணி, கப இருமல், முதலிய வியாதிகள் தாய்மார்களுக்கு உண்டானாலும், கர்ப்பமாயிருக்கும் தாய்மார்களுக்கு நேரும் அதிகமான மனோவியாகுலம், மனோபீதிகளாலும் இக்கொடிய நோய் சம்பவிக்கின்றது. கர்ப்பிணிகளை உற்சாகப்படுத்த வேண்டியது ஒரு பெரிய நன்மையாகும். கர்ப்பிணிகள் உற்சாகமாயிருந்து பிறப்பிக்கும் குழந்தைகள் நோயற்ற பலசாலிகளாயும், மனோ சக்தியும் தெய்வ பக்தியும் சாந்தமுமாக இருக்கும். கர்ப்பிணியான தாய்மார்கள் சதா கோபமும், ஆயாசமும், அழுதலும், மனோ சஞ்சலமும், துக்கமும், வியாகுல சிந்தையுமாக இருந்தால், அத்துடன் மல மூத்திர பந்தமுமிருந்தால் பிறக்கும் குழந்தை நோயாளியாயும் தரித்திர திசையுடையதாயுமிருக்கும். கர்ப்பத் தாய்கள் சதா கொடுமையாயும், கோபமாயும், ஆங்காரமாயும், பொறாமையுடனுமிருந்து அத்துடன் கோர ரூபமான தேவதைகளையும் அம்மாதிரி விக்கிரகங்களையும், படங்களையும் சதா கண்ணினாலோ மனதினாலோ தியானித்து வர்ணித்துக் கொண்டிருந்தாலும் பிறக்கும் குழந்தைகள் குரூரர்களாயும், துர்மார்க்கராயும், லோபம், பொறாமை, திருட்டுச் சிந்தனை முதலிய செயல்களும் மனமுமுடைய குழந்தைகள் பிறக்கும். மேற் சொல்லியவைகளுக்கெல்லாம் சாஸ்திராதாரமான அத்தாட்சிகள் உண்டு. ஆகவே, மேலே குறிப்பிட்ட கணைச்சூடு ஆரம்பமாயுண்டாகும். மேலே சொல்லிய எத்தகைய வியாதியையும் நிவர்த்திக்கும்படியான ஓர் அரிய முறையை இதனடியில் சொல்லுவோம். இஷ்டமும் நம்பிக்கையுமுள்ளவர்கள் செய்து கொடுத்து சுகம் பெறுவார்களாக.

மேல் தோல் சீவின வில்வ வேர் வீசை ஒன்று, நாட்டு நன்னாரி வேர் வீசை ஒன்று, இரண்டும் இடித்துத் தனித் [illegible] றாகக் கஷாயம் காய்ச்சி வடித்து, ஒரு [illegible] கலந்து, ஒரு பலம் வெந்தயத்தை பால் [illegible] போட்டுக் [illegible]

மெழுகு பதத்தில் வடித்து கோரோசனை விராகன் எடை 1, கஸ்தூரி பண எடை ஒன்று பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு குழந்தைகளுக்கு துட்டெடை வீதம் கொடுத்து வரவும். இதில் உள்ள கணக்கின்படி இதை அரை பாகமாகவும் கால்பாகமாகவும் கூடச் செய்து கொள்ள லாம். பத்தியமில்லை.

ஜீ. கண்ணுசாமி வைத்தியர்,
முனிசிபல் தமிழ் சித்த வைத்தியசாலை,
திருவாரூர்.

[சந்தேகங்களுக்கு எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு உதவியாக வைத்தியரின் விலாஸமும் இத்துடன் கொடுத்திருக்கிறோம். ப-ர்.]

---

"துன்பம் வரின் அது எனது வாழ்நாளில் வரட்டும். எனது குழந்தை அமைதியுடன் வாழட்டும்."

"தனது விடுதலை என்று கொண்ட ஒரு குறியின் பொருட்டு, தனது உடலை அழிக்குமாறு அதைப் பிறர் வசம் பிரஹலாதன் கொடுத்து விட்டான்." (மகாத்மா.)

"முரட்டுத்தனந்தான் உனது குணத்தில் முனைந்து காணப்படுகிறது"—என்று பிறர் உன்னைச் சொல்லும்படி நடவாதே.

"தெய்வத்தி னிடத்தில் எனக்கு நம்பிக்கை யுண்டு........இதுவரை தெய்வந்தான் எனக்கு வழி காட்டி வந்திருக்கின்றது." (மகாத்மா.)

"என்னென்னவோ செய்யலாமென்று எனக்கும் சில சமயங்களில் ஆசை யிருக்கிறது. ஆனால் நான் அடக்கி வருகிறேன்." (மகாத்மா.)

"யாரும் பின்பற்றவில்லை யென்பதற்காக என்னுடைய நம்பிக்கையை நான் விடமுடியாது." (மகாத்மா.)

"ஒரு உணர்ச்சி, ஒரு நவீனக் கருத்து, ஒரு அவமானம்—மனிதனை அடியோடு மாற்றும் தன்மை கொண்டது." (கார்லைல்.)

## அக்கிரமத்திற்கு அஞ்சு.

அக்கிரமத்திற்கு அஞ்சாமல் துணிந்தாயோ அத்துடன் போயிற்று உன் வாழ்வு! தொலைந்தது உன் ஜீவிய இன்பம்! அழிந்தது உன் வாழ்க்கை! விரைவில் இருண்டுவிடும் உன்காலம்! அக்கிரமத்தில் கை நனைத்துக்கொண்ட ஆரம்ப காலத்தில் அதன் கெடுதி உனக்குத் தெரியாது. அப்போது எல்லாம் உனக்கு ஜெய மான காலம் போலவே இருக்கும். ஆனாலும் ஐயோ! பிறகோ? கடவுள் உன் அக்கிரமத்திற்குத் தக்க பலனைக் காட்டிவிடுவார். அது உண்மை! உண்மை!! பிறனுடைய தூசியை நீ எடுத்தால் உன் [illegible] கண் கொள்ளை போய்விடும்!

# நட்பு

(503 - ம் பக்கத் தொடர்ச்சி.)

"ஆபத்திலே யறியலாம் அருமை சிநேகிதனை" என்பது பழமொழி. இது நட்பாராய்வதற்கு இன்னொரு வழியை யுணர்த்தும். நாம் ஏதோ பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருப்பதாக நடிப்பின் அப்போது நமக்கு உதவ முன் வருவோருடைய நடத்தையால் அவர்களது உண்மை நட்புத் தன்மையை அறியலாம். "என் மட்டில் நான் அநேக குற்றங்களை யுடையேன் என்பதில் ஐயமில்லை; அவ்வாறே என் நண்பர் களும் குற்ற மற்றவர்களா யிருப்பது முடியாது என்பதை நான் அறிவேன்: ஆகையால் நான் அவர்கள் நற்குணங்களைப் புகழுங்கால் எவ்வளவு சந்தோஷத்தோடும் இனிமையோடும் பேசுவனோ அவ்வளவு கோபத்தோடும் கடுமையோடும் அவர்கள் குற்றத்தைக் கண்டிப்பேனென்பதை யவர்க ளறிந்து கொள்ளட்டும்" என்று ஒரு பெரியவர் தம் நண்பர்களுக்குத் தெரிவித்தாராம். இதிலிருந்து, ஒரு நண்பன் கொள்ள வேண்டிய சிறந்த குணம் தன் நண்பனிடத்துக் காணுங் குற்றங்களை எடுத்துக் காட்டி அவைகளைக் களைவதேயாம் என்பதும், அத்தகையோரை அறிவும், விசுவாசமும், மனோதிடமுமுடைய உண்மை நண்பராகக் கருத வேண்டு மென்பதும் இனிது புலப்படும். எங்ஙனமெனில்—நாம் அறிந்து கொள்ளக் கூடாத நம் குற்றத்தை யறிந்து கொண்டது அவரறி வுடைமை; நம் முன்னேற்றத்தை நோக்கி நேருக்கு நேரே நம் குற்றத்தைக் கபடமின்றிக் கண்டிப்பது அவர் தம் பால் கொண்டிருக்கும் விசுவாசத்தையும் அவருடைய மனோதிடத்தையும் அறிவிக்கும். அவ்வாறு நம்மைக் கண்டிப்பதில், தற்புகழ்ச்சியை விரும்புதலும் முகஸ்துதி செய்தலுமாகிய இரு துர்க் குணங்களை நீக்கவும், தங்கள் கடமையை நிறைவேற்றுவதில் நம் கோபத்தையும் வெறுப்பையும் இலக்ஷியம் செய்யாம லிருக்கவும், அதிக மனோதிடம் வேண்டும்.

"குற்றங் களைதல்" இவ்விலக்கணத்தால் நட்பாராய்தல்.

வெகு சிலரே இதைப் பெற்றிருக்கின்றனர். எனவே, நாம் ஒரு கெட்ட குணமுடையவர் போலவோ அல்லது ஒரு தீய செய்கையில் தலை யிடுபவர் போலவோ நம்மைக் காட்டிக் கொண்டால், உடனே அதை நமக்கு எடுத்துக் காட்டி அதன் தீமையை விளக்கி, கேட்டிலிருந்தும் நம்மை விலக்க முற்படுவதிலிருந்து நம்மோடு சிநேகிக்க விரும்புவோர் அறிவும் உறுதியும், ஆண்மையும் அன்புமுடைய உத்தம நண்பரா என்பதை யுணர்ந்து கொள்ளலாம். இதையே,

"அழச்சொல்லி யல்லதிடித்து வழக்கறிய
வல்லார் நட்பாய்ந்து கொளல்"

என்று வள்ளுவனார் விளக்கினார்.

***

வெளிப்பட்டாலும் நமக்குக் கெடுதியைக் கொணரவல்லாத சிறு இரகசிய சங்கதி யொன்றை அவருக் கறிவித்து, அதை அவர் வெளியிடுதலையும் இடாமையையுங் கொண்டு அவர் உண்மையை யுணர்வதும் ஒரு வழியாம். அன்றியும் அவருக்கு வெறுப்பான சில செய்கைகளைச் செய்தும், அவர் பால் (தீமை பயக்காத) தவறு இயற்றியும், அவைகளை அவர் ஏற்றுப் பொறுமையுட னிருத்தலையும் இல்லாததையுங் கொண்டு, அவரது உண்மை நட்பை யூகிப்பர். இவையும் இன்னும் இவை போன்ற வழிகள் பிறவுமே நட்பாராய்தலுக்கு ஏற்றவை. இவ்வாறு நட்பாராயுங்கால், "கடுங்காற்று மழை கூட்டும்; கடுஞ்சிநேகம் பகை காட்டும்" என்ற பழமொழியை மறந்துவிட லாகாது.

**மற்ற இலக்கணங்களால் நட்பாராய்தல்.**

***

உண்மைச் சந்தோஷம் நண்பர் கூட்டத்தினால் மாத்திரமே பெறப்படுவதன்று; அவர்கள் பெறுமானத்தினாலேயே பெறப்படுவதாம். எங்ஙனமெனில், 'அநேக சிநேகர்களை யுடையேன்' என்று சொல்லிக்கொள்பவருக்கு உண்மையில் உத்தம நண்பர் ஒருவரேனு மிருப்பதில்லை; அத்தகையோர் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க முயல்வாராகில், இதன் உண்மையை நன்கு உணர்வர் :—

**நட்பை விளக்கும் முக்கிய வினாக்கள்.**

1. 'என் நண்பர்' என்று உம்மால் சொல்லிக் கொள்ளப்படுகிற மனிதர், உமக்குத் துன்பம் வருங்காலை, அதை உம்மோடு அனுபவித்து உமக்காக இரங்கி விசனிப்பாரா?

2. பிறர், உமக்குப் பின்னால் (மறைவில்) உம்மைத் தூற்றுதற்குக் காரணமா யிருக்கிற உமது குற்றங்களை, அவர் உம் முகத்துக் கெதிரிலேயே விசுவாசத்தோடு எடுத்துக் காட்டி உம்மைக் கண்டித்துத் திருத்துவாரா?

3. உம்முடைய நடக்கையி லபவாதங் கூறிக் கெட்ட பழிச் சொற்களால் உம் பெருமையை யழிக்க உமது விரோதிகள் முயன்றால், உமக்கு ஆதரவாய் நின்று உண்மையை வெளிப்படுத்தி உம்மைத் தப்புவிக்க அவர் தைரியமாய் முன் வருவாரா?

4. உம்மைவிடப் பணத்திலும் பதவியிலு முயர்ந்தோர் கூட்டத்தில், தற்பெருமையுங் கர்வமுமின்றி உண்மையான உள்ளன்புடன் உம்மைத் தம் நண்பரா யேற்றுக் கொண்டு எப்பொழுதும் போல் பக்ஷமாயும் சமமாயும் நடத்துவாரா?

5. அதிருஷ்ட மின்மையால் நஷ்டமடைந்து முன்போலக் கீர்த்தியோடு தோன்ற முடியாமலும், அவரை முன்போல் தாராளமான உதார குணத்தோடு நடத்த முடியாமலும் நீர் வறுமையுறுங் காலத்தும், அவர் எப்பொழுதும் போல் உம் தொடர்பால் சந்தோஷங் கொள்வாரா? உம் சம்பந்தம் லாப மற்றதென்று கொஞ்சங் கொஞ்சமாய் விலகி விடாமல், உம்மைத் தம் நண்பரென்று ஒப்புக்கொண்டு, உம் துயரச் சுமையைத் தாங்க அவரும் ஒரு கை கொடுப்பாரா?

6. சுறுசுறுப்பானதும் உல்லாசமானதுமான இவ்வுலக இன்பங்களில் சம்பந்தப்பட முடியாமல் நீர் வியாதிவாய்ப்பட்டு வருந்தும்போது, உம்



தனிமையான அறைக்குள் வந்து உம் வியாதியின் குறிகளைக் கவனமாய்க் கேட்டு உம் சோர்ந்த மனதை யுற்சாகப்படுத்த சாந்த வார்த்தை கூறி உம்மை விருப்பத்தோடு உபசரிப்பாரா?

7. கடைசியாக, நீர் இறந்துபோக நேரிடில், உமக்காக ஒரு துளி கண்ணீராவது சிந்தி உம்மைப் பிரிந்தமைக்கு வருந்தி, உமது ஞாபகத்தை அரிய நிதிபோல் கொண்டு காப்பாற்றத் தக்க மனம் அவருக்கு உண்டா?

இவைகளை யெல்லாம் சுயநல மின்றி உள்ளன்போடு செய்யாத மனிதர் உம் கூட்டாளியா யிருக்கலாம்—உம்மைப் புகழும் முகஸ்துதிக்காரரா யிருக்கலாம்—உமக்கு உதவிய உபகாரியா யிருக்கலாம்—ஆனாலும், அவர் உமது உண்மை நண்ப ரல்ல வென்பது மாத்திரம் நிச்சயம்; யோசிக்கில் அவர் உமக்கு வெறும் அறிமுகமானவரே. (தொடரும்.)

லக்ஷ்மீ வேங்கடரமணன்.

---

"அடிக்கடி சிரிப்பதால் மக்கள் நீண்ட சுகவாழ்வை அடையலாமென்று வைத்தியர்கள் ஆராய்ச்சிசெய்து கண்டு பிடித்திருக்கிறார்கள்...... ஆனால், அடிமை நாட்டில் அதிகமாகச் சிரிக்கமுடியாது." (பாரி.)

கல்லூரியைவிட்டு வெளியேறிய எவனும், ஏதோ விதி வசத்தால் தாம் பயின்றதொரு கலை தன் ஜீவனோபாயத்திற்கு அவசியமாக ஏற்பட்டா லன்றி, மறுகணமே தான் முன்னர் மிகக் கவலையுடனும், மெய் யுழைப்பினோடும் மனப்பாடம் பண்ணின கலையின் முதற் பாடங்களைக்கூட மறந்து விடுகிறான்.

வாதம் இருவகை. (1) ஒன்று அநுபவங்களைப் பெருக்கி அறிவை வளர்க்கும். (2) மற்றொன்று; அகங்காரத்தை வளர்த்து அறிவைத் தேய்க்கும். (1) முன்னது உண்மையைப் புலப்படுத்தும். (2) பின்னது உண்மையை அறிவதற்காயுள்ள சாதனத்தையே ஒளித்துவிடும்.

"சுதந்திரம் வேண்டுமா; கல்வி வேண்டுமா—என்ற கேள்வி ஏற்படுகையில், கல்வியினும் சுதந்திரமே ஆயிரம் மடங்கு விசேஷமானதாகும்." (மகாத்மா.)

## அதிகங் கவனிப்பதும் தீது. கவனியாமையும் தகாது.

எல்லா ஜாதகக் கூற்றுகளும் அதன்படி நடந்து விடுவதில்லை. அதிர்ஷ்டக்கார னென்ற இடத்தில் தரித்திரமே தாண்டவம்! தரித்திர னென்ற இடத்திலோ லக்ஷ்மீ வந்து விடுகிறாள். குழந்தைப் பேறுள்ள பெண்மணிக்கு அதற்கு முன் கணவன் போய் விடுகிறான்! குழந்தையே இல்லை யென்ற இடத்தில் உண்டாய் விடுகிறது! பத்தில் ஒன்றே பலிக்கின்றது!

| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | **விகடப் பிரதாபன்**<br>***(Registered.)*** | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |
|---|---|---|

# காலத்தின் ஓட்டத்திலே நாட்டம்!

## I



அந்தந்த மாதமும் விகட விசாரணைக்குத் தடி தூக்கித் திரிகிறவனாகிய நான், என் ஓட்டை வாயில் போட்டு மெல்ல ஒன்றும் அகப்படவில்லையே, எந்தப் புண்ணைக் கீறி ஆற்றலாம், எவர் அக்கிரமத்தை வெளியில் இழுக்கலாம், எந்தக் கூட்டத்துச் சங்கதியை அள்ளித் தெளிக்கலாம் என்று சுற்று முற்றும் பார்க்கும்போது, எல்லா சங்கதிகளுமே அந்தந்தக் காலபலன்களைப் பொறுத்து நடந்தேறுகிறவைகளா யிருந்ததில், அந்தக் கால தேவதையை இழுத்துப் பிடித்து இரு புறமும் புரட்டிப் பார்த்தேன். காலமென்னவோ ஒரு பக்கம் பகலெல்லாம் வெளிச்சமும், மற்றொரு பக்கம் இரவெல்லாம் இருட்டுமாய்த்தான் இருந்தபோதிலும், இதன் ஓட்டத்தின்மீது நாட்டமாயிருக்கும் நாநாவித சங்கதிகள் மட்டும் வெவ்வேறு கூறுவகையினதாய் பேதப்பட்டுக் கொண்டு போவதாகத் தோற்றவே, விகடனும் அந்த வேடிக்கைகளை மெல்லுவதற்கு இப்போது எடுத்துக்கொண்டேன்.

***

இந்த அதிசயமான உலகத்திலே பிஞ்சும், பூவும், காயும், கனியுமான எந்தக் குஞ்சு - குழந்தை - கிழட்டு - வஸ்துகளுக்கும் காலம் ஓடிப்போகவேண்டு மென்பதன் மேலேயே நாட்டமன்றி அது நிலைக்கவேண்டுமென்கிற விருப்பத்தையே காணோம்! தேசங்களை அதிர்ஷ்ட வசத்தால் கொடுத்துவைத்திருந்து ஆளும் அரசாங்கத்தார் இந்த நாள்கள் என்றைக்குக் கழிந்துபோகுமோ, வருஷக்கெடு என்றைக்கு முடியுமோ, மறு வருஷம் என்றைக்குப் பிறக்குமோ, வாய்தா வரி இறைக்காக என்றைக்கு உத்தரவு அனுப்பலாமோ வென்று நாளோட்டத்தின் மேலேயே நோக்கம் வைத்திருக்கிறார்கள். துரைத்தன உத்தியோகஸ்தர்களும், ஒரு நாள் எப்போது கழிந்து போகுமோ, எப்போது



ஐந்துமணி யடித்து வீட்டுக்குப்போய் குழந்தை குட்டிகளுடன் கொஞ்சுவோமோ, இன்றைய தினத்துப் பாடு எப்போது தொலையுமோ, ஒரு நாள் முடிந்ததென்று கணக்காக்கிவிட அந்தப் பொழுது நெருங்குவது எந்த நேரத்திலோ, மாதம் பிறந்த வுடனே ‘முப்பது நாளே போடி, பூவராகனே வாடி’—என்று சம்பளத்துக்கு எப்போது மடிபிடிக்கலாமோ, வருஷக் கணக்கு என்றைக்கு வருமோ, சம்பளம் உயர்த்தி என்றைக்கு ஆகுமோ, பென்ஷன் வாங்கும் காலம் எப்போது வருமோ, 25-அல்லது 30-வருஷம் இன்னும் வந்துவிடவில்லையே, இந்தப் பாழும் நாட்கள் சீக்கிரம் ஓடிப்போகக் கூடாதா, நாம் இந்த சனியன் பிடித்த உழைப்பைவிட்டு ஓய்ந்து உஸ்ஸென்று, வருகிற தெண்ட சம்பளத்தை வாங்கித் தின்றுகொண்டிருக்கலாமே, இது என்றைக்கு ஒழியுமோடா அப்பாவென்று நாள் கழிவின்மீதே நாட்டமா யிருக்கின்றார்கள்!

***

இனி, வர்த்தகர்களோ, தங்களின் சரக்குகள் விலையாகும் நேரம் சீக்கிரம் சீக்கிரமாய் வாராதா? கடன் வாங்கிப் போனவர்களுக்குப் பில் அனுப்ப மாதம் இன்னும் ஆகவில்லையே! கடன் பத்திரங்கள், உத்திரவாதச் சீட்டுகளில் கண்ட வருஷத் தவணைகள் என்றைக்கு வருமோ, அதி சீக்கிரத்தில் நெருங்கி வந்து விடக் கூடாதா! பணம் தண்டும் நேரம் எப்போது வருமோ, வசூலுக்கான இரவு எப்போது நெருங்கிக் கொள்ளுமோ வென்று கால ஓட்டத்தின் மேலேயே கவனமாயிருக்கிறார்கள். ஜவுளிக் கடைக்காரர்களோ தீபாவளி, ரம்ஜான், கிறிஸ்த்மஸ், கலியாண காலங்கள் இவற்றை யெதிர் பார்த்து நடுவேயுள்ள நாட்களைச் சபித்து எப்போது இந்த நாட்கள் தொலையுமோவென்று ஆவலாதி கொள்கிறார்கள். இவ்விதமே மளிகைக் கடைக்காரர்களும், மற்ற மற்ற வியாபாரிகளும் தங்களின் சரக்குகள் விசேஷமாக விற்பனையாகும் மாதங்களின் மீதே நாட்டமாய் மற்ற நாட்களை சீக்கிரம் தொலைந்து போகும்படி சபிக்கிறார்கள். உத்தியோகத்திற்கு மனுக்கள் செய்து கொள்பவர்கள் எப்போது தங்களை வாவென்று எழுதுவார்களோ வென்று எதிர் நோக்கி இடையேயுள்ள நாட்களை எப்படிப் போக்குவதோ வென்று ஏங்குகிறார்கள். ரயிலில் ஏறியவன் எப்போது இந்தப் பொழுது போய் தன் ஊர் நெருங்கும் நேரம் வருமோ வென்று நினைக்கிறான். அந்தந்த வீட்டாரும், டம்பமாய்ப் பெண்டு குட்டிகளுடன் வந்து குந்திக்கொண்டிருக்கும் விருந்தாளி எழுந்துபோகும் நாள் என்றைக்கு வருமோ, தினமும் விசேஷச் சமையல்செய்யும் பல செலவுச் சங்கடம் நீங்கும் பொழுது எப்போதோ வென்று எதிர்பார்க்கிறார்கள். வந்த விருந்தாளியோ காலையில் பலகாரம் ஆயிற்று, இனி மறுபடி சம்பிரமமாய் உண்ண மத்தியானப் பொழுது எப்பொழுது வருமோ என்கிறான். அதற்குப் பிறகு சிற்றுண்டி காபி யருந்தும் மாலை நேரம் எப்போது நேர்ந்து கொள்ளுமோ என்று வாயூறுகிறான். அதற்கும் பிறகு பலவகைகளுடனே பால் அன்னம் உண்ணும் இராப்பொழுது வருவது எப்போது என்கிறான். இப்படியே கைச் செலவில்லாமல் விசாரமற்று விருந்தினர்களாய் இருந்து மகிழும் நாள் எப்போது வருமோவென்று மற்றவர்கள் எதிர்பார்க்கிறார்கள். வீடு கட்டுபவன் வீடு எப்போது முடிந்து கிருகப் பிரவேசம் செய்வோமோ வென்று அந்த நாளை எதிர்ப்பார்க்க,

அவனிடம் வேலைசெய்யும் ஆட்களோ காலைப் பொழுது எப்போது போகுமோ, கூலி வாங்கும் மாலை வேளை எந்த நிமிஷம் தாளம்போட்டுக்கொண்டு வருமோவென்று அதிலேயே ஆவலாதிகொள்கிறார்கள்!

* * *

மாற்றாந் தாயாக வந்தவள் மூத்தவளின் பிள்ளைகள் எல்லாம் செத்து மண்ணாய்ப் போகும்நாள் எப்போது வருமோ, தன் வயிற்றில் இத்தனை வருஷங்களாகியும் ஒரு குஞ்சு குட்டியும் காணோமே, எப்போது தனக்கும் குழந்தைகள் பிறந்து எல்லா சொத்துகளும் தனக்கே சேரும் நாள் வருவதோ என்று அந்த நாளை எதிர்பார்த்து உள்ள நாட்களின்மீது வெறுப்புகொள்கிறாள். இந்தப் படுபாவி அவனை மயக்கி விட்டாளே, இவளைக் கட்டையிலே வைத்து எரித்துவிட்டு வேறொரு நல்ல மருகியாய்த் தேடிக்கொள்ளும் நாள் எப்போதோ என்று மாமிகள் எதிர்பார்க்க, இந்தப் பொல்லாத பெரிய மனுஷக் கூட்டங்களும், இவர்களின் ஊளைச் சத்தங்களும் என்றைக்கு ஒழிந்து நானும் என் புருஷனுமாய்த் தனிக் குடித்தனம் ஹாயியாய்ப் பண்ணுவோமோ வென்று மருகிகள் அந்த நாளின் மீதே நாட்டமாய் இருக்கிறார்கள்!

* * *

கடன் வாங்கியவனும் மூன்று வருஷத்துக் கெடுவு எப்படியாவது தாண்டிப் போகாதா, நம்முடைய கடன் (bar) பாராய்ப் போகாதா, கடன் தந்தவனை ஏய்த்துவிடும் பொழுது எப்போதோ, கடன் சீட்டு எவ்விதமும் ரத்தாகிச் செல்லாததாய்ப் போகாதாவென்று வாயைப் பிளக்கிறான்! குற்றம்செய்து சிறைச்சாலை சேர்ந்தவனும் 3-வருஷமோ, 4-வருஷமோ, 8-வருஷமோ, 10-வருஷமோ எப்போது கழிந்துவிடுமோ, என்றைக்கு விடுதலை நாள் எதிர்ப்பட்டுச் சிறைவிட்டு வெளிவந்துவிடலாமோ வென்று எண்ணங்கொள்ளுகிறான்! புருஷன் தன் மனைவிக்கு என்று மக்கள் உண்டாவார்களோ வென்று அந்த நாளைக் கவனிக்கிறான். கருதரித்த பெண்ணோ 10-மாதங்கள் எப்போது கழியுமோ, எப்போது வயிற்றிலுள்ள குழந்தையின் முகம் பார்ப்போமோ, அது ஆணோ, பெண்ணோ, சிவப்போ, கருப்போ வென்று கணக்கிட்டுக் கொண்டிருக்கிறாள். பிறகு பிள்ளையைப் பெற்றவுடன் அது எப்போது வளருமோ, ஐந்து வயது சீக்கிரமே வந்துவிடாதா, பள்ளிக்கூடத்துக்கு ஆசையோடும் அனுப்பிப் படிக்கவைக்கலாமோ என்று நாளோட்டத்தை நாடுகிறார்கள்! அப்பால் பள்ளிக்கூடம் போனபையன் படித்துவரும்போதே பெரிய வகுப்புகளில் ஏறுகிறதற்கு நாள் சீக்கிரம் சீக்கிரம் வந்துவிடாதா வென்று பேராசைப்படுகிறான். பரீக்ஷைகொடுக்கும் வருஷங்களின் மீதே பார்வையிட்டுக் கொண்டு திரிகிறான்! சில பள்ளிக்கூடப் பையன்கள் ஞாயிற்றுக்கிழமையும் சனிக்கிழமையும், ஜனவரி விடுமுறையும், கோடைகால விடுமுறையும் சீக்கிரம் சீக்கிரமே வந்துவிடாதா வென்று நினைக்கிறார்கள்!

* * *

இஃது இப்படியிருக்க, பாலியப் பிராயம் நேரும்போதே, நாம் சீக்கிரம் வளர்ந்து போய்விட மாட்டோமா, 18-20 பிராயம் சீக்கிரமாய் வந்துவிடாதா, அரையாளாய்ப்போக மாட்டோமா வென்று நினைக்கிறான்! அடிக்கடி கண்ணாடியில் மீசையைத் தடவித் தடவிப் பார்த்துக்கொண்டு நாமே அழகான ஆள், நமக்கு இப்போதுதான் வாலிபம்—இது முற்றுவது எப்போதோ வென்று எண்ணுகிறான். தன் அங்கங்களையும் தனது வாலிப நடையையும் கவனிக்கப் புகுந்து நமக்கு எவரும் பெண்ணை வலியக் கொடுப்பார்கள் என்று அந்த நாளை எதிர் நோக்கி மனக்கோட்டை கட்டுகிறான்! பாலியர்கள் தான் இப்படி யென்றாலோ, பாலிகைகளும் நாம் எப்போது பெரிய பெண்ணாய்ப் போவோமோ, அங்கம் ஒழுங்காகி ஆளுருவாய்த் தோற்றுவோமோ, எப்போது நம்மைப்பற்றி மேன்மையாய் நாலு பேர்களை யழைத்து வந்து என் மகள் 'வாழ்க்கைக்கு' ஏற்றவளானாள் என்று சொல்லிக் கொள்ளுவார்களோ, வதன அழகும், மற்ற இயற்கை அழகும் எப்போது உண்டாகுமோ வென்று காலம் சீக்கிரம் வருவதைக் கவனிக்கிறார்கள்! இடை நடுவில் வீட்டுக்குள்ளே பாட்டியாவது — பாட்டனாவது — தாயாவது — தந்தையாவது மகனுக்கு அல்லது மகளுக்குக் கல்யாணம் கட்டவேண்டுமென்று கதையை எடுத்தார்களோ, அதற்கு எப்படியாவது காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்து, அதன்மேல் அதே ஞாபகமாய் இரவும் பகலும் அதே சிந்தனையாய்த் தங்கள் சிநேகிதர்—சிநேகிதிகளோடு கலியாணக் கதையையே பேசிக்கொண்டு, என்றைக்கு எங்களுக்குக் கல்யாணமாகுமோ, என்றைக்கு நாங்கள் புருஷன் - பெண்சாதி சமேதமாய் வாழுவோமோ, என்றைக்குப் பிள்ளை குட்டியைப் பெற்றுப் பெருமை யடைவோமோ, கடைசியாக என்றைக்கு மங்கள மாங்கல்யம் கழுத்தில் விழுமோ, என்றைக்கு அந்த மூன்று முடிச்சு போடுவதோ வென்றும், அந்த நாள் நொடிக்குள் வரும்படி பெரிய ஆவலாய்க் காத்துக் கொண்டிருக்கிறார்கள்! இப்படி இவர்கள் எல்லோருமே நாள் ஓட்டத்திலேயே கண்ணாகி அதை ஓட்டிவிடவே பார்க்கிறார்கள். இன்னும் வெகு விரிவாயுள்ள மற்ற சங்கதிகளை அடுத்த முறை கொண்டு வந்து கொட்டி விடுகிறேன். நீங்களும் அதற்கு எட்டி எட்டி முட்டிப் பார்த்துக்கொண் டிருங்கள். ராம்! ராம்!! சுபம்!!! சூ!!!! சுவாஹா!!!!!



---

“அரசியல் விஷயங்கள் நமக்கொரு கடமையாக வரும்பொழுது அதை நாம் செய்துதானாகவேண்டும்.” (மிஸஸ் ஸ்லேட்.)

“மனிதனுக்கு மிகவும் சிரேஷ்டமாக இருக்கவேண்டியது ஸத்தியம். ஸத்தியத்திற்காகப் போராடும் பொழுது ராஜீய விஷயம் குறுக்கிடும் பக்ஷத்தில் அதையும் கடமையெனப் பாவித்துக் கவனிக்க வேண்டியது தான். ஸத்யத்தை விட்டுக் கொடுப்ப தென்பது கூடாது.”

(மிஸஸ் ஸ்லேட்.)

“எந்த வகுப்பாயிருந்தாலும், ஒரு வகுப்பைத் தனியாக வெளியே தள்ளும் ஒரு கட்சி தேச க்ஷேமத்துக்கு வேலை செய்வதாக மாட்டாது.”

(திவான்பகதூர் ஆரோக்கியசாமி முதலியார்.)

நீ ஆயிரம் வேலைகள் வைத்துக் கொண்டு சிறிதும் ஒழிவுநேரங்கூட இல்லாதிருந்தாலும், உன் ஜீவனார்த்தத்திற்கும், பிறருக்குப் பாரமாக இல்லாமல் உன் கை அன்னத்தை நீயாக உண்பதற்குமான பிழைப்பு வழியை நீ தேடிக் கொள்ளாத வரையில், உன்னுடைய மற்ற வேலைகளெல்லாம் வெட்டி வேலைகளாகவே முடியும்.

# மாதர் மனோரஞ்சிதம்

## ஸுமதி சரித்திரம்

அமராவதி தன் அறையில் உட்கார்ந்து பதிவிரதா சிரோமணியான ஸுமதியின் சரித்திரத்தை வாசித்துக்கொண் டிருந்தாள். அவள் தாயாரான விஜயலக்ஷ்மி அருகே அமர்ந்து கேட்டவாறிருந்தாள். அமராவதி சிறிது நேரம் வாசித்ததும் புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு அழுதாள். அதைக்கண்டு தாயார் ஏன் அம்மா அழுகிறாய்? உனக்கு என்ன தோன்றிற்று? சொல்; வியஸனப்படாதே; ஒரு காலத்தில் நீயும் அப்படியே நடக்கவேண்டி வரும்; ஸுமதி மகா பதிவிரதா ரத்நம்; வஸுதாமனென்னும் சக்ரவர்த்தியின் சிரேஷ்ட புத்திரி; அவள் நித்திய தரித்திரனாகிய ஒரு பிராமணனை விவாகம் செய்துகொள்ளும்படி நேரிட்டது; அதுவரையில் நீ படித்திருந்தாய். இன்றயதினம் மேற்பாடம் படித்ததில் உனக்கு ஏன் துக்கமுண்டாயிற்று; சொல் என்றாள்.

அமராவதி:—அம்மா, ஸுமதி மகாராஜனுடைய புத்திரியா யிருந்தும் வித்வத்துக்காக ஆசைகொண்டு தரித்திரனை மணந்தாள். அவள் பிதா பலவித புத்திகளைச் சொல்லியும் அவள் மனம் மாறவில்லை; ஸௌந்தர்யமும் ஸரஸ்வதீ கடாக்ஷமுமுள்ள விப்ரனுக்கு லக்ஷ்மி கருணை புரியவில்லை. அது போகட்டும்; ஸுமதி மாமி மாமனையும் பர்த்தாவினுடைய ஜேஷ்ட பிராதாக்களையும் புஷ்பங்களால் அர்ச்சித்து வருவதுடன் பதியின் சுசுரூஷைகளைப் பிரதிதினமும் மறவாமல் செய்கிறாள். மற்ற ஸ்திரீகளுக்கு அப்போதைக்கப்போது ஹிதோபதேசங்களையும் புரிந்து வருகின்றாள். அம்மா, அவள் அரச குமாரியாயிற்றே; தரித்திரன் வீட்டில் இத்தனை கஷ்டங்களை யனுபவிக்கிறாளே. கிருககிருத்யங்களை யெல்லாம் ஸுமதியே செய்கிறாள். அவளுக்கு ஏன் இவ்வித துன்பங்களைப் பகவான் கொடுத்திருக்கிறார்? அவள் இவைகளைக் கஷ்டமென்று நினையாமல் ஸந்தோஷத்தோ டிருக்கிறாளே. அவள் சரித்திரத்தைப் படிப்பவர்களுக்கு உண்டாகும் துக்கங்கூட அவளுக்கு இல்லையே. இதை நினைக்கையில் என்னை அறியாமலே அழுதுவிட்டேன் என்றாள்.

தாயார்:—(சிரித்து) அமராவதி, உத்தமிகளுக்குத் திரவியாபேக்ஷை யிராது. ஆபரண வேஷ பூஷணங்களை ஒருபோதும் இச்சியார். பொறாமை, சூது, வாது, களவுகளைக் கனவிலும் நினையார். ஸம்சார தர்மமே சிறந்ததென்று அதைப் பரிபாலனம் செய்வர். பதியே தெய்வம்; மாமன் மாமிகளே பூஜார்ஹர்; பரோபகாரமே ஜன்ம சாபல்யம்; ஸத்தியமே விரதம்; மகாராஜன் புத்திரியா யிருந்தாலும் அவள் அதை நினைக்கவில்லை. தர்மமே சிறந்ததென்று கருதினாள். உலகத்தில் எத்தனை நாள் வசித்தாலும் ஆசை ஒழியாது. ஆசையை யார் கிரமப்படி விநியோகித்தும், விடத் தகுந்த இடத்தில் விட்டும் பயனுள்ள விதமாய் உபயோகப்படுத்துகிறார்களோ அவர்களே உத்தமர்கள். பூஷணங்களும், வாஸனாதிகளும், தன தானியங்களும், மற்றமுள்ளவைகளும் தனக்குச் சொந்தமென்று அகங்கார முள்ளவரையில் உத்தம ஞானமுண்டாகாது. மமதையும் கோபமும் மனிதர்களுக்கு அதிசீக்கிரத்தில் வரக்கூடியவை. அவற்றை நிவர்த்திக்க அநேக நாட்கள் செல்லும். ஸகவாச தோஷத்தால் உண்டாகும் குணாகுணங்கள் காலாகாலத்திற் பலத்தைக் கொடுக்கின்றன. ஸகல கலா சிரேஷ்டையான ஸுமதிக்கு உத்தம குருவின் போதம் இருந்திராவிட்டால் அவளும் அரச குமாரிகளுக்குள்ள கர்வ சிந்தையையே வகித்திருப்பாள். அவளுடைய குரு பிரதிதினமும் போதித்த நன் மொழிகள் அவள் மனதில் நிலையாய் நின்றன. பக்குவ காலத்தில் திவ்ய ஞானமுண்டாயிற்று. உன் ஹிருதயத்தில் அவளைப் பற்றின சங்கதிகள் புகுந்தவுடன் வியஸனம் உதித்தது. நீ பெரியவளானால் ஸுமதியைவிடப் பதின்மடங்கு அதிகமாயிருப்பாய். நான் உன்னைக் கண்டித்துத் திருத்தியிராவிட்டால், நீயும் எதிர் வீட்டுப் பெண்ணைப் போல் விளையாட்டிலும் விநோதத்திலும் காலங் கழித்திருப்பாய். உத்தம ஸ்திரீ ரத்நங்கள் பத்துகோடி பவுன்கள் கொடுத்தாலும் தங்கள் மனதைத் துஷ்கிருத்யத்தில் செல்லவிடுவரா? படிப்பது எதற்காக? பெண்கள் பணிவுடன் நடப்பதற்கே. பெண் ணென்ற பெயருடையார் பர்த்தாவின் ஸேவகிகளாகவே இருக்கவேண்டும். பல பந்துக்கள் இருக்கின்றனர். ஆகாசத்தில் அநேக நக்ஷத்திரங்கள் இருக்கின்றன. எவ்வளவு பந்துக்களிருந்தாலும் தன் பர்த்தாவுக்கு ஸமானமாக அவர்கள் ஆவார்களா? சந்திரனுக்குச் சரியாகப் பல நக்ஷத்திரங்கள் பிரகாசிக்குமா? பதியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடவாத பெண் பதிவிரதை யாவாளா? அவன் குரூபியா யிருந்தாலும், விருத்தனானாலும், விவேக சூன்யனானாலும் மனைவி அவனை ஒருபோதும் திரஸ்கரிக்கலாகாது. ஜன்மாந்திர கர்மம் நல்லதையும் கெட்டதையும் விளைக்கின்றது. இதற்காக யாரை நொந்துகொள்ளலாம்? நாம் செய்யும் கர்மம் நல்லதா யிருந்தால் நல்ல பலன்களையும், கெட்டதா யிருந்தால் கெட்ட பலன்களையும் அடைகிறோம். ஸுமதி உத்தமி. அவள் தனக்குக் கிடைத்த பதியை அன்பாய் ஏற்றுக்கொண்டாள். அவ்வளவே நமக்குப் பிராப்தமென்று அதில் அளவற்ற திருப்தி கொண்டு ஆநந்திதையானாள். பதியே தெய்வமென்று கருதி, பதிபாத சேவையே பரம பாக்கியமென்று விரதங் கொண்டவர்களுக்கு மற்ற உலகத்துச் செல்வங்களில் சிந்தை ஒருபோதும் தோன்றாது. அவரவரே அநுபவித்துப் பார்த்தால் இதிலுள்ள ஆநந்தம் தெரியும். நாம் ஸ்திரீ ரத்நங்களாக உலகத்தில் ஏன் பிறந்தோம்? நம்முடைய ஸௌந்தர்ய ராசிகளால் உலகத்தை ஸௌந்தர்யப்படுத்தவே நாம் தோன்றினோம். நம்முடைய உத்தம குணத்தால் குடும்பங்களின் கௌரவம் அதிகரிக்கும்படி செய்யவே பகவான் நம்மை இவ்வுலகில் தோற்றுவித்தார். அழும் குழந்தைக்குப் பால் கொடுத்து ஆற்றுவது போல், துயர ஸாகரமாகிய இகலோக வாழ்வில் நமது பதிக்கு உண்டாகும் ஸகலவித கஷ்டங்களையும் அது ஒரு துன்பமாய்த் தோற்றாது ஸகித்துக்கொள்ளும்படி செய்வதற்கே ஜெகன் மோகினிகளான நம்மை அவர்களுக்குத் துணைவிகளாகப் பரமாத்மா பிறப்பித்தார்.

நம்மால் நமது பதியின் வாழ்க்கையையும், மிக்க ரமணியமான இவ்வுலகையும் எவ்வளவுக்கு மனோல்லாஸப்படுத்த இயலுமோ அவ்வளவுக்கும் நாம் முயன்று அழகுபடுத்தக் கடவோம். நமது பதிக்கு நாம் துணை; நமக்கோ அவர் துணை. ஒருவரை யொருவர் நம்பி பரஸ்பரம் ஒருமித்து ஈஸ்வர தியானத்தோடும் வாழ்க்கையை நடத்தினால் அதனினும் உயரிய பேறு, இன்பம், இவ்வுலகில் வேறு எது? கலகமிடவா நாம் பிறந்தோம்? கண்ணீர் விட்டு நமது பர்த்தா கலங்குவதற்காகவா அவருக்குத் துணைவியாக வந்தோம்? நமது முகத்தைக் கோணி அவர் மனத்தைக் கோணலாக்குவதற்காகவா நாம் அவரை மணந்தது? எப்போது பார்த்தாலும் அதிருப்தியை யுணர்த்தி அவரை நோகச் செய்வதற்காகவா நாம் வெகு நல்ல பெண்போல் தலை வணங்கி மணவறையில் உட்கார்ந்தது? எதற்காக நம்மை நமது பதிக்கு விவாகம் செய்து கொடுத்தார்கள்? அவர் ஸந்தோஷப்படவா, அல்லது துக்கப்பட்டு அழவா? உத்தமமான பெண் ஜன்மத்திற்குள்ள சிரேஷ்டத்தை யுணர்ந்து "பெண்" என்ன பதத்திற்குள்ள உயரிய கௌரவத்தைக் காத்து ஸுமதியைப்போல நாமும் நமது இல்லத்திற்கும், பதிக்கும் உலகத்திற்கும் ஹிதகாரிணிகளாய் நடக்கக் கடவோம். குழந்தாய்! நான் சொன்னதெல்லாம் தெரிந்ததா? என்றாள் தாயார்.

அதற்கு அமராவதி, அம்மா என்னையும் ஸுமதிபோல் உத்தமியாகுமாறு ஆசீர்வதியுங்கள் என்று தன் தாயாரை நமஸ்கரித்தாள். உலகத்தின் அபிவிருத்தி பெண்களைப் பொறுத்திருக்கின்றது. அப் பெண்மணிகளின் அபிவிருத்தி அவர்களுடைய கல்வியையும் ஞானத்தையும் உத்தம குணங்களையும் பொறுத்திருக்கின்றது. "இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை" என்ற வாக்கியம் மிக்க கௌரவார்த்தமானது.

---

ஒரு உத்தமனை வஞ்சித்துச் சேர்க்கிற பொருள் மற்றோரிடத்தில் கொடுத்து அடியோடு மோசம் போகும்படியான நிலைக்கே கொண்டு வந்து விடும்.

"பாரத நாட்டுப் பெண்பாலார் வயிற்றிலு மிந்நேளரோஜ் போற் புதல்வர் பிறந்து வாழ்க" என்று ஸ்ரீபாரதியார் முன்னொரு சமயம் வாழ்த்தினர். அங்ஙனமே ஆகுக.

"எளிய நடையில் கவிதை செய்யும் கடுமையான தொழில் மிகவும் அரியது" என்று பிரான்சு தேசப் புலவர் ஒருவர் கூறி யிருக்கிறார்.

பிறந்து ஐந்து வருஷங்களுக்குள் குழந்தைகள் தெரிந்து கொள்வது போல் பிற்காலத்தில் தெரிந்து கொள்வதில்லை. கர்ப்பம் தரித்தது முதல் அது கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறது. கர்ப்பம் தரிக்கும் காலத்தில் பெற்றோர்களிருந்து வரும் சரீர, மனோ நிலைமை சிசுவினிடம் பிரதிபிம்பிக்கிறது. கர்ப்ப காலத்தில் தாயினுடைய மனோ பாவத்தாலும் வழிகளாலும் குழந்தையில் மாறுத லேற்படுகிறது. பிறந்த பிறகும் குழந்தை பெற்றோர்களுடைய வழியையே பின்பற்றுகிறது. பிறகு வெகுகாலம் வரையில் குழந்தையானது வளர்ச்சிக்குப் பெற்றோரையே நம்பியிருக்கிறது.

(மகாத்மா.)

# 'ஆநந்த குணபோதினி' நேயர்கட்கு

## ஒரு விக்ஞாபனம்.

இந்த சஞ்சிகையுடன் நமது "ஆநந்த குணபோதினி"க்குப் பதினொரு மாதங்கள் நிறைகின்றன. ஒரு வருஷம் ஆவதற்கு இன்னும் ஒரு மாதம் தான் இருக்கின்றது. பத்திரிகைக்குரிய பக்கங்கள் 48-என்று இருப்பினும், 56-பக்கங்களுக்குமேல் பல முறையும் வெளிவந்துள்ளன. தமிழ் நாட்டில் இத்துணைச் சொற்ப சந்தா விகிதத்தில் இத்தனை அதிகமான பக்கங்களுடனும், ரம்மியமான எளிய இனிய செந்தமிழ் நடையில் இதைப்போன்றதொரு பத்திரிகை இதுவரையில் இல்லை யென்னும்படி அளவற்ற பிரயாசையுடனும் ஸமத்காரமாய் நடத்திவரப் படுகின்றது. சிறு சிறு மழைத்துளிகள் சேர்ந்து ஒரு பெரிய குளத்தை நிரப்புகிறது போல், சொற்ப தொகையாகிய இப்பத்திரிகையின் சந்தாவை முன்பணமாகச் செலுத்தும் சிரேஷ்டர்களான பல்லாயிரம் பேர்களால் "ஆநந்த குணபோதினி" திவ்யமாய் நடைபெற்று வருகின்றது. தென்னங் கன்றுக்கு அடியிற் கொட்டும் ஜலம் இளநீராகக் கிடைப்பதுபோலும், பல விருக்ஷங்களுக்கு இறைக்கும் ஜலம் பழத்தின் ருசியாக மாறுவதுபோலும் தேசாபிமானிகளாகிய "ஆநந்த குணபோதினி"யின் சந்தா நேயர்கள் செலுத்தும் சந்தாவானது அப்பத்திரிகையை விருத்தியாக்கி யாவருக்கும் பயன்படச் செய்கின்றது. "ஆநந்த குணபோதினி"யைப் பிரதி மாதமும் கிரமமாகப் பெற்று வாசித்து வந்தால் பரம பிரயோஜன முண்டாகுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

* * *

உலகத்தில் விவேகிகளா யிருப்போர் எப்பொழுதும் ஸாதுக்களுடைய ஸகவாஸத்தையே விரும்புவர். ஸாதுக்களின் ஸகவாஸம் கிடைப்பது அருமையாயின், நல்ல கிரந்தங்களையும் உத்தம பத்திரிகைகளையும் படித்து மனோல்லாஸப்படுவர். நமக்கேற்பட்டுள்ள அற்ப ஆயுளில் பாதிபாகம் நித்திரையிலும், கால்பாகம் உண்பது-உடுப்பது-உழைப்பது ஆகிய லௌகிக வியவகார விஷயங்களிலும் சென்று போவதால், மீதியுள்ள காற்பங்கையேனும் வியர்த்த மாக்காமல் ஸத்காலக்ஷேபமாகக் கழித்து மறுமையிலேனும் சுகத்தை யடையவேண்டும். மனுஷ்யன் எப்போதும் பெருமையைத் தரத்தக்க காரியங்களில் பிரவர்த்திக்க வேண்டும். கல்வியே அதற்குத் தக்க வழி. அந்தக் கல்வி புஷ்பத்துக்குச் சமானமா யிருப்பதாய்ப் பாவித்துக் கொள்வோம். அதன் வாசனையைப்போல் நன்னடக்கை யென்பது ஏற்பட்டிருக்கின்றது. வாசனையில்லாத புஷ்பம் எப்படிப் பிரயோஜனமற்றுப் போகிறதோ, அப்படியே நன்னடக்கையோ டிணையாத வித்தை பயனின்றிப் போகிறது. எந்தப் பத்திரிகையில் ஈச்வரப் பக்தியைப்பற்றிக் கூறப்படவில்லையோ அந்தப் பத்திரிகை எத்தனை சிலாக்கியமாய் எழுதப்படினும் அனாவசியமென்றே சொல்லுவோம். பலனைத் தராத மரமும், வாசனை வீசாத புஷ்பமும், ஆசைகளைத் துறக்காத துறவியும் விரும்பத்தக்கவரல்லர். அது போல் ஸர்

வோத்தமமான மதத்தின் சிறப்பையும், ஆசாரியரின் பெருமையையும், ஸத் விஷயங்களையும், ஆஸ்திக பக்தியையும், அநுபவ பூர்வமான போதனைகளையும் விவரிக்காத பத்திரிகை அறிவுடையோரால் விரும்பத்தக்கதல்ல. "ஆநந்த குணபோதினி"ப் பத்திரிகையோ அதன் பெயருக்கேற்றபடி ஸகல மங்களங்களையும் அளிக்கத்தக்கதாய், எல்லோரும் வாசித்து ஸந்தோஷப்படத் தக்க பரம சிலாக்கியமாய் அமைந்திருக்கின்றது. இப்பத்திரிகையை வாசிக்கும் நண்பர்கள் இதன் பெருமையை உணரத்தக்கவரே யன்றி ஏனையோர் அறியமாட்டார். "மனை புகு சேவகன் முனிந்தார்ப்பது போல், கசடறக் கற்ற கல்வியாற்றலால் தன்னைப் புகழத் தகுமென"ப் பெரியோர் மொழிந்த தற்கேற்ப, நாமும் இப்பத்திரிகைக்கு இயற்கையிலேயே உள்ள சிலாக்கியங்களை இங்கு எடுத்துரைத்து நமது அன்பர்களுக்கு ஞாபகப்படுத்தலானோம்.

***

இந்தப் பதினொரு மாதங்களாய் இவ்வுத்தமமான பத்திரிகையைத் தங்கள் சொந்தப் பத்திரிகை யென்று பாராட்டி ஆதரித்து வரும் நமது நண்பர்கள் தங்களுடைய அபிமானம் வேறிடம் செல்லாமல் இப்பத்திரிகையிலேயே என்றும் நிலைத்திருக்கும்படி செய்ய வேண்டியது அவர்களின் கடமை. நமது பத்திரிகையை அபிமானித்துவரும் ஒவ்வொரு சந்தா நேயரும் தத்தம்மாலியன்றமட்டில் புதிய சந்தாதார்களை "ஆநந்த குணபோதினி"க்குச் சேர்த்து உபகரித்து உள மகிழ்ச்சியுடன் எந்நாளும் ஆதரித்து வருமாறு வேண்டுகிறோம்.

குறிப்பு :—நம்து பத்திரிகையின் இரண்டாம் ஆண்டு பிரபவ வருஷ சந்தாத் தொகையை அடுத்த பங்குனி மாதமே மணியார்டர் மூலம்-சென்னை தங்கசாலைத் தெரு, 302, ம-ா-ா-ஸ்ரீ தி. இராஜகோபால் முதலியாருக்கு அனுப்பிவைக்குமாறு கோருகிறோம்.

பத்திராசிரியர்.

---

## விநோதக் களஞ்சியம்

அப்பா அம்மா :—

இருநண்பர்கள் ஹோட்டலுக்குப் போய் காபி சாப்பிட்டனர்.

ஒருவன் :—நண்பா, நீ அம்மாவாக இருந்து எனக்குப் பாதி உன் காபியிலிருந்து கொடு.

அங்ஙனமே செய்து விட்டுக் கடைசியில்,

மற்றவன் :—இப்பொழுது நீ அப்பாவாக இருந்து அம்மாவுக்கும் சேர்த்து ஹோட்டல்காரனுக்குப் பணத்தைக் கொடுத்து விடு!

***



தந்திரமான பதில் :—

ராமன் :—நான் ஆறு ரூபாய் அந்த இடத்தில் தரவேண்டியிருக்கிறது. அதை நீ இப்பொழுது கொடுத்து விடு. இரண்டு மாதத்தில் உனக்குத் திருப்பித் தந்து விடுகிறேன்.

அப்பாய் :—இரண்டு மாதத்தில் தந்துவிட முடியுமல்லவா? அப்படியானால் நான் அந்த இடத்தில் இன்னும் இரண்டு மாதம் பொறுத்துக்கொள்ளும்படி சொல்லி வைக்கிறேன்.

***

அதது அவரவர் நெஞ்சிலே :—

சிலைப்புத் தம்பி :—உங்களைக் காணவே இரயிலிலிருந்து நேராக இங்கு வந்தேன். வெகு நேரமாகப் பேசியும் உங்கள் வீட்டுச் சங்கதிகள் ஏதும் சொல்லக்காணோமே?

வெளுப்பு அண்ணு :—ஆம் அப்பா, நீயும் ஏதேதோ வெட்டி வார்த்தைகளைப் பேசுகிறாயே தவிர, உன் சொந்த சங்கதிகளை வெகு பக்குவமாக மறைத்து மூடி நிற்கிறாயே. அப்படித்தான் அப்பா பிறரும்.

***

நாணய நடிப்பு :—

வேணு :—அவன் வெகு நாணயக்காரன். எப்போதும் சொன்ன கெடு தவறாமல் கடனைத் திருப்பிக் கொடுப்பவன். அவனிடம் எவ்வளவு தொகைக்கும் நம்பித் தரலாம்.

சீனு :—கடைசியில் எல்லாருக்கும் குல்லாபோட்டுக் கம்பி நீட்டுவதற்கே அவன் இப்போது வெகு வெகு நாணயமாய் நடப்பது! பிறகு பெரிய தொகையுடன் ஓடவே போகிறான். வேண்டுமானால் நீயே பிறகு பார்.

***

பதிவிரதை :—

வக்கீல் :—எனது ஆபீஸ் குமாஸ்தா மிகுந்த கோபமாயிருக்கிறார். இன்று காலையில் 'டெலிபோன்' மூலமாக நீ அவரைக் 'கண்ணு பின்னு' வென்று வைதாயாமே. நாயே, பேயே என்று அழைத்தாயாமே. அவமான நஷ்ட வழக்கு தொடுக்கப் போவதாகப் பயமுறுத்துகிறாரே?

மனைவி :—அடடா: நான் 'டெலிபோ'னில் பேசியது உங்களுடன் என்றல்லவோ எண்ணியிருந்தேன்!

***

இல்லற சுகம :—

முகத்தில் காயத்துடன் அங்கு மிங்கும் அவன் அலைந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டவர்கள் இரக்கமுற்று, "உன்னை வீட்டிற்கு அழைத்துச் சென்று உன் மனைவியிடம் ஒப்புவிக்கிறோம் வா" என்றனர்.

அவன் :—இல்லை, இல்லை. அவளிடம் தானே நான் இந்தக் கஷ்டத்தை

**காரியம் முடிந்ததும் வேறுவிதமான மாதிரி :—**

அப்பன் :—திரும்பி இப்பக்கம் வருவது நிச்சயம். அப்போது புஸ்தகம் அவசியம் கொண்டுவந்து கொடுக்கிறேன். படிக்க இரவலாக ஏதாவது ஒரு புஸ்தகம் தா.

(அவ்விதமே தர, அதைப் பெற்றுக்கொண்டு)

அப்பன் :—போய் வரட்டுமா? சமயப்பட்டால் மறுபடியும் வந்து பார்க்கிறேன்.

சுப்பன் :—என்ன அப்பா, புஸ்தகம் கேட்டபோது மறுபடியும் இப்பக்கம் வருவது நிச்சய மென்றாய். அதைப் பெற்றவுடனே "சமயப்பட்டால்" வருகிறேனென்று வார்த்தையை இழுக்கிறாயே. இரவல்போல் புஸ்தகத்தைப் பெற்றுப் பிறகு தனக்கே சொந்தமாக்கிக் கொள்ள நினைக்கிற தந்திரமா இது? உன் புஸ்தகம் என்னிடத்தில் ஒன்று தங்கியிருந்து விட்டால் அப்போது மட்டும் அக்கரையோடு வருவாயோ?

---

# பூர்வகாலத்து அரசர்களின் போக்கு

பூர்வகாலத்து அரசர்களிற் சிலரது போக்கு இக்காலத்தில் கேட்பதற்கு மிக்க விநோதமாய்த் தோற்றும். அவர்களில் சிலரைப் பற்றிய குறிப்புகளை இங்கு தருகிறோம். பூனாபட்டணத்து அரசனுக்கு இரண்டு பிரதான மந்திரிகள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் புரோகிதராயும் கோவில்களில் பாடுகிறவராயும் இருந்தார். மற்றொருவர் எங்கேயோ எளிய வேலை செய்து கொண்டிருந்த கூலிக்காரர். ஜயபூர் ராஜாவினுடைய பிரதான மந்திரி ஜாதியில் நாவிதர். ஹோல்கார் தேசத்தை முதல் முதல் கைக்கொண்டவர் ஒரு இடையனாவர். ஸிந்தியா தேசத்தரசர் ஊர் பேர் தெரியாத ஒரு தாழ்ந்த குடித்தனக்காரராய் இருந்தவர். ஹைதர் முதலில் குதிரைப் பட்டாளத்தில் ஒருவராயிருந்தவர். இம்மாதிரி அநேகம் எளியவர்களெல்லாம் உயர்ந்த அதிகாரத்திற்கு வரக் கண்டிருக்கிறோம். மேலும் முற்காலத்தரசர்கள் அநேகருக்கு வெகுமதியாய் அநேகம் கிராமங்களும் தனங்களும் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் பலவிதமாய் அநேகருக்கு உபகரித்திருக்கிறார்கள். ஆயினும் இதற்கு மாறாக அநியாயங்களும் அநேகம் நடந்து வந்தன. அது எந்தக் காலத்திலும் உள்ள சங்கதிதான்.

***

பூர்வகால ஆளுகையில் நூறு திருடர்கள் கையும் விலங்குமாய் அரசன் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டபோது, அவ்வரசன் விசாரணை முதலியவை ஒன்றும் நடத்தாமல், உடனே அவர்களுக்கு சிக்ஷை விதித்தான். அவர்களில் தலைவனை நாய்களை விட்டுச் சின்ன பின்னமாய்ப் பிடுங்கும்படியாயும், மற்றவர்களைக் கொலை செய்யும்படியாயும் கட்டளை யிட்டான். அப்படியே முதல்வனைப் பன்னிரண்டு நாய்களை விட்டுத் துண்டு துண்டாய்ப் பிடுங்கும்படி செய்தார்கள். மற்றவர்களைத் தெருவுக்கு நாலு பேராய்ப் பிரித்து அங்கங்கே அவரவர்களைக் கொலை செய்தார்கள். அவர்களில் பதின்மூன்று பேரைக் கையுங் காலையும் சேர்த்துக் கட்டிக் கொஞ்சம் ஓட்டிக்கொண்டிருக்கும்படி தலையை வெட்டி ரத்தம் தாரை தாரையாய்ப் பெருக ஆவி துடிக்க வேடிக்கை பார்த்தார்கள்.



***

பதினேழாவது நூற்றாண்டில் ஒரு தீர்ப்பு நடந்தது. ஒரு ராஜாவினிடம் நான்கு திருடர்கள் விசாரணைக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவன் ஒரு வீட்டில் கன்னம் வைத்து ஒரு பெண் பிள்ளையையும் மூன்று குழந்தைகளையும் கொலை செய்தான். அவனைக் கைகளையும் கால்களையும் வெட்டி விட்டு ரஸ்தாவுக்குப் பக்கத்தில் விசிறி யெறிந்துவிடும்படியாயும், மற்ற மூவரும் வழி மடக்கி அடித்ததனால் தலையை வெட்டும்படியாயும் அரசன் போஜனம் செய்துகொண்டே தீர்ப்பு சொல்லி யனுப்பினான்.

***

1638-ம் வருஷத்தில் ஆமடாபாத்து அரசன் சில இங்கிலீஷ்காரர்களுக்கு விருந்து செய்ய வேண்டுமென்று அதற்காகச் சில தாசிகளை வரும்படி கட்டளையிட்டனுப்பினான். அப்போது அவர்களுக்கு இதைப் பார்க்கிலும் உயர்ந்த வரும்படி வேறோரிடத்தில் அன்று கிடைக்கும்படியாக இருந்ததினால், இப்போது வரக்கூட வில்லையென்று அரசனுக்கு ஏதோ சாக்கு சொல்லியனுப்பினார்கள். அது தெரிந்து அரசன் கோபம் கொண்டு உடனே அந்தப் பெண்களை யெல்லாம் பிடித்துக்கொண்டு வரச் செய்து, விருந்துக்கு வந்திருந்தவர்களின் முன்னிலையில் சிரச்சேதம் பண்ணினான். விருந்தாளிகள் இந்தப் பயங்கரமான கொலைகள் எதற்காக வென்று கேட்டதற்கு, நான் இப்போது இவர்களைச் சிக்ஷியாமல் விட்டு விட்டால், இந்தத் தேசம் இன்னும் ஒரு நிமிஷமாவது என் கையில் இருக்குமாவென்று சமாதானஞ் சொன்னான்.

***

மற்றொரு அரசன் செய்தியைச் சொல்லுவோம். அந்த அரசனின் பெயரை இங்கு குறிப்பிட விரும்பவில்லை. அந்த அரசன் காட்டுமிருகங்களோடு மனிதர்களை எதிர்க்கச் செய்து வேடிக்கை பார்ப்பதில் உத்ஸாகமுள்ளவன். அவன் ஒரு தடவை ஒருவனைச் சிங்கத்தோடு எதிர்க்க விட்டான். அந்த யுத்தவீரன் நெடுநேரம் அதனுடன் போராடிக் கடைசியில் தன் கையிலிருந்த ஈட்டியால் அதன் தொண்டையில் குத்தித் தான் ஜெயமடைந்தான். அதைக் கண்டு அரசன் அந்த வீரனது தலையை வெட்டி அத்தலையை யானை மேல் வைத்து ஊர்வலம் வரச் செய்தான். ஒருவன் புலியை எதிர்த்து இறந்தான். மற்றொருவன் ஒரு புலியோடு சண்டை செய்து அதி சாதுரியமாய் அதன் நான்கு கால்களையும் வெட்டினான். அரசன் அதற்காக அவனைக் கொண்டாடி அநேக வெகுமதிகள் செய்து பிருதுகளும் கொடுத்தான். அவனது தலை போகாதது அவனுடைய அதிர்ஷ்டகாலம் தான். இப்படியே முற்காலத்து அரசர்கள் ஒரு நிலையாய் இருக்கவில்லை. அவர்களில் அநேகர் தர்ம மார்க்கதரிசிகளாய் இருந்தார்களென்பதையும் நாம் எடுத்துக் காட்ட மறந்துவிடக் கூடாது.

# உதார குணத்தின் உன்னதம்

(368-ம் பக்கத் தொடர்ச்சி.)

**உதார குணத்தின்** உன்னதத்தைப் பற்றி முன்னொரு பத்திரிகையில் எழுதியிருந்தோம். அதில் போஜ மகாராஜனை மட்டுமே விசேஷமாகச் சொல்லப்பட்டிருந்தது. உதாரகுணச் செல்வர்களைக் குறித்து இத்தேசத்தில் மாத்திரமன்றி இங்கிலாந்து முதலிய தேசங்களிலும் பற்பல திருஷ்டாந்தங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றை மாத்திரம் இங்கு சுருக்கமாய்க் குறிப்பிக்கின்றோம்.

முன்னொரு காலத்தில் ஒரு மகாப்பிரபு லண்டன்மா நகரத்தில் அரசாட்சி செலுத்தி வந்தான். ஒரு நாள் அந்தப் பிரபு வேட்டையாடுவதற்கு வனத்திற்குச் சென்று வெகு தூரம் திரிந்து வேட்டையாடிக் களைத்து, வெகு வேகமாய்த் திரும்பி வந்து கொண்டிருந்தான். வருகையில் ஓரிடத்தில் மிக்க வடிவழகுள்ளவளான ஒரு பெண்மணி ஒரு கிணற்றில் நீர் சேந்திக் கொண்டிருந்தாள்; அப் பெண்ணைப் பார்த்து அந்த மகாப்பிரபு அவ்விடத்திற்குப் போய், ஓ ஸ்திரீ ரத்னமே! தாகத்திற்குக் கொஞ்சம் ஜலம் கொடுப்பாயா என்று கேட்க, அந்த யுவதி அவன் முகத்தைத் திரும்பிப் பார்த்து மிகக் களைத்திருக்கிறானெனத் தெரிந்து பருகுவதற்கு வேண்டிய நீரை வணக்கத்தோடும் உதவினாள். அதை யருந்தி அப்பிரபு தன் தாகத்தைத் தணித்துக்கொண்டு, அந்த அங்கனாமணியின் முகத்தைப் பார்த்து, இப்பெண்ணரசு ஒரு ஏழை வீட்டில் பிறந்தவளென்று தோன்றுகிறது; இவ்வளவு ரூபலாவண்யமுள்ள கன்னிகை இம்மாதிரி கடினமான முரட்டு வேலைகள் செய்யத் தகுந்தவளல்லள்; அளவற்ற பாவம் செய்து ஏழை வீட்டில் பிறந்தாள். நம்முடன் வருவாளேயாகில் நமது பட்டணத்தில் இப்பெண்ணுக்குத் தகுந்த ஒரு நாகரீகமான வேலை தேடிக் கொடுக்கலாமென்று தனக்குள் தானே ஆலோசித்துக்கொண்டு, அந்த ரமணீமணியை யழைத்து, ஓ பெண்கள் நாயகமே! நீ என்னுடன் வருவாயாகில் சுகமாக ஜீவனம் செய்யும் வழி ஒன்று உனக்குக் காட்டுகிறேனென்று சொன்னான்.

அப்பெண் அந்தப் பிரபு தன் மேல் இரக்கத்துடனும் சொன்ன வார்த்தையைக் கேட்டு வெகு ஸந்தோஷத்துடன் சிரித்து அவனுக்கு வந்தனம் செய்து, ஓ மகாப்பிரபுவே! அன்று எழுதிய எழுத்தை ஆண்டவன் மறுபடி அழித்து எழுதுவானோ? இந்த நியாயம் தங்களுக்குத் தெரியாததோ? அன்றியும் 'ராமேசுவரம் போனாலும் சனீசுவரன் விடாது' என்கிற பழமொழியையும் கேட்டிருக்கிறோமே. நான் எவ்விடம் போனபோதிலும் என் தலையெழுத்துத் தப்புமா? ஆகையால் இவ்விடத்துக் காரியத்தை விட்டு நான் உங்கள் ஊருக்கு வருவது கூடாது; அல்லாமலும் என் தாய் மிகவும் தள்ளாதவளாய் எழுந்திருக்கச் சக்தியற்று வீட்டிலே படுத்திருக்கிறாள். அவளை இவ்விடத்தில் விட்டு நான் உம்முடன் வந்து விடுவேனேயாகில், பெரும் பழிக்கு ஆளாவேன்; அன்றியும் என் பிரிய மாதாவை ஆதரிப்பவரும் ஒரு



வருமில்லை யென்று சொன்னாள். அதற்கு அந்தப் பிரபு உன் தாயையும் அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து அங்கே சுகமா யிருக்கலாம். நல்லது, உன் தாய் எங்கே யிருக்கிறாள்; போய்ப் பார்ப்போம் வா வென்றான்.

அப்படியே அந்தப் பெண் அப்பிரபுவைத் தாங்கள் இருக்கும் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு சென்றாள். அவ்விடத்தில் அரையில் கட்டிக்கொள்ளக் கந்தை கூட இல்லாமல் படுத்திருந்த கிழவியை அவ்வரசன் கண்டு, ஐயோ பாவம், இப்படிப்பட்ட எளிய குடும்பத்தை நான் எங்கும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை; அதனோடு கூட உகிர்ச்சுற்றின் மேல் உலக்கை விழுந்தது போல், இக்கிழவியும் நோயும் பாயுமாய்ப் படுத்திருக்கின்றாளே: இவர்களின் கஷ்டத்தைக் கடவுளே கடாக்ஷித்துப் போக்கவேண்டுமே யல்லது நம்மைப் போன்றவர்கள் ஒருபோதும் தீர்க்க முடியாதென்று சொல்லிச் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அந்தக் கிழவி அரசனை நோக்கி, ஓ ஸ்வாமி! நான் இந்தப் பெண்ணை, என் மட்டில், தெய்வமென்றே சொல்லவேண்டும்; இவள் செய்து வருகின்ற உபசாரத்தினாலேதான் நான் இவ்வளவாவது இருக்கின்றேன். இல்லாவிட்டால் நான் இத்தனை நாள் என்ன கதியா யிருப்பேனோ? ஆதலின் நீர் இப்பொழுது என் நிலைமையைப் பார்த்து ஸந்தோஷப்பட வேண்டுமேயன்றி வியஸனப்படக் கூடாதென்றாள். அது கேட்டு அந்தப் பிரபு அவர்களுடைய மனவுறுதியைக் கண்டு மிகவும் வியந்து, கிழவியின் புத்திரியை நோக்கி, நங்காய், உன் தாயை இங்கே அழைத்துவா என்று சொன்னான். அங்ஙனமே அப்புனிதவதி தன் மாதாவை அவன் அருகில் அழைத்துவர, அப்பிரபு தன் பையிலிருந்து இரண்டாயிரம் ரூபாய்களை எடுத்துக் கிழவியின் கையில் கொடுத்து, தாயே! உன் பெண் மிகவும் அறியாத சிறுமி; இந்தப் பணத்தை நீ பத்திரமாய் உன்னிடத்திலேயே வைத்துக்கொண்டு அன்றன்றைக்கும் செலவுக்கு வேண்டியதை உன் பெண்ணிடத்தில் கொடுத்துக் காய் கறி முதலியவைகளை வாங்கி வரச்செய்து நீங்கள் இருவரும் சுகமாக ஜீவனம் செய்து கொண்டிருங்கள். உன்னுடைய அந்திய காலத்தில் மிகுந்த ரூபாயை உன் குமாரத்திக்கு ஆஸ்தியாகக் கொடுத்துவிடு; நானும் உங்களைப்பற்றி எப்போதும் கவனம் வைத்து வருகிறேன் என்று சொல்லி அவர்களை மகிழ்வித்து அன்புடன் விடை பெற்றுக்கொண்டு தன் நகருக்குச் செல்வதானான். உதார குணத்தின் இயற்கைப்போக்கு இன்னவாறென்பதை இங்கு கண்டீர்களா? நீங்களும் இவ்விதமே உங்கள் சக்திக்கு இயன்ற வரையில் பிறருக்கு உதவி உதாரகுண முள்ளவர்களாகப் பரிமளித்திடுக.

---

எமது சஞ்சிகையை மாத மிரு முறை (வருஷச் சந்தா ரூ. **2**/-) ஆக பிரசுரிக்க ஏற்பாடு செய்ய சந்தாதாரர்களின் உதவிவேண்டும். 2000 சந்தாதாரரின் சந்தாப்பணம் முன்னதாக பங்குனிமீ 10உக்குள் எமக்கு வந்து விட்டால் 2-ம் கமலத்தை மாதமிருமுறை பிரசுரிப்போம்.

எவ்வளவோ ஏழைகள், எத்துணையோ கற்றறிந்த எளிய நிலையினர் தங்களுக்கு எவ்வாறேனும் ஜீவனத்திற்கு வழி காண்பித்துத் தங்களை என்றைக்கும் ஆதரவு செய்வார்களென்று நம்பி ஐசுவரிய ஸம்பன்னர்களை வெகு தூரம் நம்பி விடுகிறார்கள். ஐயோ பாவம்! கடைசியில் முடிவு என்ன? அந்தச் சீமான்கள் உதாரகுண மற்றவர்களாய் அவர்களைக் கைவிட்டுவிட்டு மெதுவாக நழுவி விடுகிறார்கள். எங்கே அவர்கள் ஒட்டிக் கொள்வார்களோ வென்று ஸம்சயித்து, தங்களிடம் நெருங்கவொட்டாதபடி செய்து தந்திரமாய் விலகிக்கொண்டு விடுகிறார்கள். உதவி செய்வதில் மட்டுமல்ல, தங்கை, தமக்கை, தம்பி, தமயன் இவர்களைக் கடவுளுக்கு ஒப்புவித்து விட்டவர்கள் அவர்களின் பிரிவாற்றுமை தாளாமல் அதற்குப் பதிலாக மற்றவர்களை தங்கை, தமக்கை, தம்பி, தமயன் என்று உள்ளன்போடும் உறவு கொண்டு அளவு மீறிய பாசத்தை அப்புதியவர்களிடம் வைத்து பழய ஆசையோடும் அலைகிறார்கள். இத்தகைய பரிதாபஸ்தர்களிடம் மற்றவர்கள்உண்மையான அன்பும் ஆதரணையும் பாராட்டி உதாரகுணத்தோடும் நடந்து கொள்ளக் கூடாதா? அவ்வாறு நடந்து காலகதியால் பிரியக் கொடுத்த அவர்களுக்கு ஒரு ஆத்மதிருப்தியையாவது உண்டு பண்ணலாகாதா? இது கைச்செலவு இல்லாமல் செய்யக் கூடிய உதாரகுண மாயிற்றே! ஐயோ! அதற்குப் பதிலாக அவர்களை அன்னியர்களாகப் பாவித்தும், அவர்களின் நெஞ்சு வேகும்படி புண் சொற்களால் வருத்தியும், எதிலும் பட்டுக்கொள்ளாதபடி பாசாங்கினராக மாறியும், உள்ளத்தில் அன்பும் அநுதாபமும் அற்றவர்களாய்க் கருணை கெட்டுக் கைவிட்டு விடுகின்றார்கள்! அந்தோ அந்தப் பரிதாபமான ஏழைகளின் கண்ணீரைக் கடவுள் தான் துடைத்து ஆற்றவேண்டும்.

# எங்கே ஆநந்தம் காணப்படும்?

1. புதிய காதலில்.
2. எதிர் நோக்கிய பணம் கிடைப்பதில்.
3. குழந்தையின் மழலை மொழியில்.
4. கலக மில்லா வீட்டில்.
5. கடன் இல்லாப் புசிப்பில்.
6. பலருடன் உண்ணும் விருந்தில்.
7. ரயிலில் எதிர் நோக்கியவர் வருவதில்.
8. பழய பந்து தரிசனத்தில்.
9. தன் ஊர் சேருகையில்.
10. பகவத் தரிசனத்தில்.
11. நல்ல நேசம் செய்வதில்.
12. நல்ல எண்ணம் கொண்டிருப்பதில்.
13. பிறர்க்கு உதவி புரிவதில்.
14. நட்பான கடிதங்கள் வரைவதில்.
15. உடன் பிறப்பினாது அன்பில்.
16. ஜீவனத்திற்கு வழி கிடைத்ததில்.
17. பிரிந்தோரைச் சேர்தலில்.
18. இனிய வசனம் பேசுவதில்.
19. பிறாது சிறு உதவியையும் நினைப்பதில்.
20. சுயநல மற்ற பரோபகாரத்தில்.
21. எல்லா மனிதருடனும் கலந்திருப்பதில்.
22. பரிசுத்தமான எண்ணத்தில்.
23. நாம் விரும்பிய வேலையில்.
24. பரஸ்பர நம்பிக்கையில்.
25. தேகப் பயிற்சிக்கானபொழுதில்.
26. அறிவை விசாலப்படுத்துவதில்.
27. நம் கடமையைச் செய்வதில்.
28. பிறரை மகிழ்விப்பதில்.
29. நல்ல கிரந்தங்களை வாசிப்பதில்.
30. உலக வாழ்க்கையின் லாப நஷ்டங்களைப் புன் சிரிப்போடு வகித்தலில்.
31. தபாலை எதிர் பார்ப்பதில்.
32. தேச சஞ்சாரத்தில்.
33. புது நூல் இயற்றுதலில்.
34. புது பதவி ஏற்பதில்.
35. வெற்றிமேல் வெற்றியில்.

நமது "ஆநந்த குண போதினி 'பிரபவ' நாம சம்வஸ்தர அற்புத ஸர்வ முகூர்த்த திருக்கணித பஞ்சாங்கம்" தயாராகி அச்சிடப்பெற்று வருகின்றது. மாசிமீ 15உக்குள் பகவத் ஸங்கல்பத்தால் வெளி வரும். 80-பக்கங்கள் கொண்டது. எல்லா விஷயங்களும் அடங்கியுள்ளன.

நமது ஆநந்த குண போதினிக்கு (இரண்டாவது ஆண்டு) பிரபவஞுலத்திய சந்தாத் தொகையை இம்மாத சஞ்சிகை கிடைத்ததும் மணியார்டர் மூலம் அனுப்பும் சந்தா நேயர்களுக்கெல்லாம் கிரயமில்லாமலும், தபாற் செலவில்லாமலும் அநுப்பப்படும்.

தி. இராஜகோபால முதலியார்,

302, தங்கசாலைத் தெரு, மதறாஸ்.

# சில பதங்களின் குறிப்பு

துந்துபி யென்பது ஒருவித வாத்தியத்தைக் குறிக்கிறது. தமிழ் வருஷத்தின் பெயர்கூட 'துந்துபி' என்றிருக்கிறது. சில வேளைகளில் துந்துபி என்பது குறிப்புப் பெயராய் வழங்குகின்றது. துந்துபி என்பது பாச்சிக்காயையும் குறிக்கிறது. துந்துபி என்பது சில வேளைகளில் ஏளனமாய்ப் பிரயோகப்படுத்தினால் பருத்த சரீரி என்று அர்த்தமாகும். துந்துபி என்பது பாச்சிக்காயின் ஒருவித வீழ்ச்சிக்குப் பெயராகும். சதுரங்கப் பலகையில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு நகர்த்தப்படும் காய்களும் துந்துபி யெனலாம். துந்துபிக்கு திரிகத்வயம் என்ற அர்த்தமுண்டு. அதாவது இரண்டு மூன்றுகள் தோன்றும்படி விழும் பாச்சிக்காய்க்குப் பெயர். துந்துபி என்பது ஒரு விஷம் அல்லது விஷப் பாம்பு என்று அர்த்தமுண்டு. ஒரு எருமை முகத்தையுடைய ராக்ஷஸனுக்குத் துந்துபி என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணபகவானுடைய புத்திரர்களில் ஒருவனுக்குத் துந்துபி என்ற பெயர் இருந்தது. ஒரு ஸ்திரீயைத் துந்துபி யென்றால் "அவள் ஊத்திக் கூவுகிறவள்" என்று அர்த்தமாகும். டாம்டாம் அதாவது தமுக்கு துந்துபி யல்ல. துந்துபி என்பது நகாரைப் போன்ற பெரிய வாத்தியம். ஒரு ஸ்திரீயைத் துந்துபி என்றால் அது அவளுடைய மதிப்பைக் குறைக்கும். அத்துடன் அவள் அருகே யிருக்க யோக்கியமல்ல வென்று அர்த்தமாகும்.

***

ஒரு ஸ்திரீயை ராக்ஷஸி யென்றால் அவள் அடக்க முடியாத சண்டைக்காரி அல்லது கூச்சலிடுகிறவள் என்று பொருள்படும். ராக்ஷஸனுடைய குணம் கொடுந்தன்மை. மகா குரூரமான செய்கையுள்ளவன் என்று கூறுவர். ஆயினும் ராக்ஷஸன் என்பது சில வேளைகளில் பிரீதிப் பெயராயும் வழங்கக்கூடும். சிறு குழந்தைகள் பலமுடையதாயிருந்து பெரிய பாத்திரத்தைத் தூக்கினால் ராக்ஷஸனென்று சிலாகித்துச் சொல்லுகிற வழக்கமுண்டு. சில வேளைகளில் பெருத்த தொண்டை வாயனையும் ராக்ஷஸன் என்பார்கள்.

***

துர்முகி யென்பது ஒரு வருஷத்தின் பெயர். ஆயினும் இடத்திற்குத் தகுந்தபடி பொருள்படும். துர்முகி யென்பது அவலக்ஷணமுள்ள அல்லது பயங்கரமுள்ள பெயர்வழியென்று பொருள்படும். ஒரு ஸ்திரீயைத் துர்முகி யென்றால் மிகவும் கேவலப் படுத்திச்சொல்லும் பதமாக அமையும். நடத்தை கெட்டவள் என்றுகூட அதற்குப் பொருள் கற்பிக்கலாம்.

***

"பைத்தியமான" என்ற சொல்லுக்குத் "தலை கால் தெரியாத" என்று அர்த்தமாகுமென்று ஒரு வழக்கில் வாதிக்கப்பட்டது. "கவர்ன்மெண்டாரின் பைத்தியமான செயல்களால்"—என்பதற்கு "கவர்ன்மெண்டாரின் தலை கால் தெரியாத செயல்களால்" என்று அர்த்தம் கற்பிக்கப்பட்டு, அந்த வாக்கியம் இராஜத் துவேஷமான தென்று வழக்கேற்பட்டது. ஆனால் அதற்கு ஹைகோர்ட்டார், பைத்தியமான என்பதற்குப் "பேதமை



யான" என்பதாக அர்த்தம் கொள்ளவேண்டு மென்றும், அவ்வாறு கொள்ளும்போது, "கவர்ன்மெண்டாரின் பேதமையான செயல்களால்" என்று அமைகிற வாக்கியம் இராஜ நிந்தனையாகா தென்றும் தீர்ப்புக் கூறினர்.

***

"ஒரு சிலர்" என்ற சொல்லைக் குறிப்பிட்டு ஒரு ஸமூகத்தில் நடக்கும் ஒழுங்கீனங்களைப்பற்றிப் பத்திரிகையி லாயினும் புஸ்தகங்களி லாயினும் எழுதி யிருந்தால், அது அந்த ஸமூக முழுதுக்கும் கூறிய சொல்லாக மாட்டாது. எந்த ஸமூகத்திலும் உத்தமர்களும் அதமர்களும் இருக்கக்கூடும். ஒழுங்கு தப்பியவர்கள் இல்லாமலே ஒரு ஸமூகம் ஸர்வ பரிசுத்தமாய் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. தீயதும் நல்லதும் எங்கு மிருக்கும். ஒரு ஸமூகத்தில் "ஒரு சிலர்" ஒழுங்கு தவறி நடக்கிறார்களென்றால், அந்த ஒரு சிலரான இரண்டொருவரை அது குறிக்குமே யன்றி ஸமூக முழுதுக்கும் கூறிய சொல்லாக மாட்டாது. "ஒரு சிலர்" என்ற பதத்தைப் பிரயோகிக்காமல் எழுதப்பட்டிருந்தால் அப்போது தான் அது அவதூறு வழக்காகும்.

---

# மந்திரவாதியால் ஏமாற்றம்

ஒரு மந்திரவாதி ஒரு ஸ்திரீயை முனி பிடித்திருக்கிறதெனக் கூறி மூன்று தினங்கள் மந்திரித்து வந்தார். முனி பிடித்த ஸ்திரீயும் தன் தலையை யாட்டி ஆடினாள். பிறகு அதற்குக் கழிப்பு கழிக்க வேண்டுமென்றும் அதற்காகப் பின் வரும் வஸ்துக்கள் தேவையென்றும் தெரிவித்தார்.

| | | அ. | பை | | அ. | பை | | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பலகாரம் | | 2 | 0 | சாம்பிராணி | 6 | 6 | எலுமிச்சம் | 1 | 9 |
| சாராயம் | | 4 | 0 | தட்சணை | 14 | [illegible] | நெய் | 1 | 6 |
| சாம்பிராணி | | 0 | 6 | புஷ்பம் | 1 | 0 | இளநீர் | 1 | 0 |
| தேங்காய் | | 5 | 0 | மஞ்சள் | 1 | 0 | வெற்றிலை | 0 | 3 |
| பழம் | | 2 | 6 | குங்குமம் | 0 | 3 | பாக்கு | 0 | 3 |
| குடம் | | 0 | 6 | ஊதுபத்தி | 0 | 3 | புகையிலை | 0 | 9 |
| வேஷ்டி | ரூ. 1 | 1 | 0 | காது ஓலை | 0 | 3 | சுருட்டு | 0 | 11 |
| கோழி | ரூ. 1 | 0 | 0 | அவல் | 1 | 0 | * * | * | * |

இன்னும் ஏனைய சில்லரைச் செலவுகளும் சேர்ந்து ஆறு ரூபாய் வரை ஆனது. இதன்றி மேல்செலவுகள் வேறே. இரவில் மயானத்திற்குச் சென்று அங்கு என்னென்னவோ செய்துவிட்டுத் திரும்பிவந்து, இனி முனியன் போய்விட்டது, ஒன்றும் சேஷ்டை ஏற்படாதென்றும் சொன்

ஞர். மறுதினம் தமது பிரயாசைக்குப் பத்து ரூபா தரவேண்டு மென்றும் சொல்லி அவ்விதமே பெற்றுக் கொண்டார். மந்திரவாதி விடைபெற்றுச் சென்ற ஒரு மணிக்குப் பிறகு மந்திரித்த பெண்ணுக்குப் பழயபடி மயக்கம் வந்துவிட்டது. ஒரு குணமும் காணேம். ஊர் சென்ற மந்திரவாதி மறு படியும் திரும்பிவந்து விஷயங்கள் அறிந்து முன்போலவே செலவிட்டு மந்திரித்தால் குணப்படும் என்ருர். அதற்குப் பெண்ணின் வீட்டார் ஒப்ப வில்லை. வீண் செலவானதைத் தவிர குணப்பட்டதாக எதும் தெரிய வில்லையாம். வழக்கம்போல் மயக்கம் வந்தவாறு உள்ளதாம்.

## II

மற்ருே ரிடத்தில் ஒரு பெண்ணுக்குக் காலையில் 4-மணிக்கு உண் டான மயக்கம் பகல் 3-மணி வரையும் தீரவேயில்லை. அதன் மேல் ஒரு மந்திரவாதி வந்து மந்திரிக்க மயக்கம் தீர்ந்து எழுந்தாள். மந்திரவாதி ஒன்பது நாள் மந்திரம் ஜெபிக்க வேண்டுமென்றும், கையில் ஒரு நூல் கட்டிப் பிறகு கழிப்பு கழித்துவிட்டால் குணப்பட்டு விடுமென்றும், ஒரு கோழியும் இன்னும் சொற்ப சாமான்களுமே தேவை யென்றும், இப்போது மந்திர ஜெபத்திற்காக ஐந்து ரூபாய் தரும்படியும் தெரிவித்தான். அவ்விதமே ரூபாய் பெற்றுச் சென்றவன் ஒரு கருப்புக் கயிறும் விபூதியும் தந்தனுப்பி அக்கயிற்றைக் கையில் கட்டிக் கொள்ளும்படி செய்தான். இதனிடையே அப்பெண் மாத விலக்காகி அந்த சமயமும் பெரிய மயக்கம் வந்து விட் டது. மந்திரவாதிக்குச் சொல்லி யனுப்ப, ஓ! தீட்டு, நான் வரமுடியா தென்று தெரிவித்து விட்டான். அவன் ஐந்து ரூபாய் பெற்றதற்கு ஒன்பது நாளும் ஜெபிப்பதற்குப் பதிலாக ரயில் யாத்திரை செய்வதானன். அவன் முன்பு தெரிவித்தபடி வெள்ளியில் தாயித்து ஒன்று செய்து வைத்துக் கொண்டு பலநாளும் அவனுக்காக எதிர் பார்த்தனர். ரூபாய் பெற்றதற்குப் பிறகு அவன் திரும்பி எட்டிப் பார்க்கவே யில்லை. இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஊருக்கு வந்து அடியிற் கண்டபடி சாமான்கள் ஜாபிதா ஒன்று அனுப்பி அந்த சாமான்கள் வந்ததும் அவற்றைக்கொண்டு மூன்று நாள் கும்பம் வைத் துப் பூஜைகள் நடத்திக் கழிப்பு கழித்து விடுவதாயும், பிறகு எல்லாம் குண மாகி விடுமென்றும் தெரிவித்தான். குணப்பட்ட பிறகு அவனுக்கு இனமாக வேறே கொடுக்க வேண்டுமென்றும் நிபந்தனை. சாமான்களின் ஜாபிதா விவரமாவது :—

(1) மஞ்சள் தூள் படி $\frac{1}{2}$. (2) வேப்பிலைத் தூள் படி $\frac{1}{2}$. (3) உமி கரி தூள் படி 1. (4) பச்சரிசி மாவு படி $\frac{1}{2}$. (5) சேவல் கோழி 1. (6) தேங்காய் 4. (7) இளநீர் 2. (8) சூடம் பலம் $\frac{1}{2}$. (9) சாம்பிராணி பலம் 2. (10) குங்கிலியம் அணு 1. (11) ஊதுபத்தி அணு 1. (12) விலாமிச்சம் வேர் அணு 2. (13) சந் தனத்தூள் படி $\frac{1}{4}$. (14) வெள்ளை வெங்காயத்தோல் படி 1. (15) மிளகு படி $\frac{1}{4}$. (16) சந்தனக் கட்டை பலம் 2. (17) அவல்-கடலை-பொறி அணு 2. (18) மூங்கில் துண்டு 108. (19) மட்டிப்பால் பலம் 1. (20) தசாங்கம் டப்பி 1. (21) சந்தனம் அணு $\frac{1}{2}$. (22) வாசனைத் திரவியம் அணு 4. (23) வெற்றிலைப்பாக்கு அணு $\frac{1}{2}$. (24) பழம் 16. (25) வெல்லம் அச்சு-6. (26) கொப்பரைத் தேங்காய் 3. (27) நெய் படி $\frac{1}{8}$. (28) தேங்காய் எண் ணெய் படி $\frac{1}{4}$. (29) தேன் அணு 2. (30) பால் படி அரை. (31) பூதாளிட்ட கந்தகம் இரண்டு ரூபாய் எடை. (32) கோடி மல்வேஷ்டி 3. (33) மண்



தோண்டி 1. (34) நவதானியம் அணு $\frac{1}{2}$. (35) நூல் கண்டு 1. (36) பானை 1. (37) சிகப்பு அல்வான் கஜம் $\frac{1}{2}$. (38) கவசம் 8. (39) இலை 6. (40) எலுமிச் சம் பழம் 8. (41) புஷ்பம் அணு $\frac{1}{2}$. (42) பச்சை நெல் படி 1. (43) அரிசி படி 1.

ஆக இவ்வளவு சாமான்களும் தேவை யென்றதில் இவைகளின் விலை மதிப்பு 20—ரூபாய்போல் ஆகக்கூடியதா யிருந்ததால், சிறிது குறைத்துத் தெரிவிக்கும்படி வேண்டினர். அதற்கு மந்திரவாதி அதுவே மிகவும் குறைத் துப் போடப்பட்டிருக்கிற தென்றும், இனியும் குறைக்கத் தன்னல் முடியா தென்றும், அப்படிக் குறைத்து மந்திர ஜெபம் செய்யத் தன்னல் சாத்தியப் படாதென்றும் தெரிவித்து விட்டான். இவ்வளவு செலவு செய்தாலும் குணப் படுவதென்பது நிச்சயமாகச் சொல்ல முடியாததால், முன்பு கொடுத்த ஐந்து ரூபாயுடன் இவ்விஷயம் முடிந்து விடட்டும் என்று மௌனமாயிருந்து விட் டனர். கொடுத்த ஐந்து ரூபாய்க்கு ஒரு குணமும் ஏற்படவில்லையாம். இவற் றிலிருந்து ஒன்றை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். மந்திரவாதியிடம் முதலில் பேசும்போதே அவனல் ஏற்படக் கூடிய செலவு இனங்களையும், இவ்விதமான ஜாப்தா வகைகளையும், அதற்குமேல் அவன் விரும்பும் தொகை யையும் எல்லாம் நெடுகக் கேட்டுக் கணக்கிட்டுப் பார்த்துக் கொண்டு, அப் பால் அவனைக் கொண்டு செய்யவோ, வேண்டா மென்று சொல்லவோ ஒரு முடிவுக்கு வருவதாயிருந்தால், அவனும் அதிக செலவுகளைத் தெரிவியான். மந்திரிக்க விரும்புவோரும் ஐந்து ரூபாய் தந்து வீணுக நஷ்டப் பட்டது போல் படாமல் விலகிக் கொள்ளலாம். இவ்விதமின்றி மந்திரவாதி கேட்கும் ஒவ்வொன்றுக்கும் இசைந்து கொண்டே போவதாகில், அவனும் இதன் மூலம் ஜீவிப்பவனே யாதலால், செலவினங்களைப் பெருக்கிக் கொண்டே சென்று ஒரு பெருந் தொகையைச் சிறுகச் சிறுக வசூலித்து விடுவான். ஆதலின் இவ்விஷயங்களில் அவசரப்படாமலும், மந்திரவாதிகளை மெச்சுகிற நடுப்பேர் வழிகளை நம்பாமலும் சாவதானமாக யோசித்துச் செய்வதே நன்ருகும்.

---

# பணச் செருக்கும் பிறவிக் குணமும்

“பணமென்ருல் பிணமும் வாயைத் திறக்கும்” என்பர். இது ஒரு பழமொழி. உலகத்திலே பணத்தினுடைய மஹிமையையும் பண வாசையினுடைய வல்லமையையும் காட்ட வேற்பட்ட [illegible] ஆனல் எதற்கும் விநியோகம் துர்விநியோகம் என [illegible] வழிகளுண்டு. விநியோக மென்பது நல் வழியி[illegible]ப்பது. பணம் பெரி தென்று தங்கத்தாலே செருப்புச் செய்துகொ[illegible]ல், அந்தச் செருப்பைக் காலில் போட்டுக்கொண்டு நடமாட வுத[illegible]து. தங்கச் செருப்பென்று அதைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்[illegible] போகிறவன், தனக்குள் அதை என்னதான் பெரிதாக மதிப்பினும் பார்ப்ப[illegible] அவன் செய்கை சிறிதும் மதிப்பாயிராது. செருப்பைச் சுமந்துகொ[illegible] போகிறவன் என்[illegible]

[illegible]

அவர்கள் இழிவாய் நினைப்பார்கள். ஆகவே பணச் செருக்கால் தலைதுள்ளிப் போகாமல் உலகப் பழிப்புக்கு அஞ்சி நடக்கவேண்டும்.

***

பிறவிக்குணம் பிறப்பளவேயா மென்பர். ஒருவன் எவ்வளவு படித்தவனு யிருந்தாலும், என்னதான் உத்தியோகம் செய்பவனு யிருந்தாலும் அவனது வெளிமினுக்கையும் காசையும் பணத்தையும் பார்த்துப் பெண்ணைக் கொடுத்துவிடக்கூடாது. ஏனெனில், "சுட்டாலும் சங்கு தன்நிற மாறாதது" போல, துன்பங்கள் வந்த விடத்தும் நற்குடிப் பிறப்பினாது நல்ல குணம் மாறாது. "கலக்கினும் தண்கடல் சேறாகாது" போல, பெரிய மனதுடைய வர்கள் என்ன மனக்கிலேசம் வரினும் இழிவுடையவராக நடந்துகொள்ள மாட்டார்கள். இழிதன்மைப் போக்குள்ளவர்களோ அவர்களுடைய இழி குணம் மாறாதவராகி அற்ப வாழ்வில் செய்த அழிபாதகங்களை யெல்லாம் பணத்தாற் பெருவாழ்வு பெற்றவிடத்தும் செய்து எல்லோரையும் நடுங்கப் பண்ணுவார்கள். பிறவிக் குணத்தின் சாயை எப்போதும் ஒருபக்கம் இருந்து கொண்டுதான் இருக்கும்.

S. நரசிம்மம்.

---

# ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி

பிரபஞ்ச அநுபவங்களும், இயற்கையின் உண்மைகளும் உலக அதிசயங்களும், ஆழ்ந்த கற்பனைகளும், ஆநந்த ஊற்றுகளும் அடுக்கடுக்காகத் ததும்பிய விஸ்தாரமான சரித்திரமாய் ***20***-அத்தியாயங்களுடன் அமைத்துள்ள

## அற்புதமான இனிய தமிழ் நாவல்

**ஹாப்டோன் படங்களுடன் ஜொலிப்பது.**

"பிரஜாநுகூலன்" பத்திராதிபர் – ஸ்ரீமான்

...துஜலு நாயுடு அவர்கள் இயற்றியது.

இதன் ...ாய் ஒன்றே. உடனே எழுதுங்கள்.

**தி. இரா... கோபால முதலியார்**

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ்

302, தங்கசாலை வீதி. மதராஸ்.

169822

எங்களிடத்தில் ருசிகரமான தமிழ் நாவல்களும், கதைப் புத்தகங்களும், வேதாந்த புஸ்தகங்களும், சைவ புராணங்களும் கிடைக்கும். தேவையுள்ளவர்கள் எழுதினால் நாங்கள் புஸ்தகங்களைப் பார்வையிட்டு நல்லதாக அனுப்புகிறோம்.

# எமது சொந்தப் பிரசுரங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி ... | 2 | 0 |
| அங்கயற்கண்ணி அல்லது அன்புள்ள மங்கை ... | 1 | 12 |
| திருக்கழுக் குன்றத்துக் கொலை ... | 1 | 8 |
| அமிர்தகுமாரி அல்லது செஞ்சிப் புதையல் ... | 1 | 4 |
| அம்பலவாணன் அல்லது கற்பகவனத்தில் நடந்த கடுங்கொலை | 1 | 0 |
| 1000 தலைவாங்கிய அதிசய சிந்தாமணி ... | 1 | 0 |
| மாணிக்கவல்லி அல்லது ஓர் மாதின் மர்மம் ... | 1 | 0 |
| இரத்தினங்கி அல்லது இரதிவிலாச மர்மம் ... | 1 | 0 |
| எமகாதகன் அல்லது மாயாசித்தன் ... | 0 | 8 |
| அண்டப்புளுகன் அல்லது ஆகாயப்புளுகன் ... | 0 | 5 |
| கண்ணைக் கட்டிக் காலங் கழிக்கும் மிஸ்டர் திண்ணைத் தூங்கி தடிராமன் ... | 0 | 6 |
| நவீன நவரத்ன ஒப்பாரி ... | 0 | 5 |
| மாமிகளின் துயரம் அல்லது மருமக்களின் கொண்டாட்டம் ... | 0 | 2 |
| காதலற்ற கலியாணம் அல்லது பெண்வீட்டாரைக் கொள்ளையடித்தல் ... | 0 | 1 |
| கணவனின் கடமை அல்லது பெண்களின் நிலைமை ... | 0 | 4 |
| தங்கசாலைத் தெரு தாசியின் இரகசியம் ... | 0 | 2 |

குறிப்பு:—இவை அனைத்தும் எமது சொந்த பிரசுரமானபடியினால் புஸ்தக வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். இன்னும் பலவிதமான சாமான்களும் ஏனைய புஸ்தகங்களும் எமது கம்பெனியில் கிடைக்கும். தேவையுள்ளவர்கள் எமது கம்பெனி காட்லாக்குக்கு எழுதினால் அனுப்பப்படும்.

**தி. இராஜகோபால முதலியார்,**

302, தங்கசாலை வீதி,

மின்ட் பில்டிங் போஸ்ட், மதராஸ்.

# தணிகை புராணம்.

திருத்தணிகை க்ஷேத்திர மான்மியம் என்னும்

## தணிகை புராண வசன நூல்.

இப்புத்தகம் தெளிவான வசன நடையில் ஐதீகப்படங்களுடன் எழுதி, அச்சிடப்பட்டிருக்கிறது. இதை ஒருமுறை வாசித்தாலே, நேரில் ஸ்தலத்தைக்காண்பதுபோல் விளங்கும். அனைவரும் வாசித்து இஷ்டசித்தி அடையும் வண்ணம், அடியிற்கண்ட குறைந்த விலையேற்படுத்திருக்கிறது. தணிகைபுராணம் விலை அணா 8. தணிகைமலையின் படம் தனிக்காப்பி அணா 2.

இதுவுமன்றி எங்களிடத்தில் ஸ்கூல்களுக்கு உபயோகமான பெரியஸயிஸ் டிராயிங் கலர் சித்திரப்படங்கள், விருக்ஷங்கள், பக்ஷிகள், மிருகங்கள் 24-படங்களடங்கிய செட்டு ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0

**ஏ. கே. செங்கல்வராய செட்டியார்,**

புஸ்தகடெப்போ, திருத்தணி.


---


நூதனமாகத் தருவிக்கப்பட்டது! குறைந்த விலை!!

உங்கள் வீட்டில் எந்தச் சமயங்களிலும் சேவிக்த இனிமையான
பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனிது நடைபெறும்
100-ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன்
(Gramaphone) போலவே பாட்க்கூடிய
சிறிய அளவில் செய்யப்பட்ட

**மினியேசர் கிராமபோன்**

ஜெர்மன் தேசத்தில் ஒரு தொழிற்சாலையில் மாத்திரம் தயாரிக்கப்பட்டது. லண்டன் நகர் வர்த்தகர்களுக்கும் குடும்பஸ்தர்க்கும் ஆயிரக்கணக்காய்ச் செலவிடப்பட்டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற்சாலையிலிருந்தே தருவிக்கப்பட்டது. பாட்டுகளைச் சப்திக்கும் இயந்திரங்களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அதிசயங்களுடனும் பாட்டுகள் பாடக்கூடியது. கிராமபோன் பெட்டி 1-ம், பல தினுசுபாடும் டபுல் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1-ம், செட் 1-க்கு விலை 8-8 தனி டபுல் சயிட் ரிகார்ட்டு (தட்டு) 1-க்கு ரூ 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அணா 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும். போஸ்டல் சார்ஜ் ரூ 1—6—0 6×6 சைஸ்



விலாசம்:— **வின்னர் வாட்சு கம்பெனி,**
தபால் பெட்டி நெ. 371, மவுண்ட் ரோட், (மதராஸ்.)

## ஒரு நூதன உயர்தரத் தமிழ் மாதப் பத்

"ஆநந்த குணபோதினி" எவ்வகைத் தொழிலுடையோர்க்கும் அதிக பலனைத் தரும். படிக்கப் படிக்க விஷய மறிவதன்றிப் பேரானந்தமும் வித்வத்வமும் பெருகும்.

"ஆநந்த குணபோதினி" ஸகலரும் அறியும்படி சுலப நடையில் எழுதப்படுகிறது. நமது நாட்டிற்கு நல முண்டுபண்ணும் விஷயங்களையே கொண்டிருக்கும்.

"ஆநந்த குணபோதினி" ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், யாவர்க்கும் பிரியமான விஷயங்கள் உள்ளதாய் அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது.

"ஆநந்த குணபோதினி"யின் முதல் பக்கத்தில் " ஆநந்த தரிசனம் " என்ற தலைப்பின்கீழ் எப்போதும் தத்துவஞான விஷயங்களும், ஈசுவரபக்தியைப்பற்றிய விஷயங்களும் நிறைந்திருக்கும். இவை யாவும் ஸர்வமத ஸமரஸம். தேன்போல் இனித்து, பால் போல் ருசிக்கும்.

"ஆநந்த குணபோதினி"யின் மூன்றும் பக்கத்தில் உயர்தர ஆங்கில மாத ஸஞ்சிகைகளை யொப்பத் தலையங்கம் உப அங்கங்களும் தோன்றி தேச நன்மையை நாடிய விஷயங்களும், ஆராய்ச்சிகளும் ததும்பி நிற்கும்.

"ஆநந்த குணபோதினி"யில் தடவைதோறும் "பழமொழிக் குறிப்புகள்" என்ற தலைப்பின்கீழ் பல பழமொழிகளின் ஆழ்ந்த கருத்துகளையும் உலக ரகசியங்களையும் விவரிக்கப்படும்.

"ஆநந்த குணபோதினி"யில் "பத்திரிகாசாரம்" என்ற தலைப்பில் எல்லாப் பத்திரிகைகளிலுமுள்ள சாரமான விஷயங்கள் காணப்படும்.

" ஆனந்த குணபோதினி " அ

"ஆநந்த குணபோதினி"யில் "பெண்கள் பக்கம்" எப்போதும் வெகு ஸ்வாரஸ்யமாய் இருக்கும்.

"ஆநந்த குணபோதினி"யில் "பிர பஞ்ச தரிசனம்" என்ற தலைப்பில், ஸர்வ தேச சம்பந்தமான ஆராய்ச்சிகளுடன் இந்தியாவையும் ஒப்பிட்டு அருமையான குறிப்புகள் எழுதப்படும்.

"ஆநந்த குணபோதினி"யில் ஒவ்வொரு தடவையும் "விகடப் பிரதாபன்" தோன்றுவான். மஹா விகடநூதன், விஜய விகடன் பத்திரிகைகளை யொப்ப விகடத் தலையங்கங்களும் ஹாஸ்யங்களும் தோன்றி சலித்துப்போன மனதையும் உல்லாஸப்படுத்திவிடும். எல்லாம் உலக அநுபவங்களே.

"ஆநந்த குணபோதினி"யில் பிரதி தடவையும் "சென்ற மாதம்" என்ற தலைப்பின் கீழ் மாதாந்த விசேஷங்களைக் குறித்து ரஸமான சிறு சிறு குறிப்புகள் வரையப்படும்.

"ஆநந்த குணபோதினி" பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்த தென்பதை பிறருடைய சிபாரிசின்றி ஒவ்வொருவரும் தங்களுடைய அநுபோகத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம்.

" ஆநந்த குண போதினி " யின் சொற்ப சந்தாவையும் உற்று நோக்குங்கள். வருஷ சந்தா ரூ. ஒன்றே.

"ஆநந்த குணபோதினி"ப் பத்திரிகைக்கு இணையாக வேறெந்த பத்திரிகையையும் சொல்ல முடியாது. உடனே சந்தாதாரராக சேர்ந்து ஆதரித்து ஆனந்த வசர்களாகும்படி

இன்றே தே

துக

... மயாபப உயர்தர

...மான விஷயங்களைக் குறித்து அநேக ... ஒவ்வொரு தடவையும் தோன்றும். குறித்த நேரத்தில் வெளி வருவது. தடவைதோறும் 48-பக்கங்களுக்கு மேற்கொண்டது.

... காலத்தை யொட்டிய கருத்துகள் ததும்புவது. "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய" அலங்கார வசன மழை. ஒவ்வொரு விஷயமும் வெகு ஆராய்ச்சியோடும் யோசித்து எழுதப்படுவது. படிப்பவர்களுக்கு நன்னடக்கையும், லௌகீக யுக்தியும், பாஷா ஞானம் சுதேச சிந்தனையும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையும் உண்டாகக்கூடிய விதமாய், உலகத்திலுள்ள ஸர்வ ஜனங்களும், பொதுவாய், ஸகல மதஸ்தர்களுக்கும் இன்பமாய் எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய், எப்போதும் நல்ல விஷயங்கள் இருக்கப்பெற்றதாய் சொல் நயம் பொருள் நயம் தோன்ற எழுதப்பட்டுத் தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும்படியாய் இருக்கும். எவர் கையிலும் இப்பத்திரிகையைக் காணலாம். எங்கும் இப் பத்திரிகையின் பெயர் வெகு பிரீதியோடும் சொல்லப்படும். எல்லோருக்கும் இன்பப் பொக்கிஷம் இது. உடனே எழுதுங்கள்.

---

# ஆநந்த குணபோதினியின்

## வருஷ சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளி நாடுகளுக்கு ரூபாய் 1–4–0. தனிப் பத்திரிகை அணா 2.

ஒருவருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை. எந்த மாதத்தில் சேர்ந்தாலும், பயிண்டு செய்வதற்குச் சௌகரியமாய் முதற் பத்திரிகையிலிருந்தே கணக்கிடப்பட்டு அப்பத்திரிகைகளையும் கூடச் சேர்த்து அனுப்பப்படும்.

## எச்சரிப்பு

ஒவ்வொரு மாதமும் பத்திரிகைகளை நம்பர் முறையாய்க் கணக்கிட்டு ஒத்துப் பார்த்து ஸர்வ ஜாக்கிரதையுடனும் தபாற்சாலைக்கு அனுப்புகிறோம். ஆதலின் குறித்த இடங்கட்குத் தவறாது சேருமென்பது நிச்சயம். இவ்விதமிருந்தும் நமது சந்தாதாரர்களிற் சிலர் தங்கட்குப் பத்திரிகை வரவில்லையென்று முறையிடுகின்றனர். அவ்வண்ணம் சேராமை ஆங்காங்குள்ள தபாற்சாலைகளின் தவறே யாதலின், வழக்கமாய் வரும் தினத்திற்குப் பி... கும் பத்திரிகை வராவிடில் தபாலாபீஸ் தலைமை அதிகாரிகளுக்கு எழுதிக் கொண்டு, தபாற் சேவகர்களையும் எச்சரிக்க வேண்டும். பத்திரிகை கிடைக்கப் பெறாதோர் பிரதி தமிழ் மாதமும் 7-ம் தேதிக்குள் தெரிவித்தாலன்றி அவர்களுக்குப் பதில் பத்திரிகை யனுப்பப்படமாட்டா. தபால் அதிகாரி... ...ங்கிய பதிலையும் எங்களுக்கு அனுப்புவது உத்தமம்.

...கோபால் முதலியார், புரோப்ரைட்டர்,
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

---

Published by